விலை : 20.00
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Sri Lanka
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், வீடுதிகள், ஹோட்டல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.




ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
ஜேபி. கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 வைகாசி 16 ஞாயிற்றுக்கிழமை (29.05.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 162

# இலங். தமிழர் தீர்வு பெற விரைந்து நடவடிக்கை எடுப்பேன்

## சந்திப்போமென விக்னேஸ்வரனுக்கு ஜெயலலிதா உறுதி



(சென்னை)

இலங்கைத் தமிழர் உரிய நீதியை - தீர்வைப் பெறும் வகையில் இந்திய அரசின் மூலம் விரைந்து நடவடிக்கை எடுப்பேன் என்று வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு அனுப்பி உள்ள நன்றிக் கடிதத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் வெற்றிபெற்ற முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு, வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் வாழ்த்துத் தெரிவித்துக் கடிதம் அனுப்பியிருந்தார்.

அந்த வாழ்த்துக் கடிதத்துக்கு நன்றி தெரிவித்து, தமிழ்நாடு முதல்வர் ஜெயலலிதா அனுப்பியுள்ள கடிதத்தில்,

அண்மையில் நடந்து முடிந்த தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்த

15 ஆம் பக்கம் பார்க்க....



## எனது நிகழ்ச்சிகளை முப்படையினரும் புறக்கணிப்பது அரசியல் முடிவு

### கிழக்கு முதலமைச்சர் குற்றச்சாட்டு



(திருகோணமலை)

கிழக்கு மாகாண முதல்வர் நசீர் அஹமட், தான் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளை முப்படைகளும் புறக்கணிப்பது என்பது முடிவு; தவறிழைத்த அதிகாரிகளைப் பாதுகாக்கும் குறுகிய நோக்குடன் எடுக்கப்பட்ட ஒரு அரசியல் முடிவு என்று கண்டனம் செய்திருக்கிறார்.

முதல்வர் நசீர் அஹமட் கடந்த மே 20-ம் தேதி வெள்ளிக்கிழமை சம்பூர் மஹா வித்யாலயா நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டபோது

15 ஆம் பக்கம் பார்க்க....

## இராணுவத்தை தடுக்க முதலமைச்சருக்கு அதிகாரம்

### லக்ஸ்மன் கிரியல்ல சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இராணுவத்தினரை எந்தவொரு பாடசாலைக்குள்ளும் நுழையாமல தடுக்கும் அதிகாரம் மாகாண சபையின் முதலமைச்சருக்கு உண்டு என்று உயர்கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல சுட்டிக்காட்டியுள்ளார்.

கிழக்கு மாகாண முதலமைச்சர் சம்பூரில் கடற்படை அதிகாரி ஒருவரின் அத்துமீறலை கடும் தொனியில் சுட்டிக்காட்டிய சம்பவம் தொடர்பில் பிரதமருடன் கருத்துப் பரிமாறிக் கொண்டபோது அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல இதனைத் தெரிவித்துள்ளார்.

15 ஆம் பக்கம் பார்க்க....

## முல்லைத்தீவு இளைஞன் பொலிஸாரால் சுட்டுக் கைது!

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்றைய தினம் மாலை வீட்டில் இருந்த இளைஞனை பொலிஸார் துப்பாக்கியால் சுட்டுக் கைது செய்துள்ளனர்.

ஆனால் காரணம் எதுவும் இன்றி தனது மகனை கைது செய்துள்ளதாக குறித்த இளைஞனின் தாயார் தெரிவித்துள்ளார்

முல்லைத்தீவு கேப்பாப்பிலவு பகுதியில் உள்ள மாதிரி கிராமம் ஒன்றில் வசிக்கும் விவேகானந்தன தீபீன் (வயது 27) என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

குறித்த நபர் மணல் கடத்தலில் ஈடுபட்ட போது பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்க

15 ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்த ராஜபக்ஷ ஜப்பான் பயணம்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, எதிர்வரும் ஜூன் 9-ம்

15 ஆம் பக்கம் பார்க்க....

## மீனவரை தாக்கக் கூடாது! இலங்கைக்கு இந்தியா கண்டிப்பு

(சென்னை)

தமிழ்நாட்டு மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்தக்கூடாது என்று இலங்கை அரசுக்கு இந்திய அறிவுறுத்தியுள்ளதாக, இந்திய பாதுகாப்பு அமைச்சர் மனோகர் பரிக்கர் தெரிவித்தார்.

சென்னையில் நேற்று பாஜக ஆட்சியின் இரண்டாண்டு சாதனை விளக்கக் கூட்டம் இடம்பெற்றது.

அதன் போது செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட இந்திய பாதுகாப்பு அமைச்சர் மனோகர் பரிக்கர், தமிழ்நாட்டு மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தக் கூடாது என்று இலங்கை அரசாங்கத்துக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனால், மீனவர்கள் மீதான தாக்குதல் சம்பவங்கள் குறைந்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.(12)

## தமது காணிகளையே தமிழர் கோருகின்றனர்

### ஜப்பானில் ஜனாதிபதி

(கொழும்பு)

தமது காணியை மற்றுமொருவர் கையகப்படுத்துவதை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. வடக்கிலுள்ள மக்கள் கடந்த 27 வருடங்களாக தமது காணிகளையே கோரி நிற்கின்றனர் என்று ஜனாதிபதி

15 ஆம் பக்கம் பார்க்க....



## தென்பகுதியில் மீண்டும் அனர்த்தம்; ஆறுகள் பெருக்கெடுப்பு; மண்சரிவு அபாயம்

(கொழும்பு)

நாட்டின் பல பாகங்களிலும் நேற்று சனிக்கிழமை மீண்டும் அடைமழை பெய்து வருவதை அடுத்து நீர் நிலைகளில் நீர் மட்டம் உயர்ந்து வருகின்றது.

தலைநகர் கொழும்பு உட்பட நாட்டின் சில பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. களனி கங்கை மற்றும் ஜின் கங்கை உட்பட சில நீர் நிலைகள் மற்றும் நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் அதிகரித்துள்ளது.

இதனை அண்மித்த பகுதிகளிலுள்ள குடியிருப்பாளர்களை அவதானமாக இருக்குமாறு இடர் முகாமைத்துவ மையத்தினால் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளன.

அதேவேளை மழையுடன் கூடிய காலநிலை காரணமாக நுவரெலியா, கண்டி, இரத்தினபுரி, கேகாலை மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களில் நிலச்சரிவு எச்சரிக்கை மேலும் நீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டிட ஆய்வு மையம் முன் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நிலச்சரிவு அறிகுறிகள் காணப்பட்டால் பாதுகாப்பான இடங்களை நாடுமாறு குடியிருப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக இடர் முகா

15 ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வாடகைக்கு

கந்தர்மடம் அரசடி வீதியில் சிறிய வீடு வாடகைக்குண்டு. யாழ்.பல்கலைக்கழகம், இந்து மகளிர் கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரி ஆகியவற்றுக்கு அருகில்.

**தொடர்பு :**
**0777 36 18 72**

(4780)


# ரயில்களில் சீட்டின்றி பயணித்தால் அறவிடும் அபராதம் அதிகரிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் முதலாம் திகதி முதல் ரயில்களில் பயணச் சீட்டின்றி பயணிப்பவர்களிடம் அறவிடப்படும் அபராதம் 3000 ரூபாயாக உயர்த்தப்படவுள்ளது.

அத்துடன்பயணச் சீட்டு பெறாமல் பயணிக்கும் நபரிடமிருந்து ரயில் பயணம் ஆரம்பித்த நிலையத்திலிருந்து பயணமுடிவிடம் வரை, அந்த நபர் பயணித்த வகுப்புக்கு அமைவாக அபராத தொகைக்கு மேலதிக மாக இரட்டிப்பு கட்டணமும் அறவிடப்படும் என ரயில்வே திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

பயணச்சீட்டின்றி ரயில்களில் பயணிப்பது அதிகரித்துள்ளமை, பயணச் சீட்டுக்குரிய வகுப்பில் பயணிக்காமை, பயண முடிவிடத்திற்கும் அப்பால் பயணிப்பது, சிறிய கட்டணத்துடன் நீண்டதூரம் பயணித்தல் உட்பட பயணச்சீட்டு தொடர்பிலான ஏனைய மோசடிகளுக்காக ரயில்வே திணைக்களத்துக்கு பெருந்தொகை இழப்பு ஏற்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எனவே இந்த இழப்பை ஈடுசெய்வதற்காகவும் ஒழுங்கான முறையில் ரயில் பயணங்களை மேற்கொள்ளும் பயணிகளுக்குஏற்படும்அசௌகரியங்களை தவிர்ப்பதற்காகவும் அபராத தொகையை 3 ஆயிரம் ரூபாயாக அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (12)


## Dutch, Deutsch, French

**தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து - Dutch (டச்) உட்பட அனைத்து புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றது.**

- French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
- வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழி கல்வி நிறுவனம் எங்களுடையதே.
- Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
- Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.

அனைத்து புதிய வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன

**Vivekananda Academy**
221/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
077 4842 464

(Gov. Reg: W/A 76795)

(C-4728)



## ஜீவகவாத ஒத்தட பத்து

முதுகுத்தண்டு,கழுத்து, கணுக்கால், முழங்கால், இடுப்பு மணிக்கட்டு, முழங்கை, தோள்பட்டை ஆகிய இடங்களிலும் கார்ட்டிலேஜ் எனப்படும் எலும்பு திசுக்கள் குறைதல், திசுக்கள் கடினமடைதல் அல்லது தேய்மானம் ஆகியன காரணமாக ஏற்படும் வலிகளுக்கு ஜீவகவாத ஒத்தட பத்து மருந்தை பயன்படுத்துவதன் மூலம் நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இதனைப் பயன்படுத்துவதன் மூலம் எலும்பு மூட்டுக்களில் திசுக்களின் வளர்ச்சி அதிகரிக்கும்.

**Manufactured by:**
Jeewaka Herbal Products (pvt) Ltd
Yakkala

சந்தைப்படுத்துவோர்
**சிவா நறுமணப் பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
(சத்திரச்சந்தி சிக்னல் லைற்றுக்கு அருகாமையில்)
தொ.பே - 021 - 222 2567

(C-4726)



## விற்பனையாகிறது!

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தயாராகும்
மாணவர்களுக்கு
முன்னணி ஆசிரியர்களின் ஆக்கத்தில்

**வெற்றிக்கு வழிகாட்டி**

தரம் 3 , தரம் 4 , தரம் 5
பகுதி 1 , பகுதி 2
24 மாதிரி வினாத்தாள்கள் விடையுடன்

தொடர்புகளுக்கு : யுனிலங்காஸ் பப்ளிக்கேஷன்
தொ.பே : 077 6258778

விலை : 240/-

(C-4732)



## கண்ணீர் அஞ்சலி



### அமரர் சின்னத்துரை சிவஞானம்

யாழ். கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் அவர்களின் அன்புத் தந்தை சின்னத்துரை சிவஞானம் அவர்களின் மறைவினால் ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், பாடசாலைச் சமூகம்,
அல்லைப்பிட்டி றோ.க.த.க வித்தியாலயம்

(C-4738)



## WORLD EDUCATION FAIR 2016

**Hilton Colombo** FREE ENTRY

**Saturday 4th June 2016**
**from 11.00 a.m - 5.00 p.m**



Meet representatives from top Universities from
**UK, USA, Australia, New Zealand, Canada, Germany, Malaysia, Singapore and Switzerland**

www.cduk.lk Register Now

**SCHOLARSHIPS, SPOT OFFERS AND FREE VISA GUIDANCE**

ORGANIZED BY
Campus Direct – Your Trusted Partner in Education
OEC – Overseas Education Centre (Pvt) Ltd

UNITED KINGDOM
Nottingham Trent University, University of Sunderland, University of Bolton, Bath Spa University, London South Bank University, University of Bedfordshire, Coventry University, Liverpool John Moores University

NEW ZEALAND
Ntec Tertiary Group New Zealand, IPU New Zealand

MEDICINE (SLMC APPROVED UNIVERSITIES)
MALAYSIA
Manipal – Melaka-Manipal Medical College
GRENADA
St. George's University – Study in Grenada and Work in USA

SEGI University & Colleges

AUSTRALIA
Deakin University, Southern Cross University, Strathfield College, Education Centre Australia, Cambridge International College

SINGAPORE
MDIS – Management Development Institute of Singapore, Amity

CANADA
Arbutus College

USA
Claremont, University of St. Thomas, Nebraska Lincoln

SWITZERLAND

GERMANY
International Academy of Students (IAS)

LOCAL INSTITUTIONS
Colombo Academy of Hospitality Management, SLIIT, Angliss

**Call us on:**
**077 824 6666**
**077 147 5555**
**077 588 6880**

CREDIT TRANSFERS FOR THE STUDENTS OF LOCAL INSTITUTIONS, ADVANCE ENTRY FOR STUDENTS WITH CIM, CIMA, ABE, NCC, BCS, HND, ACCA AND OTHER RECOGNISED QUALIFICATIONS PLEASE VISIT THE FAIR WITH YOUR ORIGINAL CERTIFICATES AND A SET OF PHOTOCOPIES.

IELTS Partner: British Council, IELTS
Print and Digital Media Partners: வீரகேசரி, விடிவெள்ளி, Creoz

(C-4735)



## 41ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

### அமரர் கந்தன் முருகையா

தோற்றம் :- 27.03.1944
மறைவு :- 20.04.2016



கடந்த 20.04.2016 புதன்கிழமை அன்று இறைபதமடைந்த எமது குலவிளக்கு அமரர் கந்தன் முருகையா அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 29.05.2016 ஞாயிற்றுக் கிழமை காலை 7 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 30.05.2016 நாளை திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறவிருக்கும் மதிய போசன நிகழ்விலும் கலந்தகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(4792)

இதனை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்

நிலாவரை வீதி
புன்னாலைக்கட்டுவன் வடக்கு

தகவல் :
குடும்பத்தினர்

# சம்பூர் சம்பவம் ஜி-7 மாநாட்டை இலக்கு வைத்து நடத்தப்பட்டதா?

## விசாரணை மேற்கொள்ளுமாறு முப்படைகளின் தளபதிகளுக்கு பிரதமர் உத்தரவு

(கொழும்பு)

**சம்பூரில் நடந்த சம்பவம், ஜி-7 மாநாட்டை இலக்கு வைத்து முன்னரே திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட ஒன்றா என்பது குறித்து விசாரணை செய்யுமாறு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முப்படைகளின் தளபதிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.**

நேற்று முன்தினம் அலரி மாளிகையில், முப்படைகளின் தளபதிகளை சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சம்பூர் விவகாரம் மற்றும், தற்போதைய பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக, ஆராய்வதற்காக இந்தக் கூட்டம் நடத்தப்பட்டது.

ஜி-7 நாடுகளின் தலைவரகளின் கூட்டத்துக்கு அழைக்கப்பட்ட இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தும் வகையில் இந்தச் சம்பவம் திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்டதா? என்று விசாரிக்கும் படியும், பிரதமர் கோரியுள்ளார்.



இந்தச் சம்பவம் தொடர்பான எல்லா அறிக்கைகளையும், கவனத்தில் கொண்டு, குறிப்பாக, இணையங்கள் மற்றும் சமூக வலைத் தளங்களில் வெளியான தகவல்களையும் உள்ளடக்கி அறிக்கையை தயாரிக்குமாறும், முப்படைகளின் தளபதிகளிடமும், பிரதமர் கேட்டுக் கொண்டுள்ளார்.

பல்வேறு தரப்பினரும் தமது சொந்த நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப இந்த விவகாரத்துக்கு தவறான அர்த்தம் கற்பிப்பதாகவும், அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-10)

### சர்ச்சைகளுக்கு மத்தியில்

# கிழக்கு கடற்படைத்தளபதி கொழும்புக்கு இடமாற்றம்

கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் அஹமட், கடற்படை அதிகாரி ஒருவரைத் திட்டிய விவகாரம் பெரும் சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் நிலையில், இலங்கை கடற்படையின் கிழக்குப் பிராந்தியத் தளபதியான றியர் அட்மிரல் நீல் ரொசாரியோ கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கிழக்குப் பிராந்தியக் கடற்படைத் தளபதியான றியர் அட்மிரல் நீல் ரொசாரியோ, ஏற்கனவே, இலங்கை கடற்படையின் பிரதித் தலைமை அதிகாரியாகவும், தொண்டர் படைத் தளபதியாகவும் பணியாற்றி வந்தார்.

அவர் தற்போது திருகோணமலையில் இருந்து இடமாற்றம் செய்யப்பட்டு, கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

தொடர்ந்து அவர், இலங்கை கடற்படையின் பிரதித் தலைமை அதிகாரியாகவும், தொண்டர் படைத் தளபதியாகவும் கடமையாற்றுவார்.

இதையடுத்து, கிழக்கு கடற்படைத் தளபதியாக, றியர் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையா நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை, றியர் அட்மிரல் நீல் ரொசாரியோவின் இடமாற்றம், கிழக்கு முதலமைச்சர் விவகாரத்துடன் தொடர்புடையதல்ல என்று, இலங்கை கடற்படைப் பேச்சாளர் கப்டன் அக்ரம் அலவி தெரிவித்துள்ளார்.

இந்த இடமாற்றம் மூன்று வாரங்களுக்கு முன்னரே தீர்மானிக்கப்பட்டு விட்ட ஒன்று எனவும் அவர் கூறியுள்ளார். (இ-10)

## சட்டவிரோத ஆயுதங்களை கையளிக்க மற்றுமொரு பொது மன்னிப்புக்காலம்

சட்டவிரோத ஆயுதங்களை கையளிக்கும் முகமாக மற்றுமொரு பொது மன்னிப்பு காலத்தை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பொது மன்னிப்புக் காலம் நாளை 30 ஆம் திகதியில் இருந்து ஜூன் 17 ஆம் திகதி வரையில் வழங்கப்பட இருப்பதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

சட்டவிரோத ஆயுதங்கள் வைத்திருப்பவர்கள் பொது மன்னிப்பு வழங்கப்பட்ட காலப்பகுதிக்குள் பொலிஸ் நிலையம், பிரதேச செயலாளர் அலுவலகம் மற்றும் மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் கையளிக்குமாறு பாதுகாப்பு அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது.

இதற்கு முன்னரும் ஏப்ரல் 25 முதல் மே 05 வரையில் பொது மன்னிப்பு காலம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பொது மக்களின் வேண்டுகோளுக்கு இணங்கவே இநத பொது மன்னிப்பு கால அவகாசம் வழ்ங்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது. (இ-10)

# ஜின்கங்கை பெருக்கெடுத்ததால் பல பிரதேசங்கள் நீரில் மூழ்கின

(கொழும்பு)

ஜின் கங்கை நேற்று பெருக்கெடுத்ததால் காலி மாவட்டத்தின் தாழ்வான பல பிரதேசங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

இதன் காரணமாக உடுகம - பத்தேகம மற்றும் உடுகம - நெலுவ பாதைகளின் போக்குவரத்து நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, தவலம பிரதேசத்தில் உள்ள பல வீடுகள் நீரில் மூழ்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



மேலும் தெற்கு அதிவேக பாதையில் வெலிப்பனை நுழையும் பாதையின் அருகில் உள்ள பிரதேசமும் நீரில் மூழ்கியுள்ளது.

தொடர்ந்து மழை பெய்தால் வெலிப்பனை நுழையும் பாதையை மூடவேண்டிய நிலை ஏற்படும் என வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. இதனோடு அதிவேக பாதையில் வாகனங்களை ஓட்டும் சாரதிகள் வாகனத்தை கட்டுப்படுத்தக் கூடிய வேகத்தில் செலுத்துமாறு அந்த சபை கோரியுள்ளது. (இ-10)

# தென்கொரியாவுக்கு பிரதமர் ரணில் விஜயம்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கஉள்ளிட்டகுழுவினர்நேற்று தென்கொரியாவை சென்றடைந்துள்ளனர்.

தென் கொரியாவில் இடம்பெறவுள்ள 107ஆவது சர்வதேச றோட்டறி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அங்கு சென்றுள்ளார்.

தென்கொரியாவின் வெளிவிவகார பிரதியமைச்சர் சொய் ஜொங்மூன் (Choi Jongmoon) மற்றும் அங்கிருக்கும் இலங்கை தூதுவர் மனிஷா குணசேகர ஆகியோர் பிரதமரை வரவேற்றுள்ளனர்.



நேற்று அதிகாலை 1.15 மணியளவில் பிரதமர் இலங்கையில் இருந்து புறப்பட்டுச் சென்றுள்ளார்.

இன்று 29ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 01ஆம் திகதி வரை தென்கொரியாவின் சோல் நகரில் இடம்பெற உள்ள இம் மாநாட்டில் மேலும் பல நாடுகளின் அரச தலைவர்களும் கலந்து கொளளவுள்ளதுடன் ஐக்கிய நாடுகள் சபையின் பொது செயலாளர் பான் கீ மூனும் கலநதுகொள்ளவுள்ளார். (இ-10)

## கொழும்பு - பதுளை அஞ்சல் புகையிரத சேவை வழமைக்கு திரும்பியது

இலங்கையில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக இரத்துச் செய்யப்பட்டிருந்த கொழும்பு - பதுளைக்கு இடையிலான அஞ்சல் புகையிரத சேவை வழமைக்கு திரும்பியுள்ளதாக புகையிரத கட்டுப்பாட்டு சபை தெரிவித்துள்ளது.

மேல் கோட்டே மற்றும் பலன புகையிரத நிலையங்களுக்கு இடையிலான புகையிரத வீதியில் ஏற்பட்டிருந்த மண் சரிவினால் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த புகையிரத சேவை நேற்று முன்தினம் முதல் வழமைக்கு திரும்பியுள்ளதாக புகையிரத கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது. (இ-10)

## வெள்ளத்தால் கைக்குழந்தையுடன் நடுவீதிக்கு வந்த குடும்பம்

### மனதை உருக்கும் சம்பவம்

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக பலர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், கைக்குழந்தையுடன் குடும்பமொன்று பாதையில் வாழும் மனதை உருக்கும் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

சேதவத்தை - களுபாலததிற்கு அருகில் வீடொன்றில் வாழ்ந்து வந்த பெண் ஒருவர் தனது நான்கு பிள்ளைகளுடன் பாதையில் வசித்து வருகின்றார்.

இவர்கள் வாழ்ந்து வந்த பகுதி நீரில் மூழ்கியுள்ளதால் இந்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.


தனது 4 ஆவது குழந்தையை பிரசவிப்பதற்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அந்த பெண், வீடு திரும்பும் போது அது வெள்ளத்தில் மூழ்கியுள்ளதையே கண்டுள்ளார்.

இவர்கள் தற்போது கொழும்பு கறுவாத்தோட்டம் பகுதியில் உள்ள வீதியில் வசித்து வருகின்றனர்.

குறித்த பெண்ணின் கணவர், அறுவை சிகிச்சை காரணமாக தற்போது வைத்தியசாலையில் உள்ளதாக தெரியவந்துள்ளது. பாதையில் செல்லும் சிலர் வழங்கும் உணவு பொருட்களை கொண்டு பசியாற்றி வருகின்றனர். (இ-10)

# மரண அறிவித்தல்கள்

**M.A.பஞ்சநாதன்** JP (ஓய்வுநிலை பிரதம பாதுகாப்பு பரீட்சகர், மக்கள்வங்கி, பிரதேச தலைமை அலுவலகம் யாழ்ப்பாணம், தலைவர், சிவில் பாதுகாப்புக்குழு J/80, சமாதான நீதவான்)



யாழ் நகரினை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட M.A.பஞ்சநாதன் 28.05.2016 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆனந்தமணி - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கிருஷ்ணசாமி - தையல்நாயகி தம்பதிகளின் அன்பு மருமகனும், பத்மசுலோசனாவின் அன்புக் கணவரும் ஷாமினி (லண்டன்), சுதர்ஷன் (ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி), கிருஷாந்தி (உதவி விரிவுரையாளர், கொழும்பு பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரவீந்திரன் (வினோதன்) (லண்டன்), சிவசுதர்சினி, கஜேந்திரன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், தனஞ்செயன் (லண்டன்), சஞ்சயன் (லண்டன்), வாகினி (லண்டன்), ஸஸாஸ்கி (யா/இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (29.05.2016) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று புகழுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு பி.ப 2.00 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

69B மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோவில் சன்மார்க்க ம.வி முன்பாக)
021 222 2560 / 077 314 4527

(4800)

தகவல் :
P.N.சுதர்ஷன்
(மகன்)

## அமரர் சுந்தரராஜா யோகம்மா



அரியாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுந்தரராஜா யோகம்மா கடந்த 27.05.2016 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - கனகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பார்வதி - வைத்திலிங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுந்தரராஜாவின் பாசமிகு மனைவியும், றுஜிதா, பாஸ்கர் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், உதயகுமார், யசோதா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான குணவதி, திலகவதி, கணேசலிங்கம், ராசலிங்கம் மற்றும் மேகனாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், விஜயரட்ணம் மற்றும் கமலா, நீலாம்பிகை, ஜானகி ஆகியோரின் மைத்துனியும், தர்ஷன் (பிரான்ஸ்), நிரோஜா, சஜீவ், சிந்துஜா, அபினாஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.05.2016 நாளை திங்கட்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.443, கண்டி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

(4799)

தகவல் : குடும்பத்தினர்
077 761 6227

# 38 பில். யென் கடன் வழங்குகிறது ஜப்பான்

(கொழும்பு)

இலங்கைக்கு 38 பில்லியன் யென் அதிகாரபூர்வ அபிவிருத்தி உதவிக் கடனை வழங்குவதற்கு ஜப்பான் இணக்கம் தெரிவித்துள்ளது.

ஜப்பான் சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேவுக்கும் ஜப்பானியப் பிரதமர் சின்ஷோ அபேக்கும் இடையில் நடநத இருதரப்புப் பேச்சுக்களின் போதே இதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. நகோயா நகரில் நேற்று இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது, இலங்கைக்கான அபிவிருத்தி உதவிகளை வழங்கவும் நல்லிணக்க முயற்சிகளுக்கான உதவிகளை வழங்கவும் ஜப்பானியப் பிரதமர் உறுதியளித்துள்ளார்.

அத்துடன், கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்திக் கொள்வதற்கும் இரண்டு நாடுகளின் தலைவர்களும் இணக்கம் கண்டுள்ளனர். (12)


கறையான் தொல்லையா?



உங்கள் கட்டடங்களை உத்தரவாதத்துடன் பாதுகாத்துக் கொடுக்க நாங்கள் இருக்கின்றோம்.
ஆலோசனையும் மதிப்பீடும் இலவசமாக வழங்கப்படும்.
(4802)
தொடர்புகளுக்கு: ந.ரூபகாந்த்
077 151 5897, 021 499 3200

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


# கண்ணீர் அஞ்சலி





## அமரர் சின்னத்துரை சிவஞானம்


யாழ். கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சிறிதரன் அவர்களின் அன்புத் தந்தை சின்னத்துரை சிவஞானம் அவர்களுக்கு எமது கண்ணீர்க் காணிக்கையை செலுத்தி அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மஞ்சத்தடி முருகப்பெருமானை வேண்டுகின்றோம்.

மஞ்சத்தடி, இனுவில்.

இணுவையூர் V.K.குகானந்தன்
தலைவர்
ரசிகப்பிரியா சபா கலைவளர்ச்சி மையம்

(C-4739)

## 29.05.1987ல் இடம்பெற்ற இராணுவத் தாக்குதலின்போது உயிர்நீத்த எமது நிலையத்தைச் சார்ந்தவர்களுக்கான நினைவஞ்சலிப் பாக்கள் :



எங்களின் உறவினர் எங்கே - என்றும்
ஏங்குது ஊரே இங்கே
பொங்குது கண்ணீர் வெள்ளம் - எண்ணிப்
புலம்புது நாளும் உள்ளம்

சீரார் மார்க்கண் டோடிங்கே - நற்
திறனான் ஆழ்வாப்பிள்ளையுமே
பேரார் சிவரா சாவுடனே - அன்று
பெட்பார் நகுலேஸ்வரன் மறைந்தார்

வாலிபன் கிருஸ்ணகுமாருடனே - பிறர்
மதிக்கும் சாந்தலிங்கமுமே
காளையாம் ஜெயதரனு மன்று - எமை
கலங்க வைத்தே மறைந்தாரே

பேரார் விஜய லட்சுமியும் - பிறர்
பேணும் செல்லம்மா அம்பிகா
நேரார் அன்னம்மாவுடனே - எம்
நெஞ்சார் யோகேஸ்வரி மறைந்தார்



கோகுலரூபன் சுபாகரன் - என்றும்
குலவிடும் சுதனும் ருக்மனுமே
பாகுசேர் தர்மேந்திரா மைதிலி - நல்
மழலைக் குமுதா மறைந்தாரே

இன்றவர் இல்லை இரங்கினமே - அன்று
ஈனரின் செயலால் இறந்தனரே
என்றுமே வாழ்வில் நினைத்திடுவோம் - நாம்
இன்று அஞ்சலி செலுத்திடுவோம்

ஈரவிழிகளுடன், 29 ஆண்டுகள்
அல்வாய் மனோகரா மக்கள்

(4798)



# துயர் பகிர்கின்றோம்

## அமரர் சின்னத்துரை சிவஞானம்

எமது மாவட்ட கௌரவ பாராளுமன்ற உறுப்பினரும் இரணைமடு திருவருள்மிகு கனகாம்பிகை அம்பாள் ஆலய வளர்ச்சியில் அதிக அக்கறையும் பற்றுதலும் கொண்டவருமான **சிவஞானம் சிறிதரன்** அவர்களின் அன்புத் தந்தை **சின்னத்துரை சிவஞானம்** அவர்கள் இயற்கை எய்திய செய்தி கேட்டு கண்ணீர் பூக்களை காணிக்கையாக்கி அன்னையின் திருவடித் தாமரைகளில் இவரின் ஆன்மா சாந்தியடைய கனகாம்பிகை அம்பாளை பிரார்த்திக்கின்றோம்.

**அறங்காவலர் சபை, இரணைமடு திருவருள்மிகு**
**கனகாம்பிகை அம்பாள் பெருங்கோயில் , கிளிநொச்சி.** (4797)



## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் முக்கிய அறிவித்தல்

1. நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலின் பெயரால் சில ஏமாற்றுப் பேர்வழிகள் நிதி சேகரிப்பதும் போலிப் பற்றுச்சீட்டும் விபூதியும் வழங்கி வருவதும் அறிய வந்துள்ளது. நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலுக்கு நிதி சேகரிப்பதற்கென தனிப்பட்ட எவருமோ தனிப்பட்ட அமைப்புக்களோ அனுமதிக்கப்படவும் இல்லை, நியமிக்கப்படவும் இல்லை. எனவே நிதி வழங்க விரும்பும் அடியார்கள் நேரடியாக கோவில் அலுவலகத்தில் வழங்குதல் வேண்டும். அல்லது பின்வரும் வங்கிக் கணக்குகளில் "ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு" என்ற பெயருக்கு வைப்புச் செய்துவிட்டு எமக்கு வங்கிப் பற்றுச்சீட்டினை அனுப்பி வைக்க வேண்டும். அத்துடன் எதற்கான நிதிப்பங்களிப்பு என்பதையும் சரியான முகவரியையும் எமக்கு தெரியப்படுத்த வேண்டும்.

வங்கிக் கணக்குவிபரம்

- க/கு இல. 0124262801 வர்த்தக வங்கி- பெற்றா, கொழும்பு
- க/கு இல. 1060012330 வர்த்தக வங்கி-வேலணை
- க/கு இல. 007687860 இலங்கை வங்கி- வேலணை

2. நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயிலுக்கெனத் தெரிவித்து சிலர் கட்டடப் பொருட்களை கடனாகக் கொள்வனவு செய்வதாகவும் அறிய வந்துள்ளது. பகிரங்க கேள்வி கோரப்பட்டு கேள்விதாரர் மூலமே கோவிலுக்குத் தேவையான கட்டடப் பொருட்கள் கொள்வனவு செய்யப்படுகிறது. கோவிலின் பெயரால் எவரும் கட்டடப்பொருள் கொள்வனவு செய்வதற்கு அனுமதிக்கப்படவில்லை.

3. நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலின் கடிதத் தலைப்பை (Letter Head)-ஒத்த கடிதத் தலைப்பை பாவித்து சிலர் நிதி சேகரிப்பதாகவும் தகவல் கிடைத்துள்ளது.

எனவே நாகபூஷணி அம்பாள் அடியார்கள் ஏமாற்றுக்காரர்களுக்கு இடமளித்தல் ஆகாது என்பதையும் ஏமாற்றுக்காரர்களை இனம் கண்டதும் எம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன். இவ்விடயம் நாட்டின் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**அன்னையின் பணியில்**
**பொ.அன்பரசன்**
**செயலாளர் (077 045 5388)**
**அறங்காவலர் சபை**
**ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில்,**
**நயினாதீவு**

**கோவில் அலுவலக தொலைபேசி இல.**
**021 321 3024**
**021 320 7785** (சி-4736)

## மக்கள் வங்கி அறிவித்தல்

பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 30.04.2015 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் 25.06.2016, 26.06.2016 ஆகிய திகதிகளில் காலை 8.30 மணி தொடக்கம் கீழ்க்குறிப்பிட்ட இடங்களில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் | நகை மீளெடுப்பதற்கான இறுதித் திகதி | திகதி | ஏலம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| காங்கேசன்துறை | மல்லாகம் | 24.06.2016 | 25.06.2016 | யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளை |
| யாழ்.கன்னாதிட்டி | இணுவில் | | | |
| அச்சுவேலி | புத்தூர் | | | |
| சங்கானை | பண்டத்தரிப்பு | | | |
| யாழ்.பல்கலைக்கழகம் | திருநெல்வேலி | | | |
| | கல்வியங்காடு | | | |
| பருத்தித்துறை | புலோலி | | | |
| ஊர்காவற்றுறை | - | 24.06.2016 | 26.06.2016 | |
| சுன்னாகம் | கோப்பாய் | | | |
| | அளவெட்டி | | | |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி | | | |
| யாழ்.ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி | | | |
| | மானிப்பாய் | | | |
| நெல்லியடி | - | | | |
| சாவகச்சேரி | கொடிகாமம் | | | |
| | கைதடி | | | |
| யாழ்.பிரதான வீதி | உரும்பிராய் | | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப்போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிராந்திய தலைமையகம்,
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல. 021 222 2601/ 021 222 8602
தொலைநகல்: 021 222 2602

(சி-4729)

## இராசி பலன்

29.05.2016
(வைகாசி 16, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு
அட்டமி பின்னிரவு 1.16 மணிவரை
சதயம் பின்னிரவு 12.06 மணிவரை
சுபநேரம் 8.52-10.22 மணிவரை
இராகுகாலம் 4.22-5.52 மணிவரை

| | | | |
|---|---|---|---|
| | புத | சூரி சுக் | |
| சந், கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் ஆயிலியம், மகம் | | |
| | | | குரு ராகு |
| | சனி செவ் | | |

**மேடம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**இடபம்:** அரசு வழிச் சலுகைகள் எதிர்பார்த்தபடியே வந்து சேரும், வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும், தொலைபேசி வழியில் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்:** தொழிலில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும், உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பர், மனித தெய்வ வழிபாடு மகத்துவம் தரும், புதிய முயற்சிகள் கைகூடும்.

**கடகம்:** உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்து செல்வது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள்.

**சிம்மம்:** சொந்த பந்தங்களின் ஒத்துழைப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், தொலைபேசித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**கன்னி:** கூட்டு முயற்சிகள் கைகூடும், உடல் நலம் சீராகி உற்சாகம் பிறக்கும், எதிரிகள் உதிரியாகும் நாள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.

**துலாம்:** எதிர்பார்ப்புகள் நிறைவேறலாம், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகி மனநிம்மதியைக் கொடுக்கும், பிள்ளைகளின் கல்வி நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், இல்லத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறியுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**தனுசு:** மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், உடன் பிறப்புக்கள் அனுசரணையாக நடந்து கொள்வர், பொருளாதார நிலை உயரும், முயற்சிகள் கைகூடும்.

**மகரம்:** நண்பர்களின்மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், காணாமற்போன பொருளொன்று மீண்டும் கிடைக்கலாம், விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**கும்பம்:** ஆரோக்கியம் சீராக மாற்று மருத்துவத்தை மேற்கொள்வீர்கள், சுப செலவுகள் ஏற்படலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள்.

**மீனம்:** உறவினர் சிலரின் அன்புக் கட்டளைக்கு ஆட்பட நேரிடலாம், முன்னோர் வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் தேக நலன் பாதிக்கப்படலாம்.

**வளவன்**

# வீரசிங்கம் நினைவாக அஞ்சல் தலை வெளியீடு








கூட்டுறவு இயக்கத்தின் முன்னோடி அமரர் விஸ்வலிங்கம் வீரசிங்கம் அவர்களின் ஞாபகார்த்த அஞ்சல் தலை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இலங்கை தபால் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. இதற்கான வெளியீட்டு விழா வடமாகாண கூட்டுறவு அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.இந் நிகழ்ச்சியில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பிரதி அஞ்சல் அதிபர் ந.இரட்னசிங்கத்திடம் இருந்து முதல்நாள் அஞ்சல் உறையை முதலாவதாகப் பெற்றுக் கொண்டார். நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, வடமாகாண சபை அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம்,மாகாணசபை உறுப்பினர்கள் பா.கஜதீபன், திருமதி அனந்தி சசிதரன், வே.சிவயோகன், க.தர்மலிங்கம், க.சிவாஜிலிங்கம், சு.பசுபதிப்பிள்ளை, பிரதம செயலாளர் அ.பத்திநாதன், விவசாய அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மதுமதி வசந்தகுமார் ஆகியோருடன் மண்டபம் நிறைந்த அளவுக்குக் கூட்டுறவாளர்களும் கலந்துகொண்டிருந்தார்கள்.அஞ்சல் தலையில் பொறிக்கப்பட்டுள்ள வீரசிங்கத்தின் ஓவியம் தலைசிறந்த ஓவியர்களில் ஒருவரான ஆசை இராசையாவால் வரையப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. (படங்கள்:-கு.கஜதீபன்)

# சுயநலவாதிகளை மக்கள் நினைவுகூருவதில்லை

## வடமாகாண முதலமைச்சர் சுட்டிக்காட்டு



**(யாழ்ப்பாணம்)**

**தமது சுயநலன்கள் மீதும் தாம் சார்ந்த குடும்பத்தின் மீதும் மட்டுமே அக்கறை கொண்டவர்கள் உலக மக்களால் நினைவு கூரப்படுவதில்லை என வடமாகாண சபை மாகா சபை முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

கூட்டுறவு இயக்கத்தின் தந்தை அமரர் விஸ்வலிங்கம் வீரசிங்கத்தின் ஞாபகார்த்த அஞ்சல்தலை வெளியீடு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் இடம் பெற்றது.

இதில் கலந்துகொண்டு பிரதம விருந்தினர் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலகில் வாழ்ந்த மக்களில் பெரும் பகுதியினர் தமது சுயநலன்கள் மீதும் தாம் சார்ந்த குடும்பத்தின் நலன் மீதும் மட்டுமே அக்கறை கொண்டவர்களாகத் தமது காலத்தைக் கழித்து வந்து ஈற்றில் மறைந்துள்ளனர். இவர்கள் ஏனைய மக்களைப் பற்றியோ, சமூகத்தைப் பற்றியோ சிந்தித்தவர்கள் அல்லர். இது உலக நியதி என்று கூடக் கூறலாம். இவ்வாறானவர்கள் மறைந்த பின்னர் அவர்களின் குடும்பத்தினர், உறவினர்கள் மட்டுமே அவர்களைப் பற்றி நினைவுகூருகின்றனர்.

ஆனால் இதற்கு முற்றிலும் விதிவிலக்காக சில பேரறிஞர்களும் பெரியார்களும் தமது முதிர்ந்த அறிவையும் எல்லை கடந்த ஆற்றலையும் மனித சமுதாயத்தின் மேம்பாட்டிற்காக பூரணமாக அர்ப்பணித்து "மக்கள் சேவையே மகேசன் சேவை" என வாழ்ந்து பல மட்டற்ற தியாகங்களினூடாக மனித சமுதாயத்தை வளப்படுத்தியுள்ளார்கள். இப் பேரறிஞர்களை அவர்களின் இறப்பிற்குப் பின்னரும் மக்கள் "தந்தை" என்றும் "அன்னை" என்றும் "அண்ணன்" என்றும் "அக்கா" என்றும் "உலகத்தை இரட்சிக்க வந்தவர்" என்றும் "உலக முன்னோடிகள்" என்றும் வாயாரப் புகழ்ந்து அவர்களின் அளப்பரிய சேவைகளையும் தியாகங்களையும் மறக்காமல் ஒவ்வொரு ஆண்டிலும் நினைவுகூர்ந்து வருகின்றனர்.

யாழ். மக்களுள் பிறந்து மக்களோடு மக்களாக வாழ்ந்து அவர்களின் கலங்கரை விளக்காக திகழ்ந்தது மட்டுமல்லாமல் ஒரு சிறந்த கல்லூரி அதிபராக, பாராளுமன்ற உறுப்பினராக, சிறந்த கூட்டுறவாளனாக,இப்பகுதி மக்களுக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாக வாழ்ந்து இறைவனடி சேர்ந்த கூட்டுறவுப் பெரியார் அமரர் விஸ்வலிங்கம் வீரசிங்கம் அவர்களை நினைவுகூரும்முகமாக இன்று ஒரு புதிய அஞ்சல் தலை அஞ்சல் திணைக்களத்தினால் வெளியீடு செய்யப்படுகின்றது.

அதுவும் அவர் ஞாபகார்த்தமாக விளங்கும் இந்த வீரசிங்கம் மண்டபத்தில் வெளியிடப்படுவது சாலச் சிறந்ததே.

அமரர் வீரசிங்கம் அவர்களை நினைவுகூரும் முகமாக அஞ்சல் தலையொன்றை அவரின் 50 ஆவது ஆண்டு நினைவுதினக் கூட்டம் இதே மண்டபத்தில் 05. 12.2014இல் இடம்பெற்ற போது வெளியிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் பல்வேறு காரணங்களால் தடங்கல்கள் ஏற்பட்டு இறுதியில் அவரின் ஞாபகார்த்த முத்திரை இன்று வெளியிடப்படுகின்றது.

பெரியார் விஸ்வலிங்கம் வீரசிங்கம் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக கூட்டுறவாளர்களும் கல்விமான்களும் ஒன்றாக இணைந்து கொண்டு மேற் கொண்ட முயற்சிகளின் விளைவாக இன்று இம் முத்திரை வெளியீடு நடைபெறுகின்றது.

எத்தகையான நெருக்கடி நிலையிலும் கூட்டுறவுச் சபையின் சேவையும் கூட்டுறவுச் சங்கங்களின் நடவடிக்கைகளும் எவ்வித தடங்கலும் இன்றி தொடர வேண்டும். அப்பொழுது தான் மக்கள் தமது நுகர்வுப் பொருட்களையும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களையும் தடங்கல் இன்றிப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதில் அவர் குறியாகவிருந்தார்.

பெரியார் வீரசிங்கம் இலங்கையில் கூட்டுறவு இயக்கத்தை உருவாக்குவதற்கும் வெற்றி பெறச் செய்வதற்கும் மேற்கொண்ட அளப்பரிய தியாகங்களையும் அர்ப்பணிப்புக்களையும் இன்றைய எமது கூட்டுறவாளர்கள் மனதில் இருத்தி தூய சிந்தனையுடன் செயற்படும் போது ஒவ்வொரு கூட்டுறவு இயக்கமும் வெற்றி பெறும் என்பது நிச்சயம்.

மானிப்பாய் வீரசிங்கத்தின் கனவு, தெல்லிப்பழை சிவமகாராசாவின் தொடர் கனவு ஆகியன எவ்வாறு கூட்டுறவுத் துறையை வளர்ச்சியும் உயர்ச்சியும் பெறச் செய்தனவோ அதே அளவு வளர்ச்சியையும் உயர்ச்சியையும் சதா காலமும் கூட்டுறவுச் சிந்தனையில் மூழ்கி இருக்கும் எமது கூட்டுறவு அமைச்சர் ஐங்கரநேசனின் வழிநடத்தலின் கீழ் அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களும் மீண்டும் வளர்ச்சியடைய வேண்டும்.

அவ்வாறு அவை வளர்ச்சியடைகின்ற போது மக்கள் வளம் பெறுவார்கள்.

இன்றைய இந்த நிகழ்விற்கு கொழும்பில் இருந்து வந்திருக்கும் அஞ்சல் அதிபர் நாயகம் அவர்களுக்கு அடுத்து எனது வாழ்த்துக்களைத் தெரிவித்து வட பகுதியில் அஞ்சல் சேவையின் வளர்ச்சி குறிப்பிட்ட அளவிற்கு முன்னேற எமது அஞ்சல் திணைக்களத்திற்குத் தேவையான கட்டடங்கள், ஆளணிகள் என்பவற்றைத் தாமதமில்லாமல் வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# வலி.வடக்கிலுள்ள ஆலயங்களின் மீள் புனரமைப்புக்கு குழு தெரிவு

வலிகாமம் வடக்கிலுள்ள இந்து ஆலயங்களின் மீள் புனருத்தாரணம் தொடர்பான கூட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தெல்லிப்பழை லயன்ஸ் கழக மண்டபத்தில் தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளர் பா.ஜெயகரன் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது ஆலயங்களைப் புனருத்தாரணம் செய்வதற்காக குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தின் வழிகாட்டலில் அகில இலங்கை சைவமகா சபையின் அனுசரணையில் நடைபெற்ற இந்த அங்குரார்ப்பணக் கூட்டத்தில் வலிகாமம் வடக்கில் கடந்தகால போர்ச் சூழல் காரணமாகச் சேதமடைந்த ஆலயங்களின் சேதவிபரங்கள் தொடர்பில் தகவல் திரட்டி அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டதுடன் ஆலயங்களைப் பதிவு செய்தல் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன் மீளக் குடியமர்த்தப்பட்ட பிரதேசங்களில் கல்வி,கலை,கலாசாரம், ஆன்மீகம் போன்றவற்றை முன்னேற்ற மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் தொடர்பிலும்,பொதுமக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள் மற்றும் மீள் குடியேற்றப்பட்ட பிரதேசங்களில் அறநெறிக் கல்விக்குக் கொடுக்க வேண்டிய முக்கியத்துவம் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

தொடர்ந்து நிர்வாகத் தெரிவின்போது, மாவை. சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையின் செயலாளரும் வலி. வடக்குச் செஞ்சிலுவைச் சங்கத்தின் செயலாளருமான சி.நாகேஸ்வரன் தலைவராக தெரிவுசெய்யப்பட்டார்.

வலிகாமம் கல்வி வலய ஆசிரியஆலோசகர் தா. நிகேதன் செயலாளராகவும், வவுனியா பல்கலைக்கழக வளாகப் போதானாசிரியர் சி.சந்தானகிருஷ்ணன் பொருளாளராகவும் ஓய்வுநிலை ஆசிரியஆலோசகர் திருமதி அ.ஞானேஸ்வரி உபதலைவராகவும், எஸ்.ரஞ்சிதன் உப செயலாளராகவும்,ச.லக்ஷிகா பத்திராதிபராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

கீரிமலை ரேணுகா ஆச்சிரம பீடாதிபதி சிவஸ்ரீ உருத்திரபு ஸ்ரீவரக் குருக்கள், இ.பேரின்பநாயகம். தெல்லிப்பழை பிரதேச செயலர் சிறீமோகனன்,அகில இலங்கை சைவமகா சபையின் செயலாளர் வைத்திய கலாநிதி ப.நந்தகுமார் ஆகியோர் போஷகர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர். (இ-9)

# தொழிற்பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையானது யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்கால வேலைவாய்ப்பினை மையமாகக் கொண்டு முழு நேர மற்றும் பகுதிநேர தொழிற்பயிற்சி கற்கை நெறிகளை நடத்தி வருகின்றது.

பின்வரும் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுவதோடு இவற்றுக்கான பதிவுகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இக்கற்கை நெறிகளாவன, அலுமினியப் பொருத்துநர், வீட்டு மின்னிணைப்பாளர், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர் மற்றும் அழகுக்கலை வல்லுநர் ஆகும்.

இக்கற்கை நெறிகள் சண்டிலிப்பாய் மற்றும் சுன்னாகம் தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது. இக்கற்கை நெறிகள் அனைத்தும் தேசிய தொழிற்தகைமை (NVQ) சான்றிதழுக்கான பயிற்சிகளாகும். இக்கற்கை நெறிகள் கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் முதலாம் மாடி, வீரசிங்கம், மண்டபம், இல.12, கே.கே.எஸ். வீதி எனும் முகவரியில் எதிர்வரும் 05.06. 2016 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு யாழ். உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ

# அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு ரூ.677 கோடி கடந்த ஆண்டு நட்டம்

கடந்த ஆண்டு அம்பாந்தோட்டை துறைமுகம் 677 கோடி ரூபா நட்டமடைந்துள்ளது.2015 ஆம் ஆண்டு அம்பாந்தோட்டை துறைமுகம் நட்டமடைந்த காரணத்தினால், இந்த ஆண்டு இறுதியில் கொழும்பு துறைமுகம் பாரிய நிதி நெருக்கடியை எதிர்நோக்கும் என கணக்காய்வாளர் நாயகம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

துறைமுகத்தின் எண்ணெய்த் தாங்கிக் கட்டமைப்பை நிர்மாணிப்பதற்காக பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் வட்டி செலுத்துகை மற்றும் துறைமுகத்தின் பராமரிப்பு பணிகளில் ஏற்பட்ட குறைபாடுகளே நட்டத்திற்கான பிரதான காரணங்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தின் எண்ணெய்த் தாங்கிக் கட்டமைப்பு, நிர்மாணத்திற்காக கடன் பெற்றுக் கொண்டமை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலான கணக்காய்வுகளின் போது இந்த நட்டம்பற்றிய விடயங்கள் வெளியாகியுள்ளன.அம்பாந்தோட்டை துறைமுக நட்டமானது, கொழும்பு துறைமுகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் என கணக்காய்வாளர் நாயகம் எச்சரிக்கை விடுத்துள்ளார் என கொழும்பு பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-10)

# 'கொழும்பு குப்பை எமக்கு வேண்டாம்' புத்தளத்தில் கையெழுத்து வேட்டை!



"கொழும்பு குப்பை எமக்கு வேண்டாம்" என வலியுறுத்தி, கொழும்பு- அருவாக்காடு குப்பைச் செயற்றிட்டத்தை உடனடியாக நிறுத்துமாறு கோரி புத்தளம் நகரில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை பாரிய கையெ ழுத்து வேட்டையொன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த செயற்றிட்டத்தின் மூலம் கலா ஓயா, புத்தளம் சிறுகடல், இலங்கையின் மிக விசாலமான கண்டல்வளம் உட்பட சுற்றாட லுக்கும் சூழலுக்கும் ஏற்படும் பாதிப்பையும் குடிநீருக்கு இக்குப்பையினால் ஏற் படும் தாக் கத்தையும் கருத்தில் கொண்டு இந்த குப்பைச் செயற்றிட்ட த்தை உடனடியாக நிறுத்துமாறு வலியுறுத்தியே இந்த கையெழு த்து வேட்டை ஏற்பாடு செய்யப்பட்டது. ஜும் மாத் தொழு கையை தொடர்ந்து புத்தளம் பெரிய பள்ளி வாசலுக்கு முன்னால் இடம் பெற்ற இந்த கையெழுத்து வேட்டையினை மக்கள் விடுதலை முன்னணியின் புத்தளம் மக்கள் குரல் அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது.

மக்கள் குரல் அமைப்பின் தலைவர் சமந்த கோரள ஆராச்சி தலைமையில் நடைபெற்ற இந்த கையெழுத்து வேட்டையில் சுமார் நூறிற்கும் அதிகமானவர்கள் கலந்துக் கொண்டு தங்களது ஆதரவை வழங்கியிருந்தனர்.

இந் நிலையில், இந்த பொது மக்களின் ஆதரவுடனான இந்த மகஜரை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக புத்தளம் மக்கள் குரல் அமைப்பின் பொருளாளர் ஹாறூன் பறூஸ் தெரிவித்தார். (இ-10)


## வேலை வாய்ப்பு

கொழும்பு (பியகம) வில் அமைந்திருக்கும் பிரபலமான பிளாஸ்டிக் கம்பனி ஒன்றுக்கு கீழ்வரும் வேலை வாய்ப்புக்களுக்காக ஆட்கள் சேர்க்கப்படுகின்றனர்.

1) இயந்திர இயக்குநர்(ஆண்/பெண்)

2) உதவியாளர் (ஆண்/பெண்)

- வயதெல்லை அண்ணளவாக 18-35
- கல்வித் தகைமை தரம் 10/அதற்கு மேல்
- தொழில் நுட்பம் தொடர்பான சான்றிதழ் மேலதிக தகைமையாக கருதப்படும்
- முன் அனுபவம் முக்கியமில்லை
- சம்பளம் 25000/= இற்கு மேல்

தங்குமிட வசதி/ உணவுகள் கம்பனியால் வழங்கப்படும்

மேலதிக தகவல்களுக்கு-

(இ)

077 350 6762, 077 613 4636


## விற்பனைக்கு

தொட்டிலடிச் சந்திக்கு அருகாமையில் கீரிமலை வீதியில் 4 பரப்புக் காணியும் 8 பரப்புக் காணியும் வீடு கட்டுவதற்கு உகந்தது.

தொடர்பு:
077 978 8635

(4789)


## கண்ணீர் அஞ்சலி




### அமரர் சின்னத்துரை சிவஞானம்

யாழ். கிளிநொச்சி மாவட்ட
பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன்
அவர்களின் அன்புத் தந்தை
**சின்னத்துரை சிவஞானம்**
அவர்களின் மறைவிற்காக ஆழ்ந்த
துயர் அடைவதுடன் அன்னாரது
குடும்பத்தினருக்கு எமது
அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதோடு அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

(இ-4717)

**கிளிநொச்சி மாவட்ட முதியோர் பேரவை**

## கண்ணீர் அஞ்சலி



### அமரர் சின்னத்துரை சிவஞானம்


யாழ். கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்
**கௌரவ சிவஞானம் சிறிதரன்**
அவர்களின் அன்புத் தந்தை
**உயர்திரு. சின்னத்துரை சிவஞானம்**
அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன்
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தாருக்கு எமது
அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(இ)

**வலம்புரி நிர்வாகம்**

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை சிவஞானம்



பிறப்பு-1938.03.11
இறப்பு-2016.05.25

அல்லைப்பிட்டி மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட **சின்னத்துரை சிவஞானம்** இயற்கை எய்தினார்.

இவர் காலஞ்சென்றவர்களான அல்லைப்பிட்டி - மண்டைதீவைச் சேர்ந்த சின்னத்துரை- யோகம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் நெடுந்தீவு மேற்கை பூர்வீகமாகக் கொண்ட கந்தையா- கதிராசிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற இலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு (ஓய்வு பெற்ற பிரதம எழுதுவினைஞர்- யாழ்ப் பாண மாவட்டச் செயலகம்), அன்னலட்சுமி இராசையா (அல்லைப்பிட்டி), காலஞ்சென்ற விநாயகமூர்த்தி, இராசலட்சுமி நல்லையா (மண்டைதீவு), நித்தியலட்சுமி பாலசிங்கம் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், செந்தில்நாயகி (பிரான்ஸ்), சிறிதரன் (யாழ்ப்பாண மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்), சிறீகுகன் (சுவிஸ்), காலஞ்சென்ற சிறீரன், காலஞ்சென்ற சிறீவரதன் மற்றும் நவநிதி (பிரான்ஸ்),சிறீறங்கன் (பிரான்ஸ்), சிவநிதி (கிளிநொச்சி), சிறீரூபன் (கனடா), காலஞ்சென்ற சிறீஅன்பன், மற்றும் சிறீவினோதன் (பிரான்ஸ்), கலைநிதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும்

ஜெயபாபு, சிவஞானகுமாரி (ஆசிரியர்-கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி), பத்மலோசினி (சுவிஸ்) ,கேதீஸ்வரன் (பிரான்ஸ்-முன்னாள் கிராம அலுவலர்), அருட்செல்வி (பிரான்ஸ்), வேலவன் (வன்னி மலர்காடு-முன்னாள் உப தபாலதிபர்) , சத்தியசிவம் (பிரான்ஸ்-முன்னாள் அலுவலக உதவியாளர்-முல்லைத்தீவு மாவட்டச் செயலகம்), தர்சினி (கனடா) , கோசலாதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 2016.05.29 ஆம் திகதி இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வட்டக்கச்சி இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் மம்மில் இந்து மயானத்தில் நடைபெறும்.இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 882, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி,
கிளிநொச்சி.
தொ.பே: 077 691 3244,
021 320 7584

தகவல்: சி.சிறீதரன்,
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்,
கிளிநொச்சி.

(சி-4701)

## கேகாலையில் எட்டு வயதுச் சிறுமி இனந்தெரியாத நபர்களால் கடத்தல்

கேகாலையில் எட்டு வயதுச் சிறுமியொருத்தி இனந்தெரியாத நபர்களால் நேற்றுக்காலை கடத்தப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

கேகாலை மாவட்டத்தின் அடுகொடை பிரதேசத்தில் குறித்த கடத்தல் சம்பவம் நடைபெற்றுள்ளதாக பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

வான் ஒன்றில் வந்த நபர்களே சிறுமியைக் கடத்திச் சென்றுள்ளதாகவும், கடத்திய நபர்களை அடையாளம் காணமுடியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் கடத்தலுக்கான காரணம் குறித்தும் இதுவரை தகவல்கள் ஏதும் தெரியவில்லை.

சம்பவம் குறித்து பொலிஸார் துரித விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. (இ-10)

# சீரற்ற காலநிலையினால் 29 மாணவர்கள் மரணம்

## கல்வி அமைச்சர் தகவல்

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட கடும் மழை, மண்சரிவு மற்றும் வெள்ளப் பெருக்கினால் 29 பாடசாலை மாணவர்கள் இதுவரை உயிரிழந்துள்ளதாக கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

மேலும் அதிகமான பாடசாலை மாணவர்கள் தங்களது உடைமைகளையும் பாடப்புத்தகங்களையும் இழந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் கல்வி அமைச்சர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

நாட்டில் கடந்த இரு வாரங்களாக நிலவிய சீரற்ற காலநிலையினால் ஏற்பட்ட கடும் மழை, வெள்ளப்பெருக்கின் காரணமாக பாடசாலை மாணவர்கள் தங்களது உடைமைகளையும் பாடப்புத்தகங்களையும் இழந்துள்ள நிலையில் அவர்களின் கல்வி செயற்பாடுகள் முற்று முழுவதுமாக பாதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் இதுவரை வெள்ளபாதிப்புக்கள் மற்றும் மண்சரிவு அனர்த்தங்களினால் 28 பாடசாலை மாணவர்கள் உயிரிழந்துள்ளதாக கல்வி அமைச்சுக்கு தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது.

இந்த உயிரிழப்பானது அதிகளவு கொழும்பு மாவட்டம் உட்பட சப்ரகமுவ மாகாணத்திலேயே பதிவாகியுள்ளது.

குறிப்பிட்டு கூறுவதாயின் கொழும்பு மாவட்டத்தில் பாடசாலை மாணவர் ஒருவரும் சப்ரகமுவ மாவட்டத்தில் 28 பேருமாகவே இந்த உயிரிழப்பு எண்ணிக்கை பதிவாகியுள்ளது.

இதனிடையே இந்த அனர்த்தம் காரணமாக நாடளாவிய ரீதியில் 100 இற்கும் மேற்பட்ட பாடசாலைகள் முற்று முழுவதுமாக சேதமடைந்துள்ளன. இவ்வாறு பாதிப்படைந்த பாடசாலைகளை மீளவும் கட்டியெழுப்புவதன் மூலமே மாணவர்களின் கல்வி செயற்பாடுகளை உரியவகையில் முன்னெடுக்க முடியும்.

இவ்வாறான நிலையில் கல்வி அமைச்சின் கீழ் பாதிக்கப்பட்ட மாணவர்கள் தொடர்பிலான முழுமையான தகவல்களை திரட்டவும் நிவாரண செயற்பாடுகளை துரிதமாக முன்னெடுக்கவும் அமைச்சின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட நிவாரண குழுவானது பாதிப்புக்கள் தொடர்பிலான முழுமையான தகவல்களை திரட்டி வருகின்றது.

அந்தவகையில் பாதிப்புக்குள்ளான மாணவர்களுக்கான அனைத்து விதமான பாடப்புத்தகங்கள், புதிய சீருடைகள், சப்பாத்துக்கள் உட்பட சான்றிதழ்கள், பெறுபேறு சான்றிதழ் என்பன உரிய முறையில் மாணவர்களுக்கு மீண்டும் பெற்றுத்தர அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## யுவதியின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ரக்கா பகுதியில் 29 வயது மதிக்கத்தக்க யுவதி ஒருவர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அவரது வீட்டில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பிரேத பரிசோதனைக்குப்பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதேவேளை நேற்றைய தினம் வெளியான வலம்புரியில் 32 வயது மதிக்கத்தக்க குடும்பப் பெண் என பிரசுரமாகி இரு நந்து.

குடும்பப்பெண் சடலமாக மீட்கப்படவில்லை எனவும் 29 வயதான யுவதியின் சடலமே மீட்கப்பட்டது எனவும் உறவினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (இ-7)

## சிறுமி மீது கூட்டு வன்புணர்வு பிரேசில் மக்கள் ஆர்ப்பாட்டம்

(ரியோ டி ஜெனிரோ)

பிரேசிலின் ரியோ டி ஜெனிரோவில் 16 வயது சிறுமியொருவரை 30 இற்கும் அதிகமானவர்கள் இணைந்து கூட்டாக பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கி, அதன் வீடியோவை இணையத்தில் வெளியிட்ட சம்பவத்திற்கு எதிராக அந்நாட்டில் ஆர்ப்பாட்டங்கள் வெடித்துள்ளன.

ரியோ டி ஜெனிரோ நகரில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பெருந்தொகையான மக்கள் இணைந்து ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொண்டனர். இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட அதிகமான பெண்கள், குறித்த சிறுமி மீதான கூட்டு பாலியல் துஷ்பிரயோகத்திற்கு எதிர்ப்பு தெரிவித்ததுடன், இந்த குற்றத்துடன்தொடர்புடைய அனைவருக்கும் கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றும் வலயுறுத்தினர்.

இதன்போது அங்கிருந்த அதிகமான பெண்கள் தமது கன்னத்தில் பெண்களது அடையாளத்தைக் காண்பிக்கும் சின்னத்தை வரைந்திருந்தனர். மேலும், அவர்கள் குறித்த செயலுக்கு எதிராக தமது கண்டனத்தை தெரிவிக்கும் வகையிலான பதாகைகளையும் ஏந்தியிருந்தனர். (இ-10)

## வாகனங்கள் மீதான வரியை நீக்குமாறு நுகர்வோர் பாதுகாப்பு அமைப்பு கோரிக்கை

அமுலுக்கு வந்த வாகனங்கள் மீதான வரியினை உடனடியாக நீக்க வேண்டும் என நுகர்வோர் உரிமை பாதுகாப்புக்கான தேசிய அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

அரசாங்கம் இறக்குமதிகளுக்கு புதிய வரிமுறைகளை நடைமுறைப்படுத்தியமையினாலேயே வாகனங்களின விலைகள் பாரியளவில் உயர்வடைந்துள்ளதாக அமைப்பின் தலைவர் ரஞ்சித் விதானகே குற்றஞ்சாட்டியுள்ளார்.

மேலும் அரசாங்கம் அனைத்துப் பொருட்களுக்கும் வரிக்கொள்கையை நடைமுறைப்படுத்துவதாக அவர் தெரிவித்தார். (இ-10)

# மனித முன்னேற்றத்தை மீறிய வகையிலான தொழில்நுட்ப முன்னேற்றம் அழிவைத்தரும்

## அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தெரிவிப்பு



(ஹிரோசிமா)

மனித முன்னேற்றத்தை மீறிய வகையிலான தொழில்நுட்ப முன்னேற்றம் நம்மை அழித்துவிடும். அணுவை பிளக்கக்கூடிய அறிவியல் புரட்சிக்கு இணையான மனிதம் சார்ந்த பொதுப்புரட்சியும் வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

ஜப்பானின் ஹிரோசிமா நகரில் அணுகுண்டு வீச்சில் பலியானவர்களின் நினைவிடத்தில் நேற்று முன்தினம் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

இரண்டாம் உலகப் போரின் போது 1945ஆம் ஆண்டு ஓகஸ்ட் 6ஆம் திகதி அப் போதைய அமெரிக்க ஜனா திபதி ஹாரிட்ருமேன் உத்தரவின்படி, ஜப்பானின் ஹிரோசிமா மற்றும் நாகசாஹியின் மீது அணுகுண்டுகள் வீசப்பட்டன. முதன் முதலாக அணுகுண்டு இங்குதான் பயன்படுத்தப்பட்டது. இதில் சுமார் ஒன்றரை இலட்சம் பேர் இறந்தனர். இலட்சக்கணக்கானோருக்கு ஊனம் ஏற்பட்டது. நாகசாஹியில் 70 ஆயிரம் பேர் பலியானார்கள்.

ஹிரோசிமா அணுகுண்டு வீச்சு சம்பவத்துக்கு அமெரிக்கா மன்னிப்புக் கேட்க வேண்டும் என ஜப்பான் மக்கள் வற்புறுத்தி வருகின்றனர். ஹிரோசிமா அணுகுண்டு வீச்சுக்கு அமெரிக்கா மன்னிப்பு கேட்காது என திட்டவட்டமாக ஒபாமா அணமையில் பேட்டி ஒன்றில் கூறியிருந்தார்.

இதனிடையே, இந்த ஆண்டின் ஜி-7 மாநாடு ஜப்பான் நாட்டில் உள்ள இசே-ஷிமா நகரில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜப்பான் வந்துள்ள அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா நேற்று முன்தினம் ஹிரோசிமாவுக்கு சென்றார்.

சென்ட் டோபாத் அமைதி பூங்கா வில் அமைக்கப் பட்டுள்ள அணுகுண்டு வீச்சில் பலி யானவர்களின் நினைவிடத்தில் அவர் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். பின்னர் அங்கு ஒபாமா பேசியதாவது, 71 ஆண்டுகளுக்கு முன்னர் வானத்தில் இருந்து மரணம் விழுந்தது. உலகமே மாறிப்போனது.

நாம் ஏன் இங்கு வந்திருக்கிறோம்? மனித குலத்தை மனிதகுலமே அழித்த பயங்கரமான கடந்த காலத்தை நினைவுகூரவும், அந்த அழிவினால் பலியான வர்களுக்கு அஞ்சலி செலுத்தவும் இங்கு வந்துள்ளோம்.

இறந்தவர்களின் ஆன்மாக்கள் நம்முடன் பேசுகின்றன. ஒரு மௌன அழுகையை நாம் கேட்கிறோம். நம்மை நாமே உள்நோக்கிப் பார்த்து, சீராய்வு செய்ய அவை கூறுகின் றன. மனித முன்னேற்ற த்தை மீறிய வகையிலான தொழில்நுட்ப முன்னேற்றம் நம்மை அழித்துவிடும்.

அணுவை பிளக்கக்கூடிய அறிவியல் புரட்சிக்கு இணையாக மனிதம் சார்ந்த பொதுப்புரட்சியும் ஏற்பட வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

அணுகுண்டு வீச்சில் சிக்கி உயிர் பிழைத்து வாழ்ந்து கொண்டிருக்கும் முதியவர்கள் சிலரை சந்தித்த ஒபாமா அவர் களை கட்டித்தழுவி ஆறுதல் கூறினார்.

அவருடன் ஜப்பான் பிரதமர் ஷினோ அபே, அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் ஜான் கெர்ரி, இங்கிலாந்து உள்ளிட்ட ஜி-7 நாடுகளை சேர்ந்த வெளியுறவுத்துறை அமைச்சர்கள், ஜப்பான் வெளியுறவுத்துறை அமைச்சர் புமியோ கிஷிடா ஆகியோரும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். அணு குண்டு வீச்சு சம்பவத்துக்குப்பின் ஹிரோசிமா நகருக்கு வரும் முதல் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# போதைப்பொருள் பாவனையிலிருந்து மாணவர்களை மீட்டெடுக்க வேண்டும்

## மாவை எம்.பி.வலியுறுத்து

எமது மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள்பாவனை அதிகரித்துள்ளது. அதனை நாம் முற்றாக களைய வேண்டும், எமது பாரம்பரியத்தை கட்டிக்காக்க வேண்டும் என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.யாழ். வலிகாமம் வலயக்கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் மருதனார் மடம் இராமநாதன் மகளிர் கல்லூரியில் நேற்று முன்தினம் ஆரம்பமான ஆசிரியர் 2016 இன் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்குமேலும் உரையாற்றுகையில்,

ஒரு ஆசிரியர் மாநாடு ஒரு நாட்டை உருவாக்கியிருக்கிறது. அதற்கான சமுதாயத்தை உருவாக்கிறது.

அறிவு சக்தியை உருவாக்கி தலைமைத்துவத்தை உருவாக்குவதில் காரியகர்த்தவாக விளங்குகிறது. வேளாண்மை துறை விஞ்ஞானிகள் இசையால் பயிர் வளரும் என்று சொல்வார்கள். வாடிய நேரத்திலும் அது துளிர்த்து எழும் அதற்கு இசை அடிப்படை என்கின்றார்கள்.

நான் இந்த கருத்தை மையப்படுத்தி சொல்வேன் இசை பயிரை மட்டுமல்ல உயிரையும் வளர்க்கும். ஏனென்றால் உயிர் இருந்தால் தான் வளர முடியும். அதை போல சமுதாயத்தில் அறிவு, அனுபவம், ஆற்றல் இவை உயிர் நாடியாகும்.

நாங்கள் வீழ்ந்து விடவில்லை. ஏனென்றால் நாங்கள் எழுந்து நிற்கின்றோம். மாணவர்கள் 8 ஆம் வகுப்பிற்கு மேல் அடுத்த 3 ஆண்டுகளில் பல்கலைக்கழத்தில் என்ன கற்க வேண்டும் என்பதற்கு ஆயத்தப்படுத்த வேண்டும்.எங்களுடைய பல்கலைக் கழகத்தில் படித்த மருத்துவர்களேஎங்கள்மண்ணில்வேலை செய்ய ஆயத்தமாக இல்லை.

எங்களுடைய சிற்பிகள் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களே. அதன் பிறகு தான் தலைமைத்துவம் ஒரு நாட்டினுடைய மக்களின் எதிர் காலத்தை தீர்மானிப்பவர் வர்களாக இருக்கின்ற சிற்பிகள் ஆசிரியர்கள் .

போர்க்காலத்தில் கூட விழுந்திடாத கல்விப்போக்கு பின்னர் 6,7 ஆண்டுகளின் பின்னர் ஏன் வீழ்ந்தது என்பதை கண்டறிய வேண்டும். இந்த ஆசிரியர் மாநாட்டின் அம்சம் அதுவாகவே இருக்க வேண்டும்.ஆசிரிய சிற்பிகளின் உறுதியாக இருக்க வேண்டும்.

வடபகுதியில்யாழ்ப்பாணம் கல்வியில் உயர்ந்த நிலையில் இருந்தது என்ற ஒரு வரலாறு இருக்கிறது.

ஒரு பாரம்பரியம் இருக்கிறது. அதை நாங்கள் இழக்கக் கூடாது, இடமளிக்கவும் கூடாது. எங்களுடைய கல்வி உயரவேண்டும், உலகத்தோடு ஒட்டி வாழ வேண்டும். நாங்கள் ஒழுக்கத்தில், மொழி, கலாசாரத்தில்விடுதலை உள்ளவராகவும் தன்னை தானே வளப்படுத்துபவனாகவும் இருக்க வேண்டும்.எங்களுடையமாணவர்கள் எதிர்காலத்தில் தொழில் துறையை உருவாக்கி எமது அழிந்து போன பிரதேசத்தை மீளக் கட்டி எழுப்ப வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## உள்ளூராட்சித் தேர்தலை நடத்த வலியுறுத்தி 31 ஆம் திகதி கூட்டு எதிர்க்கட்சி ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேரதல்களை நடத்துமாறு தேர்தல் ஆணைக்குழுவிற்கு அழுத்தம் கொடுக்கும் நடவடிக்கைகளை ஆரம்பிக்க போவதாக கூட்டு எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.



இராஜகிரியவில் உள்ள தேர்தல் ஆணைக்குழுவின் அலுவலகத்திற்கு எதிரில் எதிர்வரும் 31ஆம் திகதி எதர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்த ஏற்பாடுகளை செய்துள்ளதாக கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்சா தெரிவித்துள்ளார்.

எல்லை நிர்ணய நடவடிக்கைகளுக்காக உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை அரசாங்கம் ஒத்தி வைத்துள்ளதுடன் அடுத்த ஆண்டு முற்பகுதியில் தேர்தலை நடத்தவுள்ளதாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(இ-10)

## பாதிக்கப்பட்டோருக்கு பகிர்ந்தளிக்க இலங்கைக்கு ஒரு லட்சம் டொலர்களை நிவாரணமாக வழங்கியது நியூசிலாந்து

இலங்கையின் வெள்ள நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள நியூசிலாந்து அரசாங்கம் ஒரு லட்சம் டொலர்களை நிவாரண நிதியாக அளித்துள்ளது.

அண்மையில் ஏற்பட்ட அசாதாரண காலநிலை காரணமாக மண்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கு என்பவற்றால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பணிகளை மேற்கொள்ள பல்வேறு நாடுகள் நிதியுதவிகளை வழங்கி வருகின்றன.அந்த வகையில் நியூசி லாந்து அரசாங்கத்தின் சார்பில் ஒரு இலட்சம் டொலர்கள் நிவாரண நிதியாக வழங்கப் பட்டுள்ளது.

இது டிஜிட்டல் கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

நியூசிலாந்தின் வெளிநாட்டமைச்சர் மயூரி மெக்கலி குறித்த நிதியுதவியை இலங்கைக்கான நியூசிலாந்து தூதுவர் கிரஹாம் மோர்ட்டன் ஊடாக வழங்கி வைத்துள்ளார். (இ-10)


இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா:40செவ் 1 இல்<br>தகைமை/தொழில்:O/Lகனடா PR<br>தொ.இ: B/4075 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 7<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு:பிரான்ஸ் மட்டும்<br>தொ.இ: G/4886 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 18செவ் 2 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:பொறியியலாளர் அவுஸ்திரேலியா<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: B/4077 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 21<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/4887 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 24செவ் 2 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:A/Lகனடா PR<br>தொ.இ: B/4080 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 32செவ் 1 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: G/4888 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 14சூரி செவ் 3 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BBM/தனியார் தொழில்<br>தொ.இ: B/4081 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 73 செவ் 7 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: ஆசிரியர்<br>தொ.இ: G/4891 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


## வாரம் ஒரு தகவல்

### உறக்கமும் உணர்வும்

சதாவதானி சேகுதம்பிப் பாவலர் ஆற்றல் நிறைந்த பெரும் தமிழ் புலவராக விளங்கியவர். நினைவாற்றலில் ஈடு இணையற்றுத் திகழ்ந்தவர். நூறு அவதானங்கள் செய்து புலவர்கள், அறிஞர்கள் மத்தியில் நினைவாற்றல் வல்லமையைப் பலமுறை மெய்ப்பித்து உள்ளார். இவரது பல நூல்கள் சொல்நயம், பொருள் சிறப்பு, கற்பனை எழில் மிகுந்து அறிஞர்கள் பாராட்டும் தகுதியில் உள்ளன. வள்ளலார் அருட்பாவை மருட்பா என்று பிரசாரம் பண்ணிய புலவர் குழுவை வென்று அவை அருட்பாக்களே என மெய்ப்பித்த பெருமையும் பாவலருக்கு உண்டு.

இப்பெரும் புலவரிடம் ஒருநாள் தனது கவிதை நூல் ஒன்றைக் காட்டி மதிப்புரை பெற வந்திருந்தார் தமிழறிஞர் ஒருவர். அறிஞரை வரவேற்று அவர் வந்த காரணத்தையும் அறிந்து கொண்டார் பாவலர். அறிஞர்களிடம் கவிதைகளைப்படிக்கக் கேட்டுக் கொண்டார் பாவலர். அறிஞரும் வரிசையாகக் கவிதைகளைப் படித்துக் கொண்டு வந்தார். அது நல்ல வெயில் நேரம். இவர்கள் இருந்த இடத்தில் காற்றும் இதமாக வீசிக் கொண்டிருந்தது. பாவலரது கண்கள் மயங்க, உறக்கமும் வந்து விட்டது.

தமது கவிதைகளைப்படித்துக்கொண்டு வந்த தமிழறிஞர் பாவலரின் துயில் நிலையைப் பார்த்து மனதில் சலிப்புக் கொண்டார். கவிதைகள் முழுவதையும் படித்துக் கேட்பித்துப் பாவலர் சொல்லும் திருத்தங்க ளையும் செய்ய எண்ணியிருந்தார் த்மிழறிஞர். இப்போது அதற்கு வழியில்லாது போயிற்றல்லவா! தூங்குகின்ற அந்தப் பெரும் புலவரை எழுப்பலாமா? அது பண்பாட்டுக்கு அகழகல்லவே! வேறு வழியன்றித் தழிழறிஞர் தம் போக்கில் கவிதைகள் முழுமையும் படித்துத் தீர்த்தார். இதன் பின்னர் ஐயா,ஐயா எனப் பாவலரை எழுப்பினார்.

கண்விழித்த பாவலர் நூல் முழுவதையும் படித்து முடித்து விட்டீர் களா! என வினவினார். ஆம் என்றார் தமிழறிஞர்.

நூலின் தொடக்கத்திலிருந்து முடிவுவரையிலும் இடையிடையே உள்ள பல பாடல்களின் அடிகளைச் சொல்லி அவற்றில் இன்ன இன்ன பதங்களை மாற்றி, இன்ன இன்ன பதங்களை அமைத்தால் நன்றாக இருக்குமென்று தமது கருத்துக்களைக் கூறினார் பாவலர்.

இத்திருத்தங்களைக் கேட்ட தமிழறிஞருக்குத் தூக்கி வாரிப்போட்டது போலாயிற்று. அவர் மெய் சிலிர்த்துப் போனார். தமக்கே அப்பாடல் களை நினைவுபடுத்திச் சொல்ல இயலாதிருக்கும்போது தூக்க நிலையிலிருந்த பாவலர் இவ்வளவு தெளிவாகச் சொல்கிறாரே என்ற வியப்பு அவருக்கு.

அறிஞர் பாவலரின் திருத்தங்களை அப்படியே ஏற்றுக் கொண்டார். பாவலரிடம் இருந்து அந்நூலுக்கு வாழ்த்துப் பாடலையும் பெற்றுக் கொண்டார். கண்கள் மயங்கிய போதிலும் செவியுணர்வு மயங்காத பாவலரின் பேராற்றலை தமது உள்ளத்தில் வியந்து கொண்டே தமிழறிஞர் பாவலரை வணங்கி விடை பெற்றுச் சென்றார்.

கவிஞர் தே.ப.பெருமாள்

# கைக்குண்டு தாக்குதல் குறித்து பொலிஸார் தீவிர விசாரணை!

(யாழ்ப்பாணம்)

யாழ். கந்தரோடை பகுதியில் இளைஞர் ஒருவர்மீது வாள்வெட்டு நடத்த முயன்ற குழு ஒன்று குறித்த இளைஞர் மீது கைக்குண்டு தாக்குதலையும் நடத்த முயன்றமை தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ள சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எச்.எல். துஸ்மந்த, சம்பவத்துடன் தொடர்புடைய நால்வரை தேடி வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

கந்தரோடை- உடுவில ஞான வைரவர் ஆலயத்திற்கு அருகில் வசித்து வருகின்ற முரளி என்பவர் மீது கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கும்பலொன்றால் வாள்வெட்டு தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் மீண்டும் குறித்த நபர் மீது வாள்வெட்டு தாக்குதலை மேற்கொள்ளும் வகையில் மூன்று மோட்டார் சைக்கிள்களில் முகத்தை முழுதாக மூடிய நிலையில் ஒன்பது பேர் வந்துள்ளனர்.

குறித்த நபர் மீது மீண்டும் வாள்வெட்டு தாக்குதல் நடத்த முயற்சித்த போது குறித்த நபர் தப்பியோட முயன்றுள்ளார். இதன் போதே அவர் மீது கைக்குண்டு தாக்குதல் நடத்தியுள்ளனர். எனினும் இத்தாக்குதலில் அதிர்ஷ்டவசமாக கைக்குண்டு வெடிக்காத நிலையில் குறித்த நபர் எதுவித பாதிப்புமின்றி தப்பியுள்ளார்.

இதேவேளை இச்சம்பவத்தில் வீசப்பட்ட கைக்குண்டு வெடிக்காத நிலையில் அதனை செயலிழக்க செய்யும் பிரிவினர் மீட்டுள்ளனர். இந்நிலையிலேயே குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய நால்வரை முதற்கட்டமாக கைது செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் இதுவரை காலமும் வாள்வெட்டில் ஈடுபட்டு வந்த சமூகவிரோத கும்பல்கள் தற்போது கைக்குண்டு தாக்குதல் நடத்தும் அளவிற்கு வந்துள்ளதாகவும், இது தொடர்பில் உரியவர்கள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில், மேற்படி சம்பவம் தொடர்பில் தகவல் ஏதும் கிடைக்கப்பெற்றால் அதனை பொலிஸாருக்கு வழங்கி உதவுமாறு கேட்டுள்ளனர். (இ-4)

# நிதியமைச்சில் ஏற்பட்டுள்ள உள்ளக முரண்பாட்டால் அரசின் முக்கிய நடவடிக்கைகள் தேங்கும் அபாயம்

நிதியமைச்சிற்குள் ஏற்பட்டுள்ள உள்ளக முரண்பாடு காரணமாக அரசாங்கத்தின் முக்கிய நடவடிக்கைகள் தேங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அறியக் கிடைத்துள்ளது.

நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க ஜப்பானில் நடைபெறும் ஜி-7 பொருளாதார உச்சி மாநாட்டுக்கு ஜனாதிபதியுடன் சென்றுள்ளார். இதன்காரணமாக இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன பதில் நிதியமைச்சராக கடமையாற்றிக் கொண்டுள்ளார்.

இந்நிலையில் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா கடந்த சில நாட்களாக அமைச்சுப் பக்கமே வரவில்லை என்று தெரியவந்துள்ளது. இதனையடுத்து அமைச்சரின் கையெழுத்துக்குரிய முக்கிய ஆவணங்களை எடுத்துக் கொண்டு நிதியமைச்சின் அதிகாரியொருவர் லக்ஷ்மன் யாப்பாவின் உத்தியோகபூர்வ இல்லத்துக்குச் சென்றுள்ளார்.

குறித்த அதிகாரியின் முன்பாக நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவை கடுமையாக சாடிய அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா, அவர் கொண்டு வந்த ஆவணங்களில் கையெழுத்திட மறுப்புத் தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சின் இராஜாங்க அமைச்சரான தனக்கு ரவி கருணாநாயக்க முக்கியத்துவம் அளிப்பதில்லை என்றும், உட்கார மேசை, நாற்காலி தவிர எதுவித பொறுப்புகளும் பிரித்து வழங்கவில்லை என்றும் அமைச்சர் யாப்பா தெரிவித்துள்ளார்.

அதன் காரணமாக நிதியமைச்சின் எந்தவொரு ஆவணத்திலும் தான் கையெழுத்திடப்போவதில்லை என்றும் அவர் உறுதிபடத் தெரிவித்துள்ளார். (இ-10)

# வர்த்தகரின் வீட்டில் துப்பாக்கி பிரயோகம்

## சிறுமிக்கு காயம்

(கொழும்பு)

அநுராதபுரம் - கல்னேவ வலஸ்முல்ல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு வர்த்தகர் ஒருவரின் வீட்டுக்குள் புகுந்த மூன்று கொள்ளையர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் வர்த்தகரின் 11 வயதான மகள் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்த சிறுமி கல்னேவா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

ரி-56 ரக துப்பாக்கியினால், இந்த தாக்கல் நடத்தப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இரண்டு தோட்டாக்கள் சிறுமியின் கால் தொடை பகுதிக்கு அருகில் பாய்ந்துள்ளன.

இந்த நிலையில், சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை கைது செய்வதற்கான விசாரணைகளை கல்னேவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-10)

# அரநாயக்க மீட்புப்பணிகளுக்கு வான்படையின் உதவி மறுப்பு

## சதுர சேனாநாயக்க குற்றச்சாட்டு

அரநாயக்க மீட்புப்பணிகளுக்கு வான்படையினரின் உதவியை வழங்குமாறு தாம் வான்படைத் தளபதியிடம் கோரிய போதும அவர் உதவி வழங்குவதனை நிராகரித்தார் என நாடாளுமன்ற உறுப்பினர் சதுர சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

மண்சரிவு ஏற்பட்டதன் பின்னர் வான்படையினரின் உதவியுடன் மீட்புப்பணிகளை மேற்கொள்ள வேண்டுமென வான்படைத் தளபதியிடம் கோரியிருந்தேன்.

எனினும், வான்படைத் தளபதி இந்த உதவிகளை வழங்க மறுத்து விட்டார்.

சரியான முறையில் மீட்புபணி மேற்கொள்ளப்பட வேண்டுமாயின் வான்படையினர் மேலிருந்து வெளிச்சம் காட்ட இராணுவத்தினர் தரை வழியாக மீட்புப்பணிகளில் ஈடுபடுவார்கள்.

இந்த முறைமையின் ஊடாக மீட்புப் பணிகளை சிறந்த முறையில் மேற்கொள்ள முடியும். அரநாயக்க பிரதேசத்தில் மண்சரிவு பற்றி நானே முதலில் பாதுகாப்புச் செயலாளருக்கு அறிவித்திருந்தேன்.

எனது கோரிக்கைக்கு அமையவே கிளிநொச்சியில் கடமையாற்றி வந்த இரண்டாம் லெப்டினன்ட் ஒருவரை அழைத்து களனி கங்கை கடலில் சங்கமிக்கும் பகுதி ஆழமாக்கப்பட்டது என அவர தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும், சதுர சுமத்திய குற்றச்சாட்டுக்கு வான்படையினர் இதுவரையில் எவ்வித பதிலையும் அளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# 05.2016 29 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1453 - ஓட்டோமான் படைகள் கான்ஸ்டான்டினோபில நகரைக் கைப்பற்றி பைசண்டைன் பேரரசை முடிவுக்குக் கொண்டுவந்தனர்.
- 1660 - இரண்டாம் சார்ல்ஸ் பிரித்தானியாவின் மன்ன னாக மீண்டும் முடிசூடினான்.
- 1677 - வேர்ஜீனியாவில் குடியேறிகளுக்கும் உள்ளூர் பழங்குடிகளுக்கும் இடையில் அமைதி உடன்பாடு ஏற்பட்டது.
- 1727 - இரண்டாம் பீட்டர் ரஷ்யாவின் மன்னனாக முடிசூடினான்.
- 1790 - ரோட் தீவு ஐக்கிய அமெரிக்காவின் 13வது மாநிலமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- 1848 - விஸ்கொன்சின் ஐக்கிய அமெரிக்காவின் 30ஆவது மாநிலமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- 1864 - மெக்சிக்கோவின் முதலாம் மாக்சிமிலியன் முதற தடவையாக மெக்சிக்கோ வந்து சேர்ந்தான்.
- 1867 - ஆஸ்திரிய-ஹங்கேரிப் பேரரசு அமைக்கப்பட்டது.
- 1869 - பிரித்தானியாவில் பகிரங்க மரண தண்டனை தடை செய்யப்பட்டது.
- 1886 - வேதியியலாளர் ஜோன் பெம்பர்ட்டன் முதற் தடவையாக கொக்கக் கோலாவுக்கான விளம் பரத்தை அட்லாண்டா ஜேர்னல் இதழில் வெளியிட்டார்.
- 1903 - சேர்பியாவின் மன்னன் அலெக்சாண்டர் ஒபரெ னோவிச் மற்றும் அராசி திராகா 1919 - ஐன்ஸ்டீனின் சார்புக் கோட்பாடு சோதிக்கப்பட்டது. பின்னர் இது உறுதிப் படுத்தப்பட்டது.
- 1947 - இந்தியத் தரக்கட்டுப்பாட்டு நிறுவனம் அமைக்கப்பட்டது.
- 1953 - முதற்தடவையாக சேர் எட்மண்ட் ஹில்லறி, ஷேர்ப்பா டென்சிங் இருவரும் எவரெஸ்ட் சிகரத்தை ஏறி சாதனை படைத்தனர்.
- 1982 - இலங்கை மட்டக்களப்பில் சுவாமி விபுலான ந்த இசை நடனக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.
- 1988 - அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் ரேகன் முதற தடவையாக சோவியத் ஒன்றியத்துக்கு விஜயம் செய்தார்.
- 1990 - போரிஸ் யெல்ட்சின் ரஷ்யக் குடியரசின் ஜனாதிபதியானார்.
- 1999 - டிஸ்கவரி விண்ணோடம் பன்னாட்டு விண் வெளி நிலையத்துடனான தனது முதலாவது இணைப்பை வெற்றிகரமாக முடித்தது.
- 1999 - 16 ஆண்டுகள் இராணுவ ஆட்சியின் பின்னர் நைஜீரியாவில் ஜனாதிபதி மக்கள் தெரிவு செய்தனர்.

### பிறப்புகள்

- 1872 - சிவயோக சுவாமி, ஈழத்துச் சித்தர். (இ.1964)
- 1917 - ஜோன் எஃப். கென்னடி, ஐக்கிய அமெரிக்காவின் 35 ஆவது குடியரசுத் தலைவர்.(இ. 1963)
- 1984 - கார்மெலோ ஆந்தனி, அமெரிக்கக் கூடைப் பந்து ஆட்டக்காரர்.

### இறப்புகள்

- 1500 - பார்த்தலோமியூ டயஸ், போர்த்துக்கேய நாடு காண் பயணி.
- 1987 - சரண் சிங், இந்தியக் குடியரசின் ஏழாவது பிரதமர். (பி. 1902)
- 1994 - எரிக் ஹோனெக்கர், கிழக்கு ஜேர்மனியின் கடைசி ஜனாதிபதி. (பி. 1912)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 100 | 170 | 200 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 120 | 140 | 120 |
| பச்சைமிளகாய் | 300 | 100 | 350 | 350 | 300 | 350 |
| தக்காளி | 180 | 300 | 170 | 200 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 40 | 50 | 60 | 60 | 60 |
| கோவா | 180 | 150 | 20 | 160 | 160 | 160 |
| கரட் | 200 | 200 | 140 | 140 | 200 | 140 |
| பூசணி | 60 | 40 | 40 | 50 | 60 | 50 |
| புடோல் | 100 | 100 | 80 | 100 | 120 | 100 |
| வாழைக்காய் | 50 | 400 | 35 | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 150 | 150 | 150 | 120 | 200 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 90 | 80 | 100 | 80 |
| பாகற்காய் | 200 | 400 | 200 | 180 | 120 | 150 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 100 | 120 | 120 | 120 |
| கருணைக்கிழங்கு | 120 | 100 | 80 | 100 | 120 | 100 |
| பயற்றங்காய் | 180 | 200 | 100 | 120 | 80 | 120 |
| லீக்ஸ் | 180 | 200 | 170 | 240 | 240 | 240 |
| பீற்றூட் | 140 | 200 | 110 | 180 | 200 | 170 |
| கறிமிளகாய் | 200 | 200 | 150 | 160 | 240 | 150 |
| முருங்கைக்காய் | 250 | 200 | 100 | 130 | 200 | 130 |
| போஞ்சி | 250 | 400 | — | 240 | 200 | 240 |
| கத்தரிதம்புள்ள | 180 | 100 | 140 | — | 200 | — |
| கீரை - 1பிடி | 60 | 60 | 40 | 50 | 60 | 50 |
| தேசிக்காய் | 300 | 400 | 300 | 350 | 200 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30-50 | 15-25 | 30 | 20-25 | 30 |
| இராசவள்ளி | 150 | 300 | 110 | 160 | 200 | 160 |
| வெங்காயப்பூ | 400 | — | — | — | — | — |
| முள்ளங்கி | 120 | — | — | 100 | — | 100 |
| பொன்னாங்காணி | 40 | — | 20 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 15 | — | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | — | 50 | — | — | — |

# களனி மற்றும் ஜின் கங்கை நீர்மட்டம் மீண்டும் அதிகரிப்பு

நாட்டில் பெய்துவரும் பலத்த மழை காரணமாக களனி மற்றும் ஜின் கங்கையில் மீண்டும் நீர்மட்டம் அதிகரிக்கத் தொடங்கியிருப்பதாக நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது.

எனினும் குறித்த ஆறுகளின் நீர்மட்டம் வெள்ளப் பாதிப்பை ஏற்படுத்தும் அளவுக்கு இதுவரை உயரவில்லை என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவிக்கையில்,

நாட்டின் பல பகுதிகளிலும் பலத்த மழை பெய்து வருகின்றது.

நேற்று முன்தினம் காலி மாவட்டத்தின் தவலம பிரதேசத்தை அண்டிய பகுதிகளில் ஜின் கங்கையின் நீர்மட்டம் அதிகரித்துக் காணப்பட்டது.

களனியாற்றிலும் ஒருசில இடங்களில் நீர்மட்டம் அதிகரித்துக் கொண்டிருப்பதை நீர்ப்பாசனத் திணைக்களம் அவதானித்துள்ளது. எனினும் வெள்ளப் பாதிப்பு ஏற்படும் அளவுக்கு நீர்மட்டம் உயரவில்லை.

எனினும் பொதுமக்கள் இதுகுறித்து அவதானமாகவும், விழிப்புணர்வுடனும் நடந்து கொள்வது பாதுகாப்பானது என்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)




# கற்கை நெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம் தொழில் நுட்பவியல் கல்லூரியில் ஆறு மாத கால குறுங்கால கற்கை நெறிகள் எதிர்வரும் ஜூலை மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன. எனவே விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 18.06.2016 ஆம் திகதியன்று அல்லது அத்திகதிக்கு முன்னராக விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

1.தகவல்தொடர்பாடல் தொழில்நுட்பவியலாருக்கான தேசிய சான்றிதழ் (NVQ) தகைமை க.பொ.த. (சா/த) கணிதம், தமிழ், ஆங்கிலம் உட்பட இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆறு பாடங்களில் சித்தி.

2. கணனி வன்பொருள் தொழில்நுட்பவியலாருக்கான தேசிய சான்றிதழ் (NVQ4) தகைமை க.பொ.த (சா/த) கணிதம், விஞ்ஞானம், தமிழ் ஆங்கிலம் உட்பட இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆறு பாடங்களில் சித்தி.

3. உதவிக் கணிய அளவையியலாளருக்கான தேசிய சான்றிதழ் (NVQ4) தகைமை க.பொ.த. (சா/த) கணிதம், விஞ்ஞானம், தமிழ் உட்பட இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆறு பாடங்களில் சித்தி

4. வேலை தேடுவோருக்கான ஆங்கிலக் கற்கை நெறி

பின்வரும் கற்கைநெறிகள் தரம் 10 சித்தியுடன் விசேட கொடுப்பனவுகளுடன் நடத்தப்படும்.

5. மரவேலை தொழில் நுட்பம் (கட்டடம்) (Wood Work Machinist -building)

6.கட்டட தொழில்நுட்பம் (Building Trade)

7.வெல்டிங் தொழில் நுட்பம் (Gas & Are Welder)

போன்ற கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என கல்லூரியின்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ

# இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட அரச,தனியார் ஊழியர்களுக்கு சலுகைக்கடன்

(கொழும்பு)

இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கு சலுகை அடிப்படையில் கடன்கள் வழங்கப்படவுள்ளன.

மண்சரிவு மற்றும் மழை வெள்ளம்போன்றவற்றினால் பாதிக்கப்பட்ட அரசாங்க மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கு இந்த விசேட திட்டத்தின் ஊடாக கடன் வழங்கப்பட உள்ளது.

எளிமையான பிணை அடிப்படையில் மிகக் குறைந்த வட்டி வீதத்தில் கடன் வழங்கப்பட உள்ளது. மக்கள் வங்கியினால் இந்த கடன் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட வீடுகள், சொத்துக்கள் அல்லது வேறும் நுகர்வுத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள ஐந்து இலட்சம் ரூபா வரையில் கடன் வழங்கப்பட உள்ளது.

ஐந்து ஆண்டுகள் வரையில் இந்த கடன் தொகையை மீளச் செலுத்த அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மற்றும் பிரதமரின் பணிப்புரைக்கு அமைய கடன் வழங்கப்படவுள்ளது. (இ-10)

# நாடு தழுவிய பகிஷ்கரிப்பு

## அரச வைத்தியர் சங்கம் அறிவிப்பு

வைத்தியத்துறையில் காணப்படும் வேலை வாய்ப்புக்களை நிரப்புவதற்கு வைத்திய சேவைப் பணிப்பாளரினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிடின் நாடு தழுவிய பணிப் பகிஷ்கரிப்பு போராட்டமொன்றை எதிர்வரும் ஜூன் 01 ஆம் திகதி முன்னெடுக்கவுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண காலநிலையைக் கருத்தில் கொண்டு கொழும்பு தேசிய வைத்தியசாலை, கம்பஹா, புத்தளம், கேகாலை மற்றும் கிளிநொச்சி மாவட்டம் ஆகிய வைத்தியசாலைகளிலும், கொழும்பு லேடி ரிஜ்வே, காசல் வீதி மகளிர் வைத்தியசாலை, கொழும்பு சொய்ஷா, சிறிமாவோ பண்டார நாயக்க சிறுவர் வைத்தியசாலை, மஹரகம புற்று நோய்ப் பிரிவு என்பனவற்றில் இந்த பணிப்பகிஷ்கரிப்பு நடவடிக்கை இடம்பெற மாட்டாது எனவும் அச்சங்கம் அறிவித்துள்ளது.

ஜனாதிபதி நாடு திரும்பியதும் இது குறித்து கலந்துரையாட நேரமொன்றை ஒதுக்கித் தருமாறும் அச்சங்கம் உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (இ-10)

# எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய முதலாவது இலங்கைப் பெண்ணுக்கு வரவேற்பு

## கட்டுநாயக்க விமான நிலையத்தில் பிரதமர் ரணில் தலைமையில்



எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய முதலவாது இலங்கை பெண்ணான ஜயந்தி குருஉதும் பொல மற்றும் அவருடன் எவரெஸ்ட் சிகரம் ஏறிய யோஹான் பீரிஸையும் பிரதமர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து வரவேற்றுள்ளார்.

எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய பின்னர் நேற்று அதிகாலை மீண்டும் இலங்கைக்கு வந்தபோது அவர்களை விமான நிலைய சிறப்பு விருந்தினர்களை வரவேற்கும் பகுதியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வர வேற்றுள்ளார்.

இதேவேளை, தென்கொரிய சோல் நகரில் இன்று ஆரம்பமாகவுள்ள ரோட்டரி சர்வதேச மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த நிகழ்வின் பின்னர் நாட்டில் இருந்து புறப்பட்டு சென்றுள்ளார்.

160 நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தி ரோட்டரி சங்கத்தின் உறுப்பினர்கள் 50 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கலந்து கொள்ளவுள்ளதுடன், இந்த மாநாட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சிறப்பு உரையாற்றவுள்ளார். (இ-10)

# 10 வருடங்களாக மறைந்து வாழ்ந்த செல்வந்தர் மரணம்

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்திலுள்ள காரைதீவில் சுமார் 10 வருடங்களாக, வெளியுலகத் தொடர்பின்றி மூன்று படைகிணற்று வீடொன்றினுள் தன்னந்தனியனாக வாழ்ந்து வந்த பொறியியலாளர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

காரைதீவைச் சேர்ந்த பவளன் என அழைக்கப்படும் செல்லத்துரை நடேசானந்தம் (வயது- 57) எனும் பொறியியலாளரே இவ்விதம் மரணமானவர்.

இவர் இருவாரங்களுக்கு முன்பு மரணித்திருக்கலாமென நம்பப்படுகிறது. ஏனெனில் சடலம் உருக்குலைந்த நிலையில் காணப்பட்டது.

இவரின் சடலம் நேற்று முன் தினம் சம்மாந்துறைப் பொலிஸாரின் விசாரணையின் பின்னர், பிரேத பரிசோதனைக்காக அம்பாறை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இறந்தவர் பற்றி அவரது உறவினர்கள் கூறியதிலிருந்து தெரியவருவதாவது,

காரைதீவைச் சேர்ந்த செல்லத்துரை நடேசானந்தம் பேராதனை பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தில் பயின்றவர். பட்டப்பின் படிப்பின் பின்பு சீறா நிறுவனத்தில் பணியாற்றிருந்தார். திருமணமாகவில்லை.

பின்பு காயத்திரி மந்திரத்தில் பற்றுப்பிடித்த அவர் அவரது சகோதரியின் வீட்டின் வெளிச்சமின்றிய அறையில் தனிமையாக தியானத்தில் வாழ்ந்து வந்தார்.

இறக்கும் வரை யாருமே இவரது வீட்டுக்குள் செல்லவில்லை எனக் கூறப்படுகிறது. ஒரு தடவை விசேட அதிரப்படையினர் தேடுதலின் போது சென்றுவந்ததாகவும் தகவலொன்று தெரிவிக்கிறது.

இறுதிக்கால கட்டத்தில் அவர் தானே சமைத்து உண்பதாக தெரிவித்தமையினால் உணவுப்பொருட்கள் கொள்வனவின் நிமித்தம் கடைக்காரரொருவருக்கும் இவருக்கும் தொடர்பிருந்துள்ளது.

இத்தொடர்புகள் கடைசி ஒருவாரம் தடைபட்டிருந்ததாகவும் அவரது வீட்டுக்குச் செல்லும் குழாய்நீர்மானி (இது வீட்டிற்கு வெளியிலிருக்கிறது) வேலை செய்யாமலிருந்ததாகவும் வழமையாக வெளியில் எரியும் மின்குமிழ்கள் எரியாமலிருந்ததாகவும் வீட்டைச்சுற்றி ஒருவித துர்நாற்றம் வீசியதாகவும் சொல்லப்படுகிறது.

இதனையடுத்து கடந்த வியாழனன்று காலை அவரது உறவினரொருவர் இவர் வாழ்ந்து வந்த வீட்டுக்கதவை உடைத்து உள்ளே சென்றபோது அவர் சடலமாக கட்டிலின் குறுக்காக கிடந்துள்ளார். ஆனால் உருக்குலைந்த நிலையில் துர்நாற்றம் வீசிய நிலையில் சடலமாக கிடந்ததை பொதுமக்கள் பலரும் சென்று பார்த்துள்ளனர். (இ-10)

# வவுனியா வளாகத்தில் மாபெரும் தொழிற்சந்தை



யாழ்.பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில் வவுனியா, பம்பைமடுவில் உள்ள வவுனியா வளாகத்தில் மாபெரும் தொழிற்சந்தை நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

வவுனியா மாவட்டத்தில் தொழில்வாய்ப்பின்றி உள்ளவர்களுக்கு வழிசமைத்து கொடுக்கும் முகமாகவும் புதிய தொழில் முயற்சிகளுக்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தும் முகமாகவும் எற்பாடு செய்யப்பட்டுள்ள இத்தொழில் சந்தையை யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் திருமதி வசந்தி அரசரட்ணம் திறந்து வைத்தார்.

பல்வேறு தொழில் நிறுனங்கள் மற்றும் தொழிற் பயிற்சி வழங்கும் அரச திணைக்களங்கள் என பல இத்தொழில் சந்தையில் பிரசன்னமாகியிருந்ததுடன் இளைஞர், யுவதிகளிடம் நேர்முகத்தேர்வுகளையும் நடத்தியிருந்தனர்.

இந் நிகழ்வில் வவுனியா வளாக முதல்வர் கலாநிதி மங்களேஸ்வரன் உட்பட



விரிவுரையாளர்கள் பகுதி பீடாதிபதிகள், வளாக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை, இத்தொழிற் சந்தை நேற்றைய தினமும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (2-250)

# வீதி சீரின்மையால் மக்களுக்கான குடிநீரை கொண்டு செல்வதில் சிரமம்

## வீதியை புனரமைத்து தருமாறு கோரிக்கை

(மல்லாவி)

கிளிநொச்சி, பூநகரி, கறுக்காய் தீவு, தம்பிராய் வீதி இதுவரை புனரமைக்கப்படாமையினால் மேற்படி கிராமங்களில் வாழும் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றன.

கிளிநொச்சி பூநகரி பிரசேத்திற்கு உட்பட்ட பரந்தன், பூநகரி வீதியின் கறுக்காய் தீவுச்சந்தியில் இருந்து கறுக்காய்தீவு தம்பிராய் காவாய்க்குளம் உள்ளிட்ட கிராமங்களுக்கு செல்லும் குறித்த வீதி இன்று வரை புனரமைக்கப்படாமல் பாரிய குன்றும் குழியுமாக காணப்படுகின்றது.

குறித்த கிராமங்களில் தற்போது நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருவதுடன் எந்த அடிப்படை தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் பூநகரி வாடியடிக்கே செல்ல வேண்டிய நிலையில் குறித்த வீதியினூடாக பயணிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

அத்துடன் ஆரம்பப்பாடசாலை தவிர்ந்த ஏனைய கல்வி வசதிகளுக்கு இங்குள்ள மாணவர்கள் வேறு இடங்களுக்கு செல்ல வேண்டிய நிலையில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குடிநீர் தேவையுடைய இக்கிராமத்திற்கு பூநகரி பிரதேச சபையினால் இரண்டு நாட்களுக்கு ஒரு தடவைகள் எண்ணாயிரம் லீற்றர் தண்ணீரைக் கொண்டு செல்லவேண்டிய நிலையில் வீதி சீரின்மையால் அதனைக் கொண்டு செல்வதில் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை காணப்படுகின்றது எனவும் பிரதேச சபை நிர்வாகம் தெரிவித்துள்ளது. எனவே வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்குச் சொந்தமான குறித்த வீதியை புனரமைத்து தருமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-15)

# மாபெரும் இலவச மருத்துவ முகாம் இன்று

இளவாலை வருதப்படாத வாலிபர் சங்கம் நடத்தும் மாபெரும் இலவச மருத்துவ முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை பரந்தன்சிவபுரம் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறும்.

யாழின் முன்னணி வைத்திய நிபுணர்கள் பலரும் கலந்து கொள்ளும் இந்த மருத்துவ முகாமில் சகல மருத்துவ பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படுவதுடன் அவற்றுக்கான மருத்துகளும் வழங்கப்படவுள்ளன. எனவே தேவையுடைய அனைவரும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (2-281)

# புலம்பெயர்ந்து வாழும் பெண்ணொருவர் மூன்று குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள்

## வடக்கு மாகாண உறுப்பினர் ரவிகரன் ஊடாக வழங்கப்பட்டன



தனது கணவரின் நினைவாக மூன்று குடும்பங்களுக்கான வாழ்வாதார வலுவூட்டலை புலம்பெயர்ந்து வாழும் பெண்ணொருவர் மேற்கொண்டுள்ளார்.

குறித்த உதவியானது வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

புலம்பெயர்ந்து வாழும் பெண் தலைமைத்துவ பெண்ணொருவர் தனது கணவனின் இறந்ததின நினைவாக ஒவ்வோர் ஆண்டும் தெரிவு செய்யப்பட்ட இரண்டு அல்லது மூன்று பெண் தலை மைத்துவ குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கி வருகின்றார்.

இந்த வகையில் கடந்த 10 ஆம் திகதி தனது கணவனான இராசரத்தினம் இரட்ணசிங்கத்தின் நினைவு தினத்தன்று முள்ளியவளை பொன்னகர் கிராமத்திலுள்ள இரண்டு பெண் தலைமைத்துவ இணைந்த குடும்பங்களின் (தாயின் குடும்பமும் மகளின் குடும்பமும்) வாழ்வாதாரத்துக்கு தோட்ட செய்கைக்காக 2இஞ்சி-2பரிவலு கொண்ட நீர் அழுத்த விசைப் பொறி என்பனவும், முல்லைத்தீவு செல்வபுரத்தை சேர்ந்த ஒரு குடும்பத்திற்கு கிணற்றுத் தேவைக்காக ஐந்து சீமெந்து பக்கற்றுகளும் வழங்கப்பட்டன. (2-250-281)




# இரண்டு மாத காலத்தினுள் ஒதுக்கீடுகளுக்கான சகல வேலைத்திட்டங்களையும் நிறைவு செய்க

## வடக்கு மாகாண சபை போக்குவரத்து அமைச்சர் பணிப்புரை

திட்டங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட அமைப்புக்கள் உடனடியாக கால தாமதமின்றி தமது ஒதுக்கீடுகளுக்கான சகல வேலைத் திட்டங்களையும் இரண்டு மாத காலத்திற்குள் நிறைவு செய்து கொடுக்குமாறு வடக்கு மாகாண மீன்பிடி மற்றும் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் பணிப்புரை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன் தலைமையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் மன்னாரில் உள்ள அமைச்சர் உப அலுவலகத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இவ் அபிவிருத்தித் திட்டக் கலந்துரையாடலில் குறிப்பாக அமைச்சரின் 2016 ஆம் ஆண்டிற்கான பிரமாண அடிப்படையிலான அபிவிருத்தி நன்கொடை நிதியின் கீழ் வழங்கவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பாகவே இடம் பெற்றது.

இக் கலந்துரையாடலுக்கு அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன், அமைச்சின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஈ.சுரேந்திரனாதன், அமைச்சின் பிரதம கணக்காளர் தர்மாம்பிகை அனந்தக்கிருஷ்ணன், வீதி அபிவிருத்தி திணைக்கள மாகாணப் பணிப்பாளர் டி.சிவராஜலிங்கம், வீதி அபிவிருத்தித் திணைக்கள மன்னார், வவுனியா பிரதம பொறியியலாளர் எஸ்.ரகுநாதன், மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் சுகந்தி செபஸ்டியன், அமைச்சின் உத்தியோகத்தர்கள், மன்னார் மாவட்டத்தின் பல பாடசாலைகளின் அதிபர்கள், கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளின் அதிபர்கள், மீன்பிடி சங்கங்களின் பிரதிநிதிகள், விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள், ரோமன் கத்தோலிக்க தேவாலயங்களின் பிரதிநிதிகள், கிறிஸ்தவ தேவாலய பிரதிநிதிகள், இந்து ஆலயங்களின் பிரதிநிதிகள், பள்ளிவாசல் தலைவர்கள் மற்றும் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகிய தெரிவுசெய்யப்பட்ட அனைத்து அமைப்பினரும் கலந்து கொண்டிருந்தனர்.



குறிப்பாக, பாடசாலைகளின் பௌதீகவள அபிவிருத்திகளுக்கும், கிராம மட்ட அமைப்புக்களான கிராம/மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களின் அபிவிருத்திக்கும், மின்சார இணைப்பிற்கான உதவிகளும், சுய தொழில் வாய்ப்பிற்கான உதவிகளும், குளப் புனரமைப்பிற்கும், மீன்பிடி சங்கங்களின் பௌதீகவள அபிவிருத்திகளுக்கும், சமய பேதங்கள் இன்றி மன்னார் மறைமாவட்ட ரோமன் கத்தோலிக்க மதத் தலங்களுக்கும், மன்னார் மாவட்ட போதகர் ஐக்கியத்திற்கும், மன்னார் மாவட்ட மெதடிஸ்த தேவாலயங்களுக்கும், இந்து ஆலயங்களுக்கும், முஸ்லிம் பள்ளிவாசல்களுக்கும் அவற்றின் பௌதீகவள மேம்பாட்டிற்கும், கணனி மற்றும் பல்லூடக சாதனங்களுக்கும் இன்னும் பல வேலைத் திட்டங்களுக்குமென அமைச்சர் பல மில்லியன் ரூபாய் நிதியை ஒதுக்கி வேலைத் திட்டங்களை வழங்கியுள்ளமையும் அறிய முடிகின்றது.

இதன்போது அமைச்சர் தனது கருத்தை தெரிவிக்கையில்,

மேற்படி திட்டங்களுக்கு தெரிவுசெய்யப்பட்ட அமைப்புக்கள் உடனடியாக கால தாமதமின்றி தமது ஒதுக்கீடுகளுக்கான சகல வேலைத் திட்டங்களையும் நிறைவு செய்து பயனடையுமாறும், அதேவேளை அமைச்சின் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு மேற்படி வேலைத் திட்டங்களை விரைவாக இரண்டு மாத காலத்திற்குள் நிறைவு செய்து கொடுக்குமாறும் பணிப்புரை வழங்கினார்.

அத்தோடு இத்திட்டங்களை விரைவாக நடைமுறைப்படுத்தும்போது நிச்சயமாக இன்னும் பல நிதி மூலகங்களை தெரிவு செய்து இன்னும் பல அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப் படுத்தி மாகாணத்தை அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்ல முடியும்.

அதேவேளை கடந்த கால ஒதுக்கீடுகளில் நிதி ஒதுக்கப்படாத ஏனைய தேவைகள் உள்ள அமைப்புக்களுக்கும் அடுத்த ஆண்டுகளின் நிதி ஒதுக்கீட்டில் நிதி ஒதுக்கப்பட்டு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

மாகாணத்தின் அபிவிருத்தியில் ஒவ்வொரு மக்களும் கரிசனையோடு நடக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (2-281-312)









வன்னி குறோஸ் கலாசாரப் பேரவை நடத்தும் மாபெரும் முத்தமிழ் விழா நேற்று பிற்பகல் 4 மணியளவில் மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போது... (படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

நெருங்கிய நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் துரோகம் செய்பவர்கள் பலர் உள்ளனர்.

-விதுரர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# ஒழுக்கமற்ற கலாசாரத்தை மாற்றியமைக்க மக்களுக்கு சமயம் உறுதுணையாக வேண்டும்

## இந்து மாமன்றத்தின் விழாவில் முதலமைச்சர் வேண்டுகோள்

இன்று நாடளாவிய ரீதியில் ஒழுக்கமற்ற காடைத்தன ஆயுதக் கலாசாரம் ஒன்று கட்டவிழ்த்து விடப்படுள்ளது.

இது யாழ்ப்பாணத்தில் மிகவும் கூடுதலாக நடைபெறுவது எம் அனைவரதும் உள்ளத்தைப் பாதிப்பதாக அமைந்துள்ளது. இந்த வன்முறைக கலாசாரம் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும் என முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

அகில இலங்கை இந்து மாமன்றம் 60-வது ஆண்டு நிறைவு விழாவும் "இந்து ஒளி" வைர விழா சிறப்பு மலர் வெளியீடும் நல்லூர் ஆதீனம் கலா மண்டபத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற போது அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

1955இல் கொழும்பில் ஆரம்பிக்கப்பட்ட அகில இலங்கை இந்து மாமன்றம் பல அறிவாளிகளினதும் சமயப் பற்றாளர்களினதும் இடைவிடா முயற்சிகளின் காரணமாக பலவித இன்னல்களுக்கும் இடைஞ்சல்களுக்கும் மத்தியில் அரிய பல சாதனைகளைப் புரிந்து தற்போது 60 ஆவது வருட நிறைவு விழாவை மிகச் சிறப்பாக கொண்டாடுகிறது.

எங்கள் சமயப் பயணத்தில் ஒரு மைல்கல்லாக விளங்கக் கூடிய இந்து மாமன்றம் சாதித்தவைகள் எவை என யாழ்ப்பாணத்தில் இருக்கும் எம்மில் பலருக்கு தெரியாமல் இருக்கலாம்.

கொழும்பில் அகில இலங்கை இந்து மாமன்றத்திற்கு ஒரு கட்டடம் தேவை என்பதை நன்கு அறிந்த நிர்வாகத்தினர் கொழும்பு 2இல் அமைந்துள்ள சேர் சிற்றம்பலம் எஸ் கார்டினர் மாவத்தையில் 37 பேர்ச் அளவிலான காணியில் ஐந்து அடுக்கு கட்டடம் ஒன்றை அமைத்தது மட்டுமல்லாமல் அதன் ஐந்தாவது மாடியில் தியான வழிபாட்டு மண்டபத்தையும் உருவாக்கி ஏனைய நான்கு மாடிகளையும். குத்தகைக்கு வழங்கியுள்ளார்கள். இதில் பெறப்படும் குத்தகை வருமானத்தின் மூலமும் வேறு வருமானங்களின் மூலமும் பல சமயப் பணிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்து மாமன்றத்தின் சிறப்புக்களைப் பற்றி ஆராய்கின்ற அதே நேரத்தில் அவர்களுக்குரிய பாரிய கடப்பாடு ஒன்று இருப்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகின்றேன்.

ஆலயப் பிணக்குகள் நீதிமன்றப் படிகளுக்குச் செல்லாமல் இருக்க உங்கள் மாமன்றம் நடுத்தீர்ப்பு மையத்தை நிறுவியது. அதனை அறிமுகஞ் செய்து வைத்ததே நான் தான். ஆனால் பிணக்குகள் ஏற்படும் போது ஆலயங்களைச் சார்ந்தவர்கள் நடுத்தீர்ப்புக்கு வர மறுக்கின்றார்கள் என்று கேள்விப்படுகின்றேன். இதற்குக் காரணம் எமது சுயநலந்தான். ஆலயங்களை வைத்துப் பணம் சம்பாதிக்க முனைகின்றார்கள் சிலர்.

கிராம மட்டத்தில் மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்பட்டு விட்டால் தனி நபர்களின் தகாத நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம்.

யுத்தமானது எமது மனங்களைக் கல்லாக்கி விட்டது. கரடுமுரடாக்கி விட்டது. இயல்பு வாழ்க்கைக்கு மக்களைத திரும்ப வைக்க எமது சமயமானது உறுதுணையாக இருக்க வேண்டும்.

எமது சமூகத்தினிடையே இன்று உடலை வருத்தி உழைத்து முன்னேற வேண்டும் என்ற அந்த உணர்வு, பூரணமாக அற்றுப்போய் எந்த நேரமும் எவரேனும் உதவிகளை வழங்கிய வண்ணம் இருக்க வேண்டும், தாம் அவர்களின் உதவியுடன் நன்றாக உணவருந்தி உடை உடுத்தி ஊர் சுற்ற வேண்டும் என்ற புதிய கலாசாரம் ஒன்று பிறந்திருக்கின்றது. இதனால்தான் நல்ல குடும்பங்களில் பிறந்த மாணவர்கள் கூட உயர் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் கூட குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருவதாகத் தெரிய வந்துள்ளது. என்னிடம் வேலை கேட்டு வரும் இளைஞர்கள் பலரின் குறிக்கோள் வெளிநாடு செல்ல வேண்டும் என்பதே.

உழைப்பின் உயர்ச்சியை நாம் உணர வேண்டும். சும்மா கிடைக்கும் பணம் சும்மாவே விரக்தியாகும். சுற்றிப் பார்த்தால் இது புரியும். மாணவ சமுதாயத்திற்கு இந்த உண்மையை நாங்கள் எடுத்துக் கூற வேண்டும் என்றார். (12)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

கிளிநொச்சி அக்கராயன் பிரதேசத்தைச் சேர்ந்த வாழ்வின் எழுச்சி பயனாளிகளுக்கான பொதுக்கூட்டம், நிர்வாகத் தெரிவு என்பன நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கெங்காதரன் குடியிருப்பு பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறும்.

இதன்போது மேற்படி பயனாளிகளின் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்படுவதுடன் கிழங்கு செய்கை, இலை வகை மரக்கறிப் பயிர்ச்செய்கை பயனாளிகள் தெரிவும் சிரமதானப் பணி என்பனவும் நடைபெறும். (2-272)

## சர்வதேச புகைத்தலுக்கு எதிரான தினம்- மே.31

*நீறாய் போவாய் நீயும்- என்று*
*நிறையவே உணர்த்தின- சிகரெட்டுக்கள்*
*மீளாத் துயிலில் கிடப்பதென்ன*
*மீளும் வழியை அறிவதெப்போ?*

*கோடி கோடியாய் பணம் கொடுத்து*
*கொடிய நோய்கள் வாங்குவதா?*
*புகைத்தலை தவிர்த்தால் என்ன?*

**சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை,**
**யாழ்.மாநகர சபை.**

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து 5.30 மணி வரை வவுனியா பிரதேசத்தில குருமன்காடு பிரதேசத்தில் மின் தடைப்படும். (இ-9)

# ஈழத் தமிழ் மக்களுக்கு கருணாநிதி என்றும் ஆதரவாம்

நடந்து முடிந்த தமிழக சட்டசபைத் தேர்தலில் கலைஞர் கருணாநிதி தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகம் பலமான எதிர்க்கட்சியாக தெரிவாகியுள்ளது.

இந்நிலையில் எதிர்க்கட்சித் தலைமை கிடைக்கப்பெற்ற கலைஞர் கருணாநிதிக்கு எங்கள் நாட்டின் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமாகிய இரா.சம்பந்தர் வாழ்த்துத் தெரிவித்திருந்தார்.

சம்பந்தரின் வாழ்த்தைக் கண்ட கலைஞர் கருணா நிதி உடனடியாகவே அதற்கு நன்றி தெரிவித்து கடிதம் எழுதியதுடன் அக் கடிதத்தில் ஈழத்தமிழர்களுக்கு என் ஆதரவு எப்போதும் இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

ஈழத் தமிழர்களுக்கு கலைஞர் கருணாநிதியின் ஆதரவு எப்போதும் தேவையில்லை. 2006-2009 காலப்பகுதியில் அவரின் ஆதரவு ஈழத் தமிழர்களுக்கு இருந்திருந்தால், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் என்ற பேச்சுக்கே இடமில்லாமல் போயிருக்கும்.

எத்தனையோ ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் இன்றும் உயிர் வாழ்வதற்கு வாய்ப்புக் கிடைத்திருக்கும். இருந்தும் அதைக் கலைஞர் கருணாநிதி செய்யத் தவறினார்.

2006-2009 காலப்பகுதியில் தமிழகத்தின் முதல்வராக இருந்த கலைஞர் கருணாநிதியின் ஆதரவுடனேயே மத்தியில் காங்கிரஸ் ஆட்சி நடத்தியது.

அன்று கருணாநிதி நினைத்திருந்தால் மத்திய அரசுடன் கதைத்து வன்னி யுத்தத்தை நிறுத்தியிருக்க முடியும். ஆனால் அவர் அதைச் செய்யவேயில்லை.

தமிழகத்தின் முதலமைச்சராக இருந்தபோது இலங்கைத் தமிழர்களுக்கு காலம் உணர்ந்து செய்யவேண்டிய உதவியைச் செய்யாதவர் இப்போது இலங்கைத் தமிழர்களுக்கான தனது ஆதரவு என்றும் இருக்கும் எனக் கூறியமை ஆச்சரியத்துக்குரியதுதான்.

இந்த ஆதரவு என்பது கலைஞர் கருணாநிதியின் வழமையான பழக்கத்தின் தொடர் என்று கூறிக்கொள்ளாமே தவிர மற்றும்படி அவரின் ஆழ்மனதில்இருந்து கூறப்பட்டதல்ல இது என்பது தெட்டத்தெளிவு.

எனினும் கலைஞர் கருணாநிதி எழுதிய கடிதத்தை நம்புவதற்கு எங்களிடமும் அரசியல் தலைமை உண்டு என்பதுதான் எங்களின் அறுந்த தலைவிதி.

2008 களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்திப்பதற்கு திட்டமிட்டிருந்தது.

வை.கோபாலசாமியின் உதவியுடன் இச் சந்திப்பு நடப்பதாக இருந்தது. பிரதமர் மன்மோகன் சிங்கை சந்திப்பதற்காக இந்தியா சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வை.கோபாலசாமியின் உதவியை நாடியதன் காரணமாக அந்த சந்திப்பு இடம்பெறுவதற்கு அன்றைய தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி தடை செய்திருந்தார். தன்னை மீறி இச் சந்திப்பு நடப்பதாக நினைத்த அவரின் கர்வம் அப்படியொரு தடையை செய்தது.

இவ்வாறாக நடந்து கொண்ட கலைஞர் கருணாநிதி இப்போது இலங்கைத் தமிழர்களுக்கு தனது ஆதரவு என்றும் இருக்குமென்றால், அது எங்கே? எப்போது? ஏன்? என்றவாறான கேள்விகள் எழுவது நியாயமானதே.

இந்தக் கேள்விக்கான பதில், தமிழ் மக்கள் படும் துன்பத்திற்கு; அவலத்திற்கு கலைஞர் கருணாநிதியின் ஆதரவு என்றுமிருக்கும் என்பதாக அமையும்.

# பகிர்தல் வாழ்வுக்கு மனநிலை மாற்றம் மிக அவசியம்

இன்று கத்தோலிக்கத் திருச்சபையானது இயேசுவின் திருவுடல் திரு இரத்தப் பெருவிழாவைக்கொணடாடுகிறது.இயேசு தம் திருவுடலையும், இரத்தத்தையும் நமக்கு தமது உளப்பூர்வமான ஆன்மீக உணவாகத் தருவதையே இது எமக்கு தெளிவுபடுத்துகிறது.

## பரமபிதா காட்டிய பாதை

இயேசு கிறிஸ்து தமது இராப்போசனத்தின்போது அப்பத்தையும் இரசத்தையும் தமது உடலும் இரத்தமும் எனக்கூறி அதனை தம் சீடர்களுக்குப் பகிர்ந்தளிக்கிறார்.

உலகின் பாவங்களுக்காக சிந்தப்படப்போகும் இரத்த சாட்சியான தமது சொந்த உயிர்ப்பலியின் நினைவாக இதனை அவா இங்கு முன்னறிவிக்கிறார்.


'இரத்தம் சிந்துதல் இன்றி பாவ மன்னிப்பு இல்லை". எனவே, எமக்காக தன்னை கையளித்த இயேசுவின் இத்தியாகத்திற்குப் பிரதியுபகாரமாக் நாம் நமது இரத்தத்தைச் சிந்தாவிட்டாலும், பிறர் வாழ தியாகங்கள் செய்ய முன்வருவோமாக.

'இயேசுவின் திரு உடல் திருஇரத்த பெருவிழாவிற்கு வரலாற்று ரீதியான உண்மைகளும் உண்டு.

இவற்றின் அடிப்படையிலேயே 1264ஆம் ஆண்டு திருத்தந்தை நான்காம் அர்பன் இயேசுவின் இந்த திரு உடல் திருஇரத்த திருவிழாவை தொடங்க கட்டளை பிறப்பித்தார்.

அப்பம் ஏந்தும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பகிர்தலின் ஞாபகம் நமக்கு உணர்த்தப்படுகிறது. எனினும் அப்போது எம் மனநிலையில் மாற்றம் ஏற்படுகிறதா என்பதே நாம் சிந்திக்கவேண்டியது. ஏனெனில் பகிர்தல் வாழ்வுக்கு மனநிலை மாற்றம் மிக அவசியம்.

கல்மனம் படைத்தவர்களால் பகிர்ந்து வாழமுடியாது. இயேசு திருவுடல் திரு இரத்தப் பெருவிழா நமக்கு இன்னுமொரு செய்தியையும் தருகிறது. அப்பத்தின் வடிவில் இயேசுவின் உடலையும் இரசத்தின் வடிவில் அவரது இரத்தத்தையும் உண்ணும் நாம்



அவரது திருவுளப்படி வாழ முற்படுகிறோமா? நம்மில் அதற்கான மனமாற்றம் ஏற்படுகிறதா என்பதையும் சிந்திக்க வேண்டும் இத்

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

தகைய. சிந்தனைகள் ஏற்படுத்தும் மாற்றமே இப்பெருவிழாவை அர்த்தமுள்ளதாக்கும்.

## ஹென்றீசியன் சவால் கிண்ணம் சென்.லூசியஸ் அணி வெற்றி



இளவாலை ஹென்றீஸ் இளைஞர் விளையாட்டுக்கழகம் ஹென்றீசியன் சவால் கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இரண்டாவது சுற்றின் விலகல் முறையிலான ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை 8:15 மணியளவில் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் மானிப்பாய் ரெட்ரேஞ்சர்ஸ் அணியை எதிர்த்து மன்னார்.பள்ளிமுனை சென் லூசியஸ் அணி மோதியது.


கடந்த ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியுடன் சிறப்பாக ஆடியிருந்த ரெட்ரேஞ்சர்ஸ் அணி இப்போட்டியில் சென்லூசியஸ் அணி வீரர்களின் சிறப்பான பந்துப் பரிமாற்றத்தை (ball passing) சாமாளிக்க முடியாது அடுத்தடுத்து கோல்களை விட்டது.

சென்லூசியஸ் அணியின் வலது கரை முன்கள வீரர் ராபர்ட் சிறப்பாக ஆடி அதிகளவு கோல்போடும் வாய்ப்புக்களை crossing மூலம் ஏற்படுத்தினார்.

ஆரம்பத்தில் ரெட்ரேஞ்சர்ஸ் அணிக்கோல் காப்பாளர் சிறப்பாக செயற்பட்டு அவற்றைத்தடுத்த போதும் மத்தியகள வீரர்கள் சிறப்பாக ஆடாததால்சென்லூசியஸ் அணி வீரர்களின் சந்தர்ப்பத்தை உருவாக்கும் தன்மை அதிகமாகக் காணப்பட்டது

இதனைப்பயன்படுத்திய சென்லூசியஸ் அணி அடுத்தடுத்து கோல்களைப் போட்டது. மேலும் இரண்டாவது பகுதியில் முழு ஆதிக்கம் செலுத்திய அவ்வணி S.டிசந்தன், R.யூலியன் ஆகியோரின் உதவியுடன் மேலும் 3 கோல்களைப் போட்டு 5:0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்று B பிரிவில் லீக் சுற்றுக்குத் தகுதிபெற்றது. (க)

## அடம்பன் ஐக்கிய வி.கழகம் அடுத்த சுற்றுக்கு முன்னேற்றம்







பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் வி.க நடத்தும் "வடமாகாண வல்லவன்" உதைபந்தாட்ட தொடரில் முதலாவது சுற்று ஆட்டத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற முதலாவது போட்டியில் அடம்பன் ஐக்கிய வி.க எதிர்த்து கருணாகரன் வி.க விளையாடியது.

ஆட்டத்தின் 15,16 ஆவது நிமிடங்களில் அடம்பன் ஐக்கிய வி.க வீரர்கள் யுஸ்ரின் மற்றும் சதீஸ் ஆகியோர் கோலினை அடித்து எதிரணியை அச்சுறுத்தினர்.

தொடர்ந்து இரண்டாவது பாதி ஆட்டத்தில் 59 ஆவது நிமிடத்தில் மேலும் ஒரு கோலினை யுஸ்ரின் அடித்தார். கருணாகரன் வி.க சார்பில் கோல் பெற பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் எதிரணியினரால் இலாபகமாக தடுக்கப்பட்டது.

ஆட்ட நேர முடிவில் 3:0 என அடம்பன் ஐக்கிய வி.க வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

போட்டியின் ஆட்ட நாயகனாக 2 கோல்களை அடித்த அடம்பன் ஐக்கிய வி.க வீரர் யுஸ்ரின் தெரிவு செய்யப்பட்டு அவரிற்கான பணப்பரிசு மற்றும் பதக்கத்தினை கழக நலன் விரும்பி த. பாலச்சந்திரன் வழங்கி கௌரவித்தார். (க)

## வடமாகாண வீரர்கள் பங்குபற்றிய இலங்கை உதைபந்தாட்ட அணி வெற்றி



Macau நாட்டினை வீழ்த்தி தமது முதல் போட்டியில் வெற்றி பெற்றது இலங்கை U-19 அணி.

கொரியா நாட்டில் நடைபெற்று வரும் 19 வயதுகுட்பட்டவர்களுக்கான "44th Asian School Championship-2016" சுற்றுத் தொடரில் பங்குபற்றி வரும் எம் வட மாகாண வீரர்களை உள்ளடக்கிய இலங்கை அணி, அண்மையில் இடம்பெற்ற Macau நாட்டிற்கு எதிரான தமது முதல் போட்டியில் 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுள்ளது.

இலங்கையில் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட பல்வேறு சுற்றுத்தொடர்களில் தொடர்ந்தும் தமது திறமையை நிருபித்த வீரர்களை உள்ளடக்கிய 20 பேர் கொண்ட குழு கடந்த வாரம் கொரியா நாட்டிற்கு பயணமாகியது.

இந்த குழுவில் எம் வடக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஐந்து வீரர்கள் இடம்பிடித்திருந்தனர். உதைபந்தாட்டத்தில் வடக்கின் முடிசூடா மன்னர்களாக திகழும் யாழ். ஹென்றியரசர் கல்லூரி வீரர்களான அ.மதுசன், செ. யூட சுமன் மற்றும் நே. அன்ரனி ரமேஷ் மற்றும் யாழ்.மத்திய கல்லூரியின் வீரர்களான விதுசன் மற்றும் சயந்தன் ஆகியோர் இடம் பிடித்திருந்தனர். (க)

# J.P.L வெற்றிக்கிண்ணம்

## விங்ஸ் அணியை வென்றது அரியாலை சென்றல் வி.கழகம்

JPL வெற்றிக்கிண்ணத்திற்காக யு.ஆர். பவுண்டேசன் 4 ஆவது ஆண்டாக நடத்தி வரும் 20 பந்து பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டியின் 4 ஆவது தகுதி காண் போட்டி கடந்த ஞாயிற்றுக் கிழமை (22/05/16) முற்பகல் 11 மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் அரியாலை சென்றல் அணி விங்ஸ் அணியை 5 ஓட்டங்களால் வெற்றி பெற்று தனது முதலாவது வெற்றியை பதிவு செய்துள்ளது. முதலில் துடுப்பெடுத் தாடிய அரியாலை சென்றல் அணி 17.3 ஓவர்களில் சகல இலக்கு களையும் இழந்து 100 ஓட்டங்களை பெற்றது. துவாரகன்-18, கோபிராம்-37, விசா கன்-13, சரவணன்-13 ஓட்டங்களைப் பெற்றனா. களத்தடுப்பில் லிங்ஸ் அணி சார்பாக நிரூபன்-13, மைக்கல் -01, எட்வின் -01 சுரேன்-02 இலக்குகளை கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய லிங்ஸ் அணி 15 ஓவர்களில் 9 இலக்குகளை இழந்து 95 ஓட்டங்களை பெற்றது. ஜெயந்திரன் -13, யூட்-10, சுரேன்-35 ஓட்டங்களை பெற்றனர். யனகன்-01, டிசான்-02, சதீஸ்-01, நிரோஜ்-03, டிலான்-01 இலக்கினை கைப்பற்றினர். இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் தரவரிசை பட்டியலுக்கு அரியாலை சென்றல் அணி 3.95 புள்ளிகளையும் விங்ஸ் 1.95 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (க)

# யாழ்.மாவட்ட கடற்கரை கபடி போட்டி

## பருத்தித்துறை,தெல்லிப்பழை அணிகள் சம்பியன்









கடற்கரை கபடிப் போட்டியில் ஆண்கள் பிரிவில் பருத்தித்துறை பிரதேச அணியும் பெண்கள் பிரிவில் தெல்லிப்பழை அணியும் சம்பியன்கள் ஆகின.

வடமாகாண விளையாட்டுதிணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களுக்கான கபடிப்போட்டி அண்மையில் வல்வெட்டித்துறை கடற்கரைப்பகுதியில் நடைபெற்றது.

ஆண்களுக்கான இறுதிப்போட்டியில் பருத்தித்துறை பிரதேச அணியும் தெல்லிப்பழை பிரதேச அணியும் பலப்பரீட்சை நடத்தின. இறுதியில் 58:24 என்ற ரீதியில் பருத்தித்துறை பிரதேச அணி சம்பியனாகியது.

பெண்களுக்கான இறுதிப்போட்டியில் தெல்லிப்பழை பிரதேச அணியும் பருத்தித்துறை பிரதேச அணியும் மோதிக் கொண்டன . மிகவும் பரபரப்பான போட்டியில் 38:33 என்ற ரீதியில் தெல்லிப்பழை பிரதேச அணி சம்பியனாகியது. (க)

SPORTS விளையாட்டுச் செய்திகள்

## இன்றைய போட்டி

அராலி வடக்கு திருமகள் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்டத்திலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையே உதை பந்தாட்ட போட்டியை அராலி வடக்கு மடத்தடி திருமகள் விளையாட்டுக் கழகமைதானத்தில் நடத்துகின்றது. இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும்போட்டியில்சென்.மேரிஸ் விளை யாட்டுக்கழகத்தை எதிர்த்து மாவத்தை விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (க)

# இல.தமிழர்...

லில் நான் பெற்ற வெற்றி குறித்த உங்களது பாராட்டுக் கடிதத்திற்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக மக்களின் தொப்புள் கொடி உறவுகளான இலங்கைத் தமிழர்கள் நலன் காக்க, அவர்கள் உரிய நீதியைப் பெற என்னால் இயன்ற நடவடிக்கைகளைக் கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற முறையில் நான் எடுத்துள்ளேன்.

வடகிழக்கு மாகாணத் தமிழர்கள் உரிய நீதியைப் பெறும் வகையில் இந்திய அரசின் மூலம் தொடர்ந்து நடவடிக்கைகள் எடுப்பேன் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகம் மற்றும் வடகிழக்கு மாகாணத் தமிழர்கள் உறவு மேலும் வலுவடையும் வகையில் என்னை சந்திக்க நீங்கள் விழைவது குறித்து மிக்க மகிழ்ச்சி.

இருவருக்கும் வசதிப்படும் ஒரு நாளில் நாம் நிச்சயம் சந்திக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களது நல்வாழ்த்துகளுக்கு மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று ஜெயலலிதா அதில் குறிப்பிட்டுள்ளார். அதேபோன்று தமிழக சட்டமன்றத்துக்கு 13ஆவது முறையாக தெரிவு செய்யப்பட்ட தி.மு.கவின் தலைவர் கருணாநிதிக்கு இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் வாழ்த்துத் தெரிவித்து கடிதம் அனுப்பியிருந்தார்.

அதற்கு, இலங்கை தமிழர்களுக்கான தனது ஆதரவு எப்போதும் தொடரும் என்று இரா.சம்பந்தனுக்கு கருணாநிதி அனுப்பியிருந்த பதில் கடிதத்தில் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (12)

# தமது காணிகளையே...

மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். ஜப்பான் சென்றுள்ள ஜனாதிபதி, நகோயா நகரில் வாழ்ந்து வரும் இலங்கைப் பிரஜைகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், இலங்கையின் தேசிய பாதுகாப்பு தொடர்ந்தும் பலமான நிலையில் உள்ளதுடன், எந்த வகையிலும் அது வலுவிழந்து காணப்படவில்லை என சுட்டிக்காட்டியுள்ளார்.

சந்தர்ப்பவாத அரசியல் சக்திகளினால் முன்னெடுக்கப்படும் உண்மைக்குப் புறம்பான பிரசாரங்களால் ஏமாற்றமடைய வேண்டாம்.

யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் நிறைவேற்றப்பட வேண்டிய பொறுப்புகளை உரியவாறு நிறைவேற்றாமையால், தற்போதைய அரசாங்கமே சர்வதேசத்திற்கு பதிலளிக்க வேண்டியுள்ளது.

ஜப்பான், வியட்நாம், கொரியா போன்ற நாடுகள் யுத்த வெற்றியை நிலையான வெற்றியாகக் கொண்டு உலகின் பலமான நாடுகளாக மாறியபோதிலும், இலங்கையினால் அவ்வாறு தோற்றம் பெறமுடியவில்லை.

தேசிய நல்லிணக்கம், 27 வருடங்களாக வடக்கிலும், தெற்கிலும் மக்களிடையே நிலவிய சந்தேகம் மற்றும் அவநம்பிக்கையை செங்கற்களாலும், சீமெந்தினாலும் கட்டியெழுப்ப முடியாதெனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (12)

# எமது நிகழ்ச்சிகளை...

அவருக்கும் கடற்படை அதிகாரி ஒருவருக்கும் ஏற்பட்ட வாய்ச்சண்டையை அடுத்து அவர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளை இனி முப்படைகளும் புறக்கணிப்பார்கள் என்று கடற்படை அதிகாரிகள் தெரிவித்தார்.

இந்த சர்ச்சையை அடுத்து இரு தரப்புகளையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விளக்கம் கோரியிருந்தார்.

இதனிடையே, நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய இருவருக்கும் எழுதிய கடிதம் ஒன்றில், முதல்வர் நசீர் அஹ்மட், இந்த சம்பவத்தில் கலந்து கொள்ள சென்றிருந்த தனது பெயரையும், மாகாண கல்வி அமைச்சர் பெயரையும், நிகழ்ச்சி தொகுப்பாளர் படிக்கவில்லை என்று குறிப்பிட்டார்.

இருந்தாலும், இந்தத் தவறை கவனித்த மாகாண ஆளுநர், தன்னை மேடைக்கு வருமாறு சைகை செய்ததாகவும், அதையடுத்து, தான் மேடையில் ஏற முயன்றபோது, நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளராக செயல்பட்ட கடற்படை அதிகாரி ஒருவர் தன்னை மேடையில் ஏற விடாமல் தடுத்ததாகவும் குறிப்பிட்டார் நசீர் அஹ்மட்.

இந்த அதிகாரியின் நடத்தை மிகவும் மோசமானதாக இருந்ததாக வர்ணித்த முதல்வர், இது தன்னை அதிர்ச்சியுற வைத்ததாகவும், இந்தச் செய்கையை தான் கண்டித்ததாகவும் கூறினார். இந்த அதிகாரிகள் முறையான அதிகாரபூர்வ வழிமுறை களைப் பின்பற்ற உத்தரவிடாததற்கு, அவர் ஆளுநர் மீதும் பழி சுமத்தினார்.

தான் அமெரிக்க தூதர் மற்றும் பெருந்திரளாகக் கூடியிருந்த மக்கள் கூட்டத்தின் முன்னர் அவமானப்படுத்தப்பட்டதாக உணர்ந்ததாகவும் நசீர் அஹ்மட் கூறினார்.

ஜனாதிபதியும் , பிரதமரும் இந்த சம்பவம் குறித்து விசாரிக்கும் முன்னரே, முப்படைகள் தான் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளை புறக்கணிக்கப் போவதாக முடிவெடுத்திருப்பது, தவறிழைத்த தங்கள் அதிகாரிகளை பாதுகாக்கும் குறுகிய நோக்கிலேயே எடுக்கப்பட்ட ஒரு அரசியல் முடிவு என்று அவர் கூறினார்.

இந்த சம்பவத்துக்குப் பொறுப்பான அதிகாரிகள் மன்னிப்புக் கோரவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

தனது கடுமையான , ஆனால் நியாயமான நடவடிக்கைக்காக தான், விழாவில் கூடியிருந்த வெளிநாட்டுத் தூதர், பள்ளி ஊழியர்கள் மற்றும் மாணவர்கள் மற்றும் சம்பந்தபட்ட கடற்படை அதிகாரியிடம் மன்னிப்பு கோர தயங்க மாட்டேன் என்றும் கூறிய முதல்வர், இந்த விஷயத்தில் மேலும் நடவடிக்கைகளை ஜனாதிபதி மற்றும் பிரதமரிடமே விட்டுவிடுவதாகக் கூறியிருந்தார். (12)

# முல்லைத்தீவு...

ப்பட்டிருந்தார்

குறித்த வழக்கு நீதிமன்றில் நடைபெற்று வரும் நிலையில் நேற்றைய தினம் குறித்த நபர் வீட்டில் இருந்த சமயம் சிவில் உடையில் வந்த இரு பொலிஸார் அவரை கைது செய்யப்போவதாக தெரிவித்துள்ளனர்

இந்த நிலையில் இரு தரப்பினருக்குமிடையில் நடைபெற்ற வாக்குவாதத்தின் போது பொலிஸார் துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர். பின்னர் சம்பவ இடத்துக்கு வந்த மேலும் சில பொலிஸ் அதிகாரிகள் குறித்த நபரை கைது செய்துள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் எந்தவிதமான காயமும் ஏற்படவில்லை எனவும் கைது செய்ததற்கான காரணம் எதுவும் இதுவரை தமக்கு தெரிவிக்கவில்லை எனவும் கைது செய்யப்பட்டவரின் தாயார் தெரிவித்துள்ளார். (9)

# மகிந்த ராஜபக்ஷ...

திகதி ஜப்பானுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். அவருடன் கூட்டு எதிர்க்கட்சியைச் சேர்ந்த சிலரும் ஜப்பான் செல்லவுள்ளனர்.

ஜப்பானில் வசிக்கும் இலங்கையர்கள் சிலரின் அழைப்பின் பேரிலேயே, மகிந்த ராஜபக்ஷ அங்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

அவருடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விமல் வீரவன்ச மற்றும் பிரசன்ன ரணதுங்க ஆகியோரும் ஜப்பான் செல்லவுள்ளதாக கூறப்படுகிறது.

கடந்த ஆண்டு அதிபர் தேர்தலில் தோல்வியடைந்த பின்னர் மகிந்த ராஜபக்ஷ மேற்கொள்ளும் மூன்றாவது வெளிநாட்டுப் பயணம் இதுவாகும். ஏற்கெனவே அவர் தாய்லாந்து மற்றும் உகண்டாவுக்கான பயணங்களை மேற்கொண்டிருந்தார். (12)

# இராணுவத்தை...

தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் கிரியெல்ல, முதலமைச்சர் கோபமாக பேசிவிட்டார் என்பதற்காக ராணுவ முகாம்களுக்குள் அவர் நுழையத் தடைவிதித்து ராணுவத்தினர் கட்டுப்பாடு விதித்துள்ளனர்.

ஆனால் முதலமைச்சருக்கு ராணுவ முகாம்களுக்குள் நுழைய எந்தவித தேவையும் இல்லை.

அதே நேரம் பதிலுக்கு ராணுவத்தினர் எந்தவொரு பாடசாலைக்குள்ளும் நுழையக் கூடாது என்று முதலமைச்சர் உத்தர விட்டால் ராணுவத்தினர் என்ன செய்ய முடியும்? ஏனெனில் அவ்வாறு உத்தரவிடும் அதிகாரம் முதலமைச்சருக்கு உண்டு என்றும் உயர்கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்குப் பதிலளித்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஒவ்வொருவரும் தாம் விரும்பிய வகையில் தீர்மானங்களை எடுக்க முடியாது. அரசாங்கம் அதற்கு இடமளிக்கப் போவதில்லை. ஜனாதிபதி நாடு திரும்பிய பின்னர் இதுகுறித்து தீர்க்கமான முடிவொன்றை எடுப்போம் என்று தெரிவித்துள்ளார். (12)

# வெளியுறவு செயலர் இலங்கை வருகிறார்

(கொழும்பு)

நோர்வேயின் வெளியுறவு அமைச்சின் இராஜாங்க செயலாளர் டோர் கட்ரோம் எதிர்வரும் 31ஆம் திகதியன்று இலங்கை வரவுள்ளார்.

அவர் இலங்கையில் ஜூன் 2ஆம் திகதி வரை தங்கியிருப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அவர் இலங்கையின் வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீரவை எதிர்வரும் செவ்வாய்க்கிழமையன்று சந்திக்கவுள்ளார்.

இந்தநிலையில் இலங்கைக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் வரவுள்ள நோர்வேயின் வெளியுறவு அமைச்சர் போர்ஜ் பிரேன்டேயின் விஜயத்துக்கு முன்னோடி விஜயமாகவே டோர் கட்ரோமின் விஜயம் அமையவுள்ளது.

கட்ரோம், இலங்கையில் எதிர்க்கட்சி தலைவர் சம்பந்தன், அமைச்சர் மலிக் சமரவிக்கிரம, அமைச்சர் ரவூப் ஹக்கீம் உள்ளிட்டவர்களை சந்திக்கவுள்ளார்.

இதனைவிட வடக்குக்கு சென்று ஆளுநர் ரெஜினோல்ட் கூரே, முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஆகியோரையும் அவர் சந்திக்கவுள்ளார்.

கட்ரோம், ஏற்கெனவே 2007ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டு வரை, இலங்கையில் நோர்வே தூதுவராக செயற்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (12)

# தென்பகுதியில்...

மைத்துவ மையம் கூறியுள்ளது. அதேவேளை மத்திய மாகாணத்தில் கண்டி, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் ஆங்காங்கே நிலச்சரிவுகள் சிறிய அளவில் இடம்பெற்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக நிலச்சரிவு அபாயம் காரணமாக நுவரெலியா மாவட்டத்தில் சாமிமலை தோட்டத்தில் 41 குடும்பங்களை சேர்ந்த 100 பேர் குடியிருப்புகளிலிருந்து வெளியேறி சிறுவர் பாடசாலையிலும் ஆலயத்திலும் தங்கியுள்ளனர்.

மஸ்கெலியா கார்மோர் தோட்டத்தில் நேற்று ஏற்பட்ட மண்சரிவினால் 200 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

இதேவேளை ஜின் கங்கை மீண்டும் பெருக்கெடுத்தோடத் தொடங்கியிருப்பதன் காரணமாக நேற்றுக் காலை காலியில் பல இடங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. ஜின் கங்கை அருகேயுள்ள தாழ் நிலப் பகுதிகளே இவ்வாறு வெள்ளத்தினால் மூழ்கடிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக உடுகம-பத்தேகம மற்றும் உடுகம நெளுவ வீதிகள் வெள்ளத்தினால் மூழ்கடிக்கப்பட்டு போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தென்னிலங்கை அதிவேகப் பாதையின் வெலியன்ன பிரதேசத்திலும் வெள்ளம் சூழ்ந்துள்ளது. மழை தொடர்ந்தும் பெய்யும் பட்சத்தில் வெலிபன்னை பிரதேசத்தில் அமைந்துள்ள தென்னிலங்கை அதிவேகப் பாதைக்கான நுழைவாயிலை மூட வேண்டி ஏற்படலாம் என்று அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

இதேவேளை கடந்த வாரம் அரநாயக்க பிரதேசத்தில் ஏற்பட்ட மண் சரிவில் புதையுண்ட 100 பேரும் உயிரிழந்திருப்பதாக அதிகாரிகள் அறிவித்துள்ளனர். (12)


## மரண அறிவித்தல்

### திருமதி கனகரட்ணம் அரிதேவி



யாழ்.பொன்னாலையைப் பிறப்பிடமாகவும், இந்தியாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கனகரட்ணம் அரிதேவி கடந்த 26.05.2016 வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 29.05.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் பொன்னாலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பொன்னாலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பொன்னாலை,
சுழிபுரம்.

(4803)

தகவல்:-
குடும்பத்தினர்.




எமது கல்லூரி ஆசிரியர் திரு.ப.சுதர்சன் அவர்களின் அன்புத் தந்தையார்
ஆனந்தமணி பஞ்சநாதன் அவர்கள் காலமானதையிட்டு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைக் குடும்பத்தினருக்குத்
தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்,**
**யா/கொக்குவில் இந்துக் கல்லூரி**

## காணி விற்பனைக்கு

சித்தன்கேணி பண்டத்தரிப்பு
பிரதான வீதியில் வடலியடைப்பு
அரசடி சனசமூக நிலையத்துக்குப்
பின்புறத்தில் 2 வது காணி நிலப்
பரப்பு 4 குளி - 3ம் விற்பனைக்குண்டு.
(நன்னீர்க் கிணற்று வசதியும் உண்டு)

(4786)

தொடர்புகளுக்கு :-
077 4434 501

## காணி விற்பனை

அளவெட்டி வீரபத்திரர் கோவிலடிக்கு
அருகாமையில் தெல்லிப்பளை
பிரதான வீதியில் 2 1/2 பரப்பு
காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு :-
077 6393 868

(4790)

## விற்பனையாளர் தேவை

யாழ் நகரில் உள்ள புடைவை விற்பனை நிலையத்துக்கு அனுபவமுள்ள, பழக விரும்பும் ஆண்,பெண் விற்பனையாளர் உடன் தேவை.

குறிப்பு :- யாழ் நகரை அண்டிய பிரதேசத்தில் வசிப்பவர்களாக இருக்க வேண்டும்

சிட்டை எழுதுனர் : பெண் வயது (18-30)

தொடர்புக்கு :- 077 293 5095
021 321 3117

(C-4733)

## Group Classes - Science

By.Mr.RAGUMAR
Grade-
6,7,8,9,10,11
(English Medium)
(Kalviyankadu)

077 6059650

[4774]

## CCTV துறையில் வல்லுனர் ஆவதற்கு இதோ ஓர் அரிய வாய்ப்பு

(B-4730)



9th Batch start on :- 11.06.2016

100% தொழில் சார்
செயன்முறை பயிற்சிநெறி

வேலைவாய்ப்பு உத்தரவாதம் *
(*Conditions apply)

iCS EDUCATION
77, மணிக்கூட்டு கோபுர வீதி
யாழ்ப்பாணம்
(பெருமாள் கோவில் அருகாமையில்)
076-7013060 , 021-7306000

## அலுவலக வேலை வாய்ப்பு

ELLAAM (PVT)LTD V2 TRAVELS & TOURS

- அலுவலக முகாமைத்துவம் - OFFICE ADMINISTRATION
- வியாபார முகாமைத்துவம் - BUSINESS ADMINISTRATION
- வியாபாரத்திற்கான ஆங்கிலம் - ENGLISH FOR BUSINESS
- வாடிக்கையாளர் சேவை முகாமைத்துவம் - CUSTOMER CARE MANAGEMENT
- அடிப்படை கணக்கியல் - BASIC ACCOUNTING
- விமான ரிக்கற் பதிவு கற்கைநெறி - AIRLINE TICKET BOOKING SYSTEM
- சுற்றுலாத்துறை முகாமைத்துவம் - INBOUND,OUTBOUND TOURISM
- அடிப்படை கணினி பயிற்சி - MS OFFICE (Word,Excel,Powerpoint )
- விளம்பரம் - MARKETING
- போட்டோ சொப் - PHOTOSHOP

நீங்கள் 18 தொடக்கம் 30 வயதிற்கு இடைப்பட்டவரா? நீங்கள் விரும்பிய வேலையை உடனே பெற்றுக்கொள்ள மேற்குறிப்பிட்ட அனைத்து விடயங்களையும் உள்ளடக்கிய வேலை அனுபவத்தினை பெற்றுக்கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:0768226243

AIRLINE TICKETING ,INTERNATIONAL & DOMESTIC COURIER SERVICES,DESIGNING, MARKETING, CUSTOMER CARE போன்ற பல்வேறு சேவைகளில் ஈடுபட்டுவரும் எம்முடன் இணைந்து பயிற்சியுடன் கூடிய நேரடி வியாபார அனுபவத்தினை பெறுங்கள்.

6 மாத பயிற்சியின் முடிவில் 15,000/=க்கு குறையாத வேலைவாய்ப்பு 100% எம்மால் ஏற்படுத்தித்தரப்படும்

6 மாத முடிவில் பயிற்சி பெற்றமைக்கான சான்றிதழ் மற்றும் சர்வதேச அங்கீகாரம் பெற்ற Airline ticket booking சான்றிதழ் வழங்கப்படும்

முதலாவது அணியில் 10 பேர் மட்டுமே தெரிவுசெய்யப்படுவர்.

நேர்முகத்தேர்வு -29-05-2016
ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி
49A,சப்பல் லேன்,யாழ்ப்பாணம்.
(யாழ் பொதுநூலகத்திற்கு முன்னால் உள்ள வீதி)

(B-4737)

கட்டாயமாக சுயவிபரக்கோவை(CV)மற்றும் தகமைச்சான்றிதழ்களின் நிழற்பிரதிகளுடன்(photo copy)வரவும்.

## CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



(C-4657)

CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)

அழையுங்கள் - 077 29 31 062

## வலம்புரி

விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


# மரண அறிவித்தல்

## திருமதி மங்களதேவி சுப்பிரமணியம் (மங்களக்கா)



வரணியாதோட்டம் கரணவாய் தெற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், பொற்ஸ்வானா(Botswana) நாட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மங்களதேவி சுப்பிரமணியம் கடந்த 20.05.2016 வெள்ளிக்கிழமை பொற்ஸ்வானாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நிற்சிங்கம் - ஆச்சிப்பிள்ளை தம்பதியினரின் புத்திரியும், மயில்வாகனம் - பாறுபதிப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், பாலசிங்கம், காலஞ்சென்றவர்களான சுந்தரசிங்கம், குருகுலசிங்கம் மற்றும் பூபாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மகேந்திரன், சூரியகுமார், வசந்தகுமார், பாலகுமார், நந்தகுமார், செல்வகுமார், ரஞ்சினி ஆகியோரின் அன்புத் தாயாரும், பாமா, சூரியேஸ்வரி, லோகா, ஜெயா, வேணி, கோகுலநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், பாக்கியம், திலகவதி, அன்னம்மா, காலஞ்சென்றவர்களான குமாரசாமி, கந்தையா, சின்னத்தங்கம், வேலுப்பிள்ளை, வள்ளியம்மை, தங்கம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான ஜானகி, சிவபாக்கியம் ஆகியோரின் உடன் பிறவா சகோதரியும், நிரோசன், சிந்துசன், வீணா, ஆர்த்தனா, அரன், பிரிதினி, சாயி, பிரணவன், தேனுஷா, அபி, கவின், யோவியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.05.2016) ஞாயிற்றுக்கிழமை Plot No.31970, Francistown, Botswana வில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
நி.பூபாலசிங்கம் (சகோதரர்)
சு.மகேந்திரன் (மகன்)

தொ.பே : 0778318964, 0775433284
Botswana : 002672420462

(C-4731)


# குயின்சி விநியோகஸ்தர்கள் (புத்தகசாலை)






- மருத்துவ பீட மாணவர்களுக்கான மருத்துவ நூல்கள்
- ஆங்கில அகராதிகள், தேசிய பாடசாலைப் புத்தகங்கள்
- சிறுவர்களுக்கான நகைச்சுவைக் கதைகள்
- மாணவர்களுக்கான அறிவியல் நூல்கள், நீதிநூல்கள்
- மங்கையர்களுக்கான சமையலில் ருசி பார்க்க சமையல் குறிப்புப் புத்தகங்கள், அழகுக்குறிப்புப் புத்தகங்கள் மற்றும் கோலப்புத்தகங்கள்

10% முதல் 50% வரையான விலைக் கழிவு

- சமயத்தினை வளர்க்க ஆன்மீகப் புத்தகங்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான எழுதுகருவி உபகரணங்கள், பயிற்சிப் புத்தகங்கள், க.பொ.த. சாதாரண தர மாணவர்கள், க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான கடந்தகால வினாத்தாள்கள் போன்றவற்றை பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்



குயின்சி விநியோகஸ்தர்கள்
271, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
T.P : 021 221 7513 H.P. 077 226 8486

(4793)

DELL SINGER

"உலகின் மிகச்சிறந்த Dell Laptop களுக்கு விசேட கொடுப்பனவுகள்"



4 வருடங்கள் வரை நீடித்துக் கொள்ளக்கூடிய உத்தரவாதம்

4G டொங்கல் இலவசம்

நிபந்தனைகளுக்குட்பட்டது



வட்டி இன்றி

DELL - NB - i3 (DELL Inspiron 3543)
- Intel i3 - 5005U, 2.0GHz
- 4GB, 500GB, HD Webcam
- 15.6" HD Display, DVD RW
- McAfee Virus Guard

ரூ.71,999/-
விசேட விலை ரூ.65,999/-
மாதாந்தம் ரூ.4,333/- X12



வட்டி இன்றி

DELL - NB - DC5G (DELL Inspiron 3543)
- Intel Dual Core 1.5GHz
- 4GB, 500GB, HD Webcam
- 15.6" HD Display, DVD RW
- McAfee Virus Guard

கலர் பிரிண்டர் இலவசம்

ரூ.62,999/-
விசேட விலை ரூ.57,999/-
மாதாந்தம் ரூ.3,999/- X12

(C-4727)

www.masters.lk

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் (ஸ்ரான்லி வீதி) | 021-2225408 | பருத்தித்துறை | 021-2263411 | முல்லைத்தீவு | 021-2290180 | கொடிகாமம் | 077-7858232 |
| யாழ்ப்பாணம் (ஆஸ்பத்திரி வீதி) | 021-2216320 | சங்கானை | 021-2251100 | சாவகச்சேரி | 021-2270197 | கிளிநொச்சி | 021-2280199 |
| நெல்லியடி | 021-2264937 | சுன்னாகம் | 021-2240555 | மானிப்பாய் | 021-2255343 | | |

SINGER Plus


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.05.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி
# சங்குநாதம்
Sankunatham

வள்ளுவர் ஆண்டு 2047 29.05.2016 தொலைபேசி : 021 222 3378

நாதம் 67








# முதலமைச்சருக்கு எதிராக மீண்டும் சதித்திட்டம்

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

பண்டிதர் பரமலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு ஆரம்பமாகியது. வாத்தியார் வைத்திலிங்கத்தைத் தவிர மற்றெல்லோரும் ஆலடி மாநாட்டிற்கு வருகை தந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாடு ஆரம்பமாகும் என்று அறிவித்ததும் அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

ஆலடி மாநாட்டில் உறுப்பினர்கள் அமர்ந்த அதே நேரம் வாத்தியார் வைத்திலிங்கமும் ஆலடி மாநாட்டிற்கு வந்து சேர்ந்தார்.

**கங்காணி:** என்ன? வாத்தியார் இன்றைக்கு லேற்றாப் போனியள்.

**வாத்தியார்:** மஞ்சள் பத்திரிகை எண்டால் என்ன? என்று ஒரு ஆராய்ச்சி செய்து போட்டு வாறன்.

**மூப்பர்:** அட, மஞ்சள் பத்திரிகை எண்டால் என்ன என்பது பற்றி வாத்தியாரிட்டக் கேட்கவேணும் என்று நினைச்சனான். வாத்தியாரே அது பற்றி ஆராய்ந்து போட்டு வந்திருக்கிறார்.

**விதானையார்:** மூப்பர் மஞ்சள் பத்திரிகை எண்டால் என்ன என்பது பற்றி வாத்தியாரிட்ட கேட்பதைவிட வடக்கு மாகாண சபையில் இருக்கிற அந்த உறுப்பினரிட்ட கேட்டால் அவர் தெளிவாகச் சொல்லுவார்.

**பண்டிதர்:** விதானையார் வலம்புரியைப் பார்த்து வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஒருத்தர் மஞ்சள் பத்திரிகை எண்டு சொன்னவர். சொல்லுறது இல்லை பாருங்கோ சொன்னவர் யார் என்றும் மக்கள் பார்ப்பினம்.

**மூப்பர்:** என்ன இருந்தாலும் வேட்பாளராக நிறுத்தப்படுபவர்கள் தொடர்பில கட்சிகள் கொஞ்சமாவது கவனம் செலுத்த வேணும். அடிப்படையில நீதி, நியாயம், மனச்சாட்சி இல்லாதவியள வேட்பாளர்களாக்கிவிட, அவையள் வடக்கு மாகாண சபையை எப்படி நடத்துகினம் பார்த்தியளோ.

**கங்காணி:** அது சரி ஒரு சட்டத்தரணி வலம்புரிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய வேணும் என்று சொன்னவராம்.

**விதானையார்:** சொல்லுவார்தானே! அடுத்தமுறை நீதான் ராசா பாராளுமன்ற உறுப்பினர், நீ வடக்கு முதலமைச்சரை பதவியில் இருந்து வெளியேற்ற எனக்கு உதவி செய்யவேணும் என்று கொழும்புத் தலைமையில இருக்கிறவர் கேட்க, இந்தாள் அதையே தொழிலாகக் கொண்டு செயற்படுகுது.

**பண்டிதர்:** இவர் மட்டும் தானோ...

**விதானையார்:** இல்லை. பண்டிதர் வலம்புரியை



மஞ்சள் பத்திரிகை எண்டு சொன்னவரை யாழ்ப்பாண மாநகரசபையின்ர மேயராக்கிறது என்றும் உத்தரவாதம் வழங்கப்பட்டிருக்காம்.

**கங்காணி:** அட அது தானோ அவன் பெடியன். சரியாக கஷ்ரப்படுகிறான்.

**மூப்பர்:** சாவகச்சேரிப் பெடியன் பாராளுமன்ற உறுப்பினர். உவன் பெடியன் யாழ்ப்பாண மாநகர சபையின்ர மேயர் எண்டால் தமிழினத்தின்ர எதிர்காலம் எப்படி இருக்கும். இம்... கொழும்பில இருக்கிற அந்தாள்... கூட்டமைப்பின்ர தலைமையைக் கைப்பற்றப் படுகிறபாட்டைப் பார்த்தியளோ!

**கங்காணி:** என்னைப் பொறுத்தவரை இதுக்கெல்லாம் காரணம் தமிழ்மக்கள் பேரவைதான்.

**விதானையார்:** என்ன? கங்காணியார் இப்படிக் கதைக்கிறியள். தமிழ் மக்கள் பேரவை ஆரம்பிக்கப்பட்ட படியால்தான் கூட்டமைப்பு கொஞ்சமேனும் உசார் அடைந்தது.

தமிழ்மக்கள் பேரவை தீர்வுத் திட்டத்தைத் தயாரித்ததைக் கண்ட வடக்கு மாகாண சபை தானும் ஒரு தீர்வுத் திட்டத்தைத் தயாரித்தது.

**மூப்பர்:** அதுமட்டுமல்ல விதானையார் தமிழ்மக்கள் பேரவை வடக்கு கிழக்கு இணைந்த சமஷ்டி என்பதை வலியுறுத்தியபோது ஒற்றையாட்சிக்கு உடன்பட்ட சம்பந்தப்பெருமான் சமஷ்டி தான் எங்களுக்குத் தீர்வு என்று பல்டி அடித்தவரல்லோ.

**பண்டிதர்:** தமிழ்மக்கள் பேரவை ஆரம்பிக்கப்பட்டதால இலங்கைத் தமிழரசுக் கட்சியினரும் விழிப்படைந்து ஊர் ஊராகக் கூட்டம் நடத்துகினம் எண்டால் இதற்குக் காரணம் பேரவை தானே!

**கங்காணி:** பண்டிதர் ஐயா! நான் சொன்னதை நீங்கள் பிழையாய் விளங்கிக் கொண்டிட்டியள். நான் சொல்வது என்ன எண்டால் தமிழ் மக்கள் பேரவை தேர்தலில போட்டியிடாது; அரசியலில ஈடுபடாது என்று திட்டவட்டமாக அறிவித்தவியள் அல்லோ. அதாலதான் கூட்டமைப்பு மீளவும் உறங்கத் தொடங்கிற்று. கூட்டமைப்பில சம்பந்தப் பெருமானுக்கு அருகில நிற்கிறவர் கூட்டமைப்புக்குத் தான் தலைவராக வேணும் எண்டு நினைக்கிறார்.

**மூப்பர்:** கங்காணியார் அப்ப தமிழ்மக்கள் பேரவை என்ன செய்யவேணும்.

**கங்காணி:** தமிழ் மக்களுக்கு ஒரு பலமான அரசியல் கட்சி தேவை என்பது தான் என்ர முடிவு. கூட்டமைப்பு என்ன செய்தாலும் தொடர்ந்தும் கூட்டமைப்பிற்கு ஈடாக மாற்றுத் தலைமை இல்லையெண்டால், வாக்களிக்கிற மக்கள் தொடர்ந்தும் வீட்டிற்கு வாக்களிப்பினம். பிறகு என்னென்று அரசியல் மாற்றம் வரும், முன்னேற்றம் ஏற்படும்.

**வாத்தியார்:** கங்காணியார் சொல்லுறதிலும் நியாயம் இருக்கத்தான் செய்யிறது. எதற்கும் இதுபற்றி முக்கியமானவர்களோட கதைக்கவேணும்.

**விதானையார்:** வாத்தியார் கீரைக்கடைக்கும் எதிர்க்கடை வேணும். எங்களிட்ட தனியக் கூட்டமைப்பு மட்டும் என்றால் எங்கட கூட்டமைப்பின்ர கொழும்புத் தலைமை தான் நினைச்சதைத்தான் செய்யும்.

என்னைப் பொறுத்த வரையில் ஒரு பலமான-தரமான அரசியல் கட்சி தோற்றம் பெற்றால் அது கூட்டமைப்பையும் பக்குவப்படுத்தும். அதற்குப் பிறகு வடக்கு மாகாண சபையைக் குழப்புகிறவர்களுக்கும் மக்கள் தக்க பாடம் புகட்டுவினம்.

**வாத்தியார்:** விதானையார் சொல்லுறதிலும் நியாயம் இருக்கத்தான் செய்யுது. எதற்கும் யோசிப்பம். மக்களின்ர அறிவைப் பொறுத்துத்தான் அரசியல்வாதிகளும் அமைவினம் என்று ஒரு அறிஞர் சொன்னவர் அல்லோ. முதலில எங்கட மக்கள் அரசியல் தொடர்பில விழிப்படைந்தால்தான் எல்லாம் சாத்தியமாகும். அது வரைக்கும் எங்கள் காலம் கஷ்ரம்தான்.

**விதானையார்:** அரசியல் மட்டுமல்ல எங்கள் சமயங்களும் குழம்பிப் போய் தானே இருக்குது.

**கங்காணி:** என்ன விதானையார் சொல்லுறியள். கொஞ்சம் தெளிவாகச் சொல்லுங்களன்.

**விதானையார்:** மானிப்பாயில இருக்கிற ஒரு இன்ரநஷனல் ஸ்கூலில மூன்று மாத இங்கிலிஸ் கற்கை நெறி ஆரம்பிக்கப்பட்டதாம். அந்தப் படிப்புக்குச் செல்கிற அத்தனை மாணவர்களும் காலை 8.30 மணிக்கு பைபிள் படிக்கவேணும் என்று கட்டாயமாம்.

**மூப்பர்:** சைவசமயத்தைச் சேர்ந்த மாணவர்களும் பைபிள் படிக்க வேணுமோ?

**விதானையார்:** கட்டாயம் படிக்க வேணுமாம்.

**கங்காணி:** இதென்ன நாசமறுப்பு. சைவப்பிள்ளையள் ஏனாம் கட்டாயத்தின் பேரில் பைபிள் படிக்க வேணும்.

**பண்டிதர்:** எல்லாம் மத மாற்றும் நோக்கம்தானே.

**வாத்தியார்:** ஓமோம் அவையளின்ர முந்தின சமயம் சைவம்தானே. பொதுவில சைவத்தில இருந்து மதம் மாறினவியள். வலுவேகமா நிற்பினம்.

**மூப்பர்:** வாலறுந்த நரிபோல மற்ற நரிகளுக்கும் வாலறுக்க நினைக்கினமாக்கும்.

**வாத்தியார்:** எதுவா இருந்தாலும் இந்தக் கட்டாயப்படுத்தல்களை இவையள் நிறுத்தவேணும்.

இப்படி வாத்தியார் சொல்ல ஆல டிப்பிள்ளையார் கோயில் மணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# முதலமைச்சருக்கு எதிராக மீண்டும் சதித்திட்டம்




வடக்கு மாகாண சபையின் நிலை கண்டு தமிழ் மக்கள் தாங்கொணாத் துயரம் கொண்டுள்ளனர். ஏன் தான் இப்படி இவர்கள் நாசகாரம் செய்கின்றனர். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்களுக்கு உதவுவதை விடுத்து வடக்கு மாகாண சபையை தங்களின் சுய பதவிக்காக பயன்படுத்துகின்றனரே! என்ற வேதனை மக்களிடம் இருக்கவே செய்கிறது.

இது ஒரு புறம் இருக்க, தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவைக் கொண்டுள்ள வடக்கு மாகாண சபை முதல்வர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களுக்கு எதிராக கூட்டமைப்பின் கொழும்புத் தலைமை தொடர்ந்தும் சதித்திட்டம் தீட்டி வருகின்றது.

முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் உபத்திரவம் தாங்கமுடியாமல் பதவியைத் தூக்கி எறிந்து விட்டுப்போக வேண்டும். இதற்காக வடக்கு மாகாண சபையில் இருக்கக் கூடிய சில உறுப்பினர்களை கூட்டமைப்பின் கொழும்புத் தலைமை பயன்படுத்தி வருகின்றது. இதன் காரணமாக வடக்கு மாகாண சபையால் செய்யக்கூடிய பணிகளைக் கூடச் செய்யமுடியாமல் உள்ளது.


வடக்கு முதல்வர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் தமிழ்மக்களின் உண்மை நிலையைத் தெட்டத் தெளிவாக எடுத்துக்கூறி வருகிறார்.

இதுதான் நிலைமை; வடக்கு மாகாண சபைக்கு உரிய அதிகாரங்களைத் தாருங்கள் நாங்கள் செய்து காட்டுகிறோம்.

தமிழர் தாயகப் பகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தை வெளியேற்றுங்கள். இவ்வாறு வடக்கின் முதலமைச்சர் வெளிநாட்டுத் தூதுவர்களிடமெல்லாம் எடுத்துக் கூறுவது கூட்டமைப்பின் தலைமைக்கு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல இருக்கிறது.

அட! முதலமைச்சர் விக்னேஸ்வரன் கூறுவது சரிதானே! இது எந்த வகையில் கூட்டமைப்பின் கொழும்புத் தலைமைக்கு ஆத்திரத்தைக் கொடுக்க முடியும் என்று நீங்கள் கேட்டால் அதில் நியாயம் இருக்கவே செய்யும்.


இங்குதான் ஒரு உண்மையை மக்கள் அறிந்து



## யாழ். நகர அபிவிருத்திக் கூட்டத்தை ஆளுநர் அலுவலகத்தில் நடத்தியது ஏன்?

கொள்ள வேண்டும். அதாவது வடக்கின் முதலமைச்சர் மீது தமிழ்மக்கள் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளனர்.

இது தங்களை ஓரங்கட்டி முதல்வர் விக்னேஸ்வரனுக்கு அரசியல் செல்வாக்கை ஏற்படுத்தி விடுமோ என்ற பயமே அவரை வெளியேற்ற வேண்



டும் என்ற சதித்திட்டத்திற்குக் காரணமாகிறது.

அதிலும் குறிப்பாக கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்குப் பின் அடுத்த தலைவர் நானே! என்று நினைத்து அதற்கான திட்டங்களை வகுத்து வருபவர் முதல்வர் விக்னேஸ்வரன் தொடர்ந்தும் இருந்தால், தனக்குத் தலைமைப் பதவி கிடைக்காமல் போகும் என்று நினைத்துக்கொள்கிறார்.

இதன் காரணமாகவே முதலமைச்சரை வெளியேற்ற வேண்டும். இதனை வடக்கு மாகாண சபையின் சில உறுப்பினர்களைக் கொண்டு செய்ய சதித்திட்டம் நடந்து வருகிறது.

முன்பு மேற்குறிப்பிட்ட சில உறுப்பினர்கள் ஹோட்டல்களில்கூடி முதல்வருக்கு எதிராகக் கடிதம் எழுதுவது; உறுப்பினர்களிடம் கையெழுத்துப்பெறுவது என்றவாறு ஹோட்டல்களில் கூடிக்கூடிச் சதித்திட்டம் தீட்டினார்கள். எனினும் அத்திட்டம் முறியடிக்கப்பட்ட நிலையில் இப்போது மீண்டும் ஒரு சதித்திட்ட அரங்கேற்றம் நடந்துள்ளது. அதுதான் யாழ்ப்பாண நகர அபிவிருத்தி என்ற பெயரில் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நடந்த கூட்டமாகும்.

எட்டு மாகாண சபை உறுப்பினர்கள், மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் சேர்ந்து கூடிய இந்தக் கூட்டம் தமிழ்மக்களின் அபிலாசைகளைச் சிதறடித்து வடக்கு மாகாண சபையின் அதிகாரத்தை நிர்மூலமாக்கி, ஆளுநரிடம் வடக்கு மாகாண சபையின் முழு அதிகாரத்தையும் தாரைவார்த்துக் கொடுத்து முதலமைச்சர் என்ற பதவியை வலுவிழக்கச் செய்கின்ற மிகப்பெரும் சதித்திட்டமாகும்.

இச்சதித்திட்டம் ஒரு ஊடகத்தின் செய்தியால் முறியடிக்கப்பட்டது. இந்த முறியடிப்பு கூட்டமைப்பின் கொழும்புத் தலைமைக்கு மிகப்பெரும் ஆத்திரத்தை ஏற்படுத்த, அந்த ஆத்திரம் கொழும்புத் தலைமையின் சதித்திட்டங்களை அரங்கேற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களை கோபாவேசப்படுத்தியது.

இந்நிலையில்தான் வலம்புரி ஒரு மஞ்சள் பத்திரிகை என்ற குற்றச்சாட்டு வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஒருவரால் முன்வைக்கப்பட்டது.

உண்மையில் வலம்புரியை ஒரு மஞ்சள் பத்திரிகை என்று கூறிய சபை உறுப்பினர் சரியாகச் சிந்தித்திருந்தால் தனது கூற்று தனக்கான மக்கள் செல்வாக்கை சிதறடிக்கும் என்பதை விளங்கிக் கொண்டிருப்பார்.

என்ன செய்வது தங்களுக்கான மக்கள் செல்வாக்கு விழுந்து போகிறது என்பதைக் கூட உணராமல் இருக்கக்கூடிய கூட்டமைப்பின் கொழும்புத் தலைமை;

அந்தத் தலைமையின் சதித்திட்டங்களை நிறைவேற்றப் பாடுபடும் வடக்கு மாகாணத்தின் சில உறுப்பினர்கள் பாவங்கள் என்று சொல்வதைத்தவிர வேறு எதுவுமில்லை.

எதுவாயினும் யாழ்ப்பாண நகர அபிவிருத்தியில் வடக்கின் முதல்வரை ஓரங்கட்டி ஆளுநர் மட்டத்தில் நடத்தி முடிக்க நினைத்தது மிகப்பெரும் தவறு. இது எங்களுக்கான அதிகாரங்களை நாங்கள் இழப்பதற்குச் சமமானது.

ஆக, முதலமைச்சரோடு இணைந்து வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் அனைவரும் செயலாற்ற வேண்டும். இது தமிழ்மக்களுக்கு நன்மையைத் தரும்.

விதுரன்




# காகம் ஏன் கறுப்பாச்சு

அப்போது தான் உலகத்தில் இருக்கும் எல்லா உயிரும் உருவாகி இருந்தது.

ஒவ்வொரு உயிரும் அவர்களுக்கு தேவையான பெயரை குயாங்கிடியாங்கி தாத்தா வைத்துவிட்டு சென்றுவிட்டார்.

பறவையாக வேண்டுமா. வீட்டு விலங்காக வேண்டுமா. காட்டு விலங்காக இருக்க வேண்டுமா என்பதை முடிவு செய்யலாம். தங்களுக்கான உருவத்தையும் அவர்களே முடிவு செய்யலாம்.

தங்களுக்கான நிறத்தையும் முடிவு செய்யலாம்.

அந்த தேர்வுகள் எல்லாம் ஒரு பெரிய பணிமனையில் நடந்துகொண்டு இருந்தது.

ஒவ்வொரு உயிராக வரிசையில் சென்று ஒவ்வொன்றாக தேர்ந்து எடுத்தன.

நாம் இப்போது பார்க்கும் ஒட்டகச்சிவிங்கி, மாடு போல தான் அப்போது இருந்தது. வரிசையில் நிற்கும்போது உயரமான ஒரு மரத்தின் மீது சிகப்பு நிறத்தில் ஒரு கனி இருப்பதனை கண்டது.

அது மிகவும் உயரத்தில் இருந்தது. அதனால் எட்டி சாப்பிடமுடியவில்லை. உருவத்தை மாற்றங்கள் செய்யும் அறைக்கு சென்றபோது "உங்களுக்கு என்ன மாற்றம் வேண்டும் என்று கேட்டார்கள்" "எனக்கு நீளமான கழுத்து வேண்டும்" என்றதால் ஒட்டகச்சிவிங்கியின் கழுத்து நீளமாக மாற்றப்பட்டது.

தங்களுக்கு தேவையான தோல் . அதன் நிறத்தை எல்லாம் அங்கே தேர்வு செய்து கொள்ளலாம்.



காகங்கள் அப்போது வெள்ளை நிறத்தில் தான் இருந்தன. ஆனால் அதற்கு மயிலின் தோகையைப் பார்த்துவிட்டு அதே போல வண்ண வண்ண நிறம் வேண்டும் என ஆசைப்பட்டது.

ஆமாம் மயில் தோகை விரித்தாடி பார்த்ததுண்டா?

சரி கதைக்கு வருவோம். காகம் மயிலின் தோகை போல தனக்கு வண்ண நிறம் வேண்டும் என ஆசைப்பட்டது.

அதனால் நிறங்களை மாற்றுவதற்கு பொறுப்பாக இருந்த ஆந்தையை சந்தித்து தனக்கு மயில் தோகை போல வண்ண வண்ண நிறத்தில் தன் உடல் நிறம் வேண்டும் என்றது.

மறுநாள் காலை வருமாறு காகத்தை ஆந்தை அனுப்பியது.

ஆந்தை ஒரு விஞ்ஞானி. நிறம் மாற்றும் விஞ்ஞானி. நிறங்களை எல்லாம் ஒரு பெரிய பாத்திரத்தில் கொட்டி புதிய திரவத்தை தயார் செய்தது ஆந்தை.

நள்ளிரவு வரையில் அந்த தயாரிப்பு நடந்தது. 12 மணிக்கு மேல் கொஞ்சம் கண் சரியாக தெரியவில்லை. தூக்கமும் சேர்ந்துகொண்டது.

தங்க நிறத்தை கொட்டி கலக்குவதற்கு பதிலாக கறுப்பு நிறத்தை கொட்டிவிட்டது.

தவறுதலாக கொட்டியதை கூட் கவனிக்க முடியவில்லை.

தூக்கம் அதிகமானதால் வீட்டு வாசலிலேயே உறங்கிவிட்டது.

காலையில் மிகுந்த உற்சாகத்துடன் காகம் வந்தது.

தூக்க கலக்கத்தில் இருந்த ஆந்தை "உள்ளே இருக்கும் பாத்திரத்தில் குதித்து அரை மணி நேரம் உள்ளே இருக்க வேண்டும்.

வெளியே வந்தால் நீ கேட்ட நிறங்கள் உன் உடலில் கிடைக்கும். ஆனால் இதன் பின்னர் நிறத்தை மாற்றவே முடியாது" என்றது.

மகிழ்ச்சியாக காகம் உள்ளே சென்று அந்த பெரிய பாத்திரத்தில் குதித்தது.

அரை மணி நேரம் கழித்து வெளியே வந்தால்!!!

கருமை நிறத்திற்கு மாறி இருந்தது காகம். ஓவென அழுதது.

ஆனால் இனி நிறத்தை மாற்ற முடியாது. ஆந்தையை பார்த்து இனி உனக்கு இரவில் மட்டும் தான் கண் தெரியும் பகல் முழுக்க நீ உறங்குவாய் என சபித்தது.

இப்படித்தான் ஆந்தை இரவில் விழித்திருக்கும் பறவையாகவும் காகங்கள் கறுமை நிறத்திற்கு மாறின.

## பொது அறிவு வினாக்கள்

டெல்டா இல்லாத நதி எது ?
நர்மதை
கராத்தே பள்ளி முதலில் தோன்றிய நாடு எது ?
ஜப்பான்
அரசு நாணய மதிப்பை குறைப்பது எதை அதிகரிக்கிறது?
சேமிப்பை அதிகரிக்கிறது
"இந்திய விழா" நடைபெற்ற நகரம் எது ?
லண்டன்
ஒப்படர்த்தி கோட்பாட்டை விளக்கியவர் யார் ?
ஐன்ஸ்டின்
மத்திய சக்தி ஆராய்ச்சி நிலையம் எங்கு உள்ளது ?
பெங்களூரில்
வால் நட்சத்திரத்தின் மறுபெயர் என்ன ?
எல்னோ
சிப்கோ இயக்கத்தை தொடங்கியவர் யார் ?
பகுகுனா
20 அம்ச திட்டத்தை அறிவித்தவர் யார் ?
இந்திரா காந்தி
நமது சக்தி சாதனங்களில் மிக முக்கியமானது எது ?
நிலக்கரி
76 ஆண்டுகளுக்கு ஒருமுறை தோன்றும் வால் நட்சத்திரம் எது ?
ஹாலி
மின்னாற்றலை உருவாக்குவது எது ?
ஜெனரேட்டர்
எக்ஸ் கதிர்களால் குணமாக்கப்படும் நோய் எது ?
புற்று நோய்






## வியாசர் பதில்கள்

**அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்**

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்)
021 567 1532



### தொலைக்காட்சி நாடகம் பார்க்கும் பெண்கள் பற்றி?

### அரசியல்வாதியாக நானிருந்தால் அன்றாட மக்களுக்கு பொருட்களை...

### இளையதளபதிக்கும் கமலுக்கும் என்ன வித்தியாசம்?

**பொம்மி — யாழ்ப்பாணம்**

**மனைவி கஷ்டுப்படும் போது ஒரு நல்ல கணவன் என்ன செய்யனும்?**

அவரின் கஷ்டத்தை நீக்குவதற்கு அவருக்கு உதவியாக இன்னொரு பெண்ணை வீட்டுக்கு கொண்டுவந்தால் எல்லாம் சரி, நான் வேலைக் காரியைச் சொன்னேன்.

**கந்தகுமார் — மானிப்பாய்**

**அரசியல்வாதியாக நானிருந்தால் அன்றாட மக்களுக்கு பொருட்களை நியாய விலையில் விற்கச் சொல்வேன்?**

சத்தியமா
- வாகன போமிட்ட விக்கமாட்டேன்
- பன்முகப்படுத்தப்பட்ட நிதியை பாரபட்ச மின்றி செயற்படுத்துவேன்
- யாழ்.மாவட்டத்திலதான் இருப்பன்
- கொழும்பில வீடு வேண்டமாட்டேன்
- வெளிநாடுகளில் முதலீடு செய்யமாட் டான்
- மேற்கிற்கு தலையும் வடக்குக்கு வாலும் காட்டமாட்டேன்
- இளைஞர்களை தூண்டிவிட்டு இயல்பு நிலைகளை குலைக்க மாட்டேன்.
- சொந்த புத்தியில் இயங்கும் இளை ஞர்களை உருவாக்குவேன்
- மக்கள் பிரதிநிதியாக நடந்துகொள் வேன். இது சத்தியம் சத்தியம் சத்தியம்

**நிரோஜன்**

**இளையதளபதிக்கும் கமலுக்கும் என்ன வித்தியாசம்?**

இளையதளபதி நடித்த தெறி படத்தை கமல் அசால்டா நடிச்சிடுவாரு. அதே மாதிரி கமல் நடிச்ச தசாவதாரம் படத்தை விஜய் நடிப்பாரா?

**பிந்து — கரவெட்டி**


**படிக்கிறது மறந்து போது பார்த்தபடம் மட்டும் அப்படியே நினைவு நிற்கிறது அது ஏன்?**

பாடப்புத்தகத்தில் நயன்தார, நமிதா, சமந்தா, எமியக்ஷன், கீர்த்திசுரேஸ் இவங்களோட படங்களைப் போட்டா பாடமும் மனசில நிக்கும் படமும் நிற்கும்.

**தனுசன் — அச்சுவேலி**

**காதலிச்ச மனசுக்குள்ள பட்டாம் பூச்சி பறக்கும் என்று சொல்லுறார்களே அது உண்மையா?**

ஓ... அது உண்மைதான். ஆனால் கல்யாணத் துக்கப்புறம் அவ்வளவு பட்டாம் பூச்சியும் மறுபடியும் மயிர் கொட்டி ஆகிடும்.



**தனு — நாவற்காடு**

**பள்ளிக்காதலும் பாடசாலைக் கல்வியும் இந்தக் காலத்தில எப்படி இருக்கு?**

விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி எப்போது வளர்ந்ததோ அப்போதே பள்ளி நினைவுகள் என்பதெல்லாம் அழிந்து விட்டன.

**புருஷோத் — நவிண்டில்**

**காதலில் அதிகம் ஏமாறுவது ஆண்களா? பெண்களா?**

ஏமாறுவது பெண்கள். ஏமாற்றப்படுவது ஆண்கள்.



"என்ன இது? பட ரிலீஸ் அன்னைக்கு தியேட்டர்ல வெறும் பத்துப் பேர் தான் இருக்காங்க!"

"என்னங்க பண்றது! கேஸ், அது இதுன்னு எல்லோருக்கும் போட்டுக் காண்பிச்சது போக மீதி இத்தனை பேர்தான் இருக்காங்க1"

**ரஜி — வல்வெட்டி**

**ஒருவன் தான் வாழ்வில் வென்றுவிட்டான் என உணரும் தருணம் எது?**

ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனை
சான்றோன் எனக் கேட்ட தாய்.

மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி
இவன் தந்தை என் நோற்றான் கொல்
எனும் சொல்

என்ற வள்ளுவன் வாக்கு பலிக்கும் வேளையில்

**பிரவீனன் — குப்பிளான்**

**தொலைக்காட்சி நாடகம் பார்க்கும் பெண்கள் பற்றி?**

இப்படித்தான் நான் ஒரு வீட்டுக்குப் போனேன். நீண்ட நேர நாய் குலைப்பின்பின் வரவேற்கப் பட்டு உள்ளே போய் அமர்ந்தேன். தொலைக் காட்சி அழுது கொண்டிருந்தது. வீட்டுக்காரி ஆரம்பித்தார். "இவள் இளவரசி செய்யிறது கொஞ்சமும் சரியில்லை. என்ன இருந்தாலும் மருமகளை இப்படியா கொடுமைப்படுத் திறது."

நான் அதிர்ந்து போனேன். அதன் பின் தான் தெரிந்தது அது தொலைக்காட்சித் தொடர் கதை என்று. எனக்கு தேநீர் கிடைக்க வில்லை. கண்ணீர்தான் கிடைத்தது.

**கமல் — நெல்லியடி**

**திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப் படுகிறதாம் உண்மையா?**

திருமணம் செய்தவர்கள் யாரிடமும் இதைச் சொல்லி விடாதீர்கள். நீங்கள் வைத்திய சாலையில் இருக்க வேண்டி வரும்.

**விது — யாழ்ப்பாணம்**

**இன்றைய பெண் பிள்ளைகள் பற்றி?**

பார்க்க சாதுவாத்தான் இருப்பார்கள். அவர் களின் போனை வாங்கிக் கிண்டிப்பாருங்கள் அதற்குள் எத்தனை சேதுக்கள் இருக்கிறார் கள் என்று.

**கரன் — கரணவாய்**

**ஈழத் தம்பிகளின் முன்னைய வாழ்க்கை பற்றி?**

எமக்காய் சன்னங்களை தன்னுள் சுமந்து நிற்கும் நேர்மையாளர்களை அன்று தோளில் வைத்திருந்தோம். இன்று தூர வைத்திருக் கிறோம்.

**விதுஸ் — கொக்குவில்**

**மாகாண சபையில் அமளி துமளியாமே?**

ஐயா சாமி உங்களை நம்பி தனித்தமிழ் அரசு என உங்களை தெரிவு செய்து அதற்கு நீதி அரசரை தலைமையாக்கிவிட, நீங்களோ தலைமைக்கு கட்டுப்படாமல் அவரையே வெளியேற்ற சதி தீட்டி கூச்சல் போடுகிறீர்கள். ஒன்றுமட்டும் உண்மை. உங்களை தமிழ்ச் சனம் பார்த்துக்கொண்டிருக்கிறது. அடுத்த தேர்தல் வரும்போது நீங்களாக ஒதுங்கினால் அது உங்களுக்கு நல்லதாய் அமையும் அவ்வளவுதான்.

**நீதன் — ஈவினை**

**தொலைபேசியைத் தொல்லை பேசியாக் குபவர்களை திருத்த முடியாதா?**

எனக்குத் தெரிந்த ஒரு பெண் எப்ப பார்த்தா லும் சிரிச்சுக் கொண்டே இருப்பார். நானும் அங்க இங்க பாப்பன் பக்கங்கள்ள யாரும் நிக்க மாட்டினம். சில நேரம் நடந்து போகும் போது கூட சிரிப்பார்.

என்னவெண்டு விசாரிச்சா அது வைபரில வாற குறுந்தகவல்களை நினைச்சு சிரிக்கிறது எண்டு அறிஞ்சன். என்ன கொடுமை எண்டே தெரியல்ல.

**உங்கள் கேள்விகளை அனுப்புங்கள்**

**குறுந்தகவல் (SMS)**

**021 567 1532**

# கவிதைக் கலசம்



## மண் மணக்கும் தமிழ்

தமிழ் பூ மணக்கும்
எங்கள் நகரம் பல இடத்தில்
உரிமை வாரும் திருவிழா
வருடா வருடம்
எழுச்சியாய் நடக்கும்
வண்ண ஒளிபரப்பும்
வீதிக்குள் ஊடுருவ
வெளிச்சக்கூடுகள்
நிறவண்ணத் திருவிழா
கட்டி நிற்கும்
மண் மணக்கும் தமிழ்
வார்த்தைகளை
கேட்பதுவும்
சிவசின்ன முகங்களை
பார்ப்பதுவும்
அரிதாயே போயிருக்கும்
பண்பாட்டு கோலங்களை
திசைமாற்றும்
அலங்காரமும்
பாலியல் வயது
காதல்களும்
நம்மவரை
கட்டிப்போட்டுவிடும்
விகிதாசாரம் செய்த
பரிதாபம்
வேகமாய் நடக்கிறது
செய்வது அறியாது
தமிழ் மனம்
திகைக்கிறது

நி.கவியழகன்
தாவடி

## வேண்டாமே வேள்வி

வெறித்து அடிக்கிறது வெக்கை
வேகிப்போகிறது எம் யாக்கை
வெள்ளத்திலும் எம் வாழ்க்கை
வேள்வி எடுக்கிறதே இவ்வியற்கை
வரையறையற்ற உயிர்கள் கோடி
வாரிப்போனது வெள்ளத்தில் ஓடி
தலையில் கனப்பொருட்சூடி
தாண்டுகிறோம் மேட்டிடம் நாடி
பளிச்சிடு பகலவன்
பழியெடுக்கிறான் பகல் இவன்
மாரிகால மழை- மாறி
பெய்ததால் வெள்ளம்
காவு கொண்டது உயிர்களை
இனியும்... வேண்டாமே
வேள்வி...
எம் வாழ்க்கையே -
ஆனது கேள்வி

பீ.கிருஷிகன் பியோ
இளவாலை

## பேரலிகள்

வனப்பு மிகு ஆலயம்
வானளாவிய கோபுரம்
ஆலய முன்றலில்
ஆங்காங்கே
வண்ண வண்ண
அலங்காரம்
செல்வக் குடும்பமென்று
நல்லாசி வேண்டி
அடியவர் புடைசூழ
அம்மன் ஆலயத்தில்
நேர்த்திக் கடனாம்
பால்குடம் குடமாய்
பாலாபிஷேகம்
கருவறைக்கு...
தெருவோரக்
குழந்தையொன்று
பால் வேண்டி
கதறுகின்றது
தெருத்தெருவாய்
அலைந்து ..

க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்

தம்பியரே!
தலையில் எண்ணெய் வைக்க மறக்காதே
நிலத்தடி சத்தமாய் நடக்காதே
பெரியார் பேசுமிடத்தே நிற்காதே
போகும் இடம் சொல்லாமல் போகாதே
உணவை விரயம் செய்யாதே
உயிரை துச்சமாய் எண்ணாதே
புகழ்ச்சியை என்றுமே விரும்பாதே
மாலைக்காய் மேடையில் அலையாதே
என்று பாடம் படித்த நீங்களா?
தலைகால் புரியாமல்
அலையில் நின்று
கத்துகிறீர் கத்துகிறீர்
ஓடி ஓடி ஏதோ பேசுகிறீர்
ஓட்டுப்போட்ட நாங்கள்
பார்த்து பார்த்து சலித்துவிட
ஊடகத்தை வெட்டிவிட நினைக்கிறீர்
முட்டி மோதுங்கள் முடிவு வரும்
அடுத்தமுறை ஒரு தேர்தல் வரும்
அப்போது பார்க்கிறோம்
ஆட்டம் போட்ட உம் முடிவை

மாலை. நா.கஜேந்திரன்

## வைகாசி 18, 2009

கொத்துக்கொத்தாக
குண்டுகளைக் கொட்டியே
கொன்று குவித்தீர்கள்
கொஞ்சமும் இரக்கமின்றி
முள்ளிவாய்க்காலில்
முடித்து வைத்ததாக
முழக்கம் இட்டு வெற்றிக்களிப்பில்
குத்தாட்டம் போட்டீர்கள்
மரணித்துப்போன -எம்
மக்களை நினைத்து
மௌன அஞ்சலி
செலுத்துகின்றோம்
மெழுகுதிரி ஏந்தி

வை.கே.மானிப்பாய்



## பச்சைக்கொடி

நினைவேந்தலுக்கு
பச்சைக்கொடி
சில முன்னாள்களின்
வாய்க்கு மெல்லத்தீனி!
பொக்கிஷங்களின் மேனி
புதைத்த நிலம் தேடி
நினைப்பதற்கு வந்த
உறவுகளின் வரிசையோ- நீட்சி
சொந்தங்களின்
இரந்த வெள்ளத்தில்
மிதந்த நிலமோ
மீண்டும் மே பதினெட்டில
மிதந்ததே உறவுகளின்
கண்ணீர் வெள்ளத்தில்

அராலியூர்
சோ.சிவகுமாரன்

## விடுதலை

எதிர்பாராத இயற்கை
அனர்த்தமோ போரோ
எதிர்கால சிறுவர்களை
முடக்கிவிட்டதோ என
அடங்கி கிடங்கில்
நிற்கும் காட்சி
அடங்கிவிடார் எதிரிகளுக்கு
எதிர்கால
இளைஞர்களான பின்பு

சி.சுகிர்தமலர்
உரும்பிராய்

# மௌனத்தின் தேடல்- 303

## எண்ணற்ற துன்பங்கள்

மாண்டிடுவோமா
மீண்டிடுவோமா
மாண்டவர்கள் பல பேராம்
மீண்டவர்கள் சில பேராம்
மாளுவதும் மீளுவதும்
மாதவன் செயலே
எண்ணற்ற துன்பங்கள்
எழுதி முடியாத சரித்திரங்கள்
குடும்பமும் கும்பலும்
கூட்டாக அலைந்தோம்
இனியும் என்னவோ
இறைவனது செயலன்றோ

அணிஞ்சில்
புவபாலன்

## துணிவோடு வாருங்கள்

பேரிடரில் அகப்பட்டுக்
காட்டுக்குள்ளே யாவராலும்
கைவிட்ட நிலையில்
வாழ்வாதாரம் ஏதுமின்றி
வாடிச்சோர்ந்து கிடக்கின்றனர்
நம்பிக்கையோடு துணிந்து
எழுந்து வாருங்கள் தயங்காது
அள்ளி அணைக்க உறவுகள்
ஆவலோடு காத்திருக்கின்றனர்

துரை,
தென்மட்டுவில்

## இறைவனின் தீர்ப்பு

2006 மே 18 இல்
வானிலிருந்து பொழிந்த
குண்டுகள் காரணமாக
வங்கரிக்கும் நாங்கள்
2016 மே 18 இல்
வானிலிருந்து பொழிந்த
மழை காரணமாக
மொட்டை மாடியில் நீங்கள்
காலங்கள் மாறினாலும்
இறைவனின் தீர்ப்பு
ஒன்றுதான்!

மு.குகராம்

## பௌத்த தர்மவான்களே

ஏடும் எழுத்தாணியும்
எழுதுதற்கென்றிருக்க
பாடும் பச்சிளம் துளிர்களை
பங்கருக்குள் இருத்திவிட்டு
கொத்துக்குண்டுதனை வீசி
அழித்து குதூகலித்த
பௌத்த தர்மவான்களே
உன் வினை உன்னை அழிக்கும்
எனும் தத்துவத்தை நீ மறந்ததேன்
ஒரு ஜென்மத்தை அழித்தோனே
ஏழு ஜென்மத்தில் அலைவானே

நா.தளையசிங்கம்
கொக்குவில்

## தாண்டவம்

வெறிப்புயல்
கொடும் மழையால்
குன்றுகள் சரிந்தன
குவலயத்து கட்டடங்கள்
தூக்கி வீசப்பட்டன
இருமாடி மேவி
பாய்கிறது பெருவெள்ளம்
மேனி சிலிர்க்குது
தினக் கடமைகள்
எங்கே?
நாகங்கள் புற்றுக்குள்
உறைவது போல
பாலர் விருத்தரெல்லாம்
ஏக்கத்தோடு

தான்தோன்றி
பண்டத்தரிப்பு

# மௌனத்தின் தேடல் -304



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.


எனும் முகவரிக்கு 01.06.2016ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# சாப்பிட்டால் கரையும் கவலைகள்

விடிந்து எழுந்தால் நமக்கு முன்னே சம்மணமிட்டு உட்கார்ந்திருக்கும் கவலைகளைப் பட்டியலிடவே முடியாது. ஒவ்வொருத்தருக்கும் ஒருவித கவலை. உடல் நலக்கவலை. குடும்பக் கவலை. பணக்கவலை என்று மனதை அழுத்தும் விடயங்கள் நிறைய உண்டு. இதற்கிடையில் போக்குவரத்துப் பிரச்சினைகளையும் எதிர்பார்த்து அதற்கேற்ப முன்கூட்டியே நேரத்தை ஒதுக்கி குறிப்பிட்ட நேரத்தில் அலுவலகத்தையும் சென்றடைய வேண்டும். இவ்வளவு தூரம் மனப் பதற்றத்தை ஏற்படுத்தாமல் ஒவ்வொரு நாளும் கவலையை மறந்து மகிழ்ச்சியாக கடமைகளைச் செய்ய வைக்கும் சில அற்புத உணவுகள் உள்ளன. இந்த உணவுகளை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் அறிவியல் ரீதியாக உடல் நலமும் மனநலமும் புதுப்பிக்கப்படும். ஒவ்வொரு நாளும் இந்த உணவுகள் நீங்கள் சாப்பிடும் சாப்பாட்டில் இடம்பெறுமாறு பார்த்துக் கொள்ளவேண்டியது மட்டுமே உங்கள் பொறுப்பு.




முதலில் காலை உணவிற்கு முன்பாக இரண்டு வாழைப்பழங்கள் அவசியம் சாப்பிடவும். வாழைப் பழத்தில் பொட்டாசியமும் மாவுச் சத்தும் தாராளமாக உள்ளன. மாவுச்சத்து உடலுக்கு முழு ஓய்வைத்தரும். செரோட்டனின் என்ற சத்தைச் சுரக்கவைத்து நரம்பு மண்டலத்தையும் அதன் மூலம் நமது அறிவையும் உணர் வையும் உடனே அமைதிப்படுத்தி விடுகிறது.

நேற்றைய கவலை, நாளைய கவலை போன்றவற்றை இன்று நினைத்துக்கொண்டிருப்பதால் சோர்வு, மூச்சுவிட முடியாமை, தூக்கமின்மை போன்றவை வருகின்றன. மேலும் இரத்தத்தில் சீனியின் அளவு குறைந்தாலும் மன இறுக்கம் ஏற்படும். வாழைப் பழத்தில் தாராளமாக உள்ள பொட்டாசியம் இரத்தத்தில் சீனியின் அளவு குறையாமல் பார்த்துக் கொள்வதால் மகிழ்ச்சியுடன் வேலை செய்யவேண்டும் என்ற உந்துதல் நமக்குள் ஏற்படுகிறது. இதே பொட்டாசியம் உப்பு நன்கு மூச்சுவிடவும் சோர்வை அகற்றவும் அதே நேரத்தில் இரவில் எதைப்பற்றியும் கவலைப்படாமல் நம்மைத் தூங்கவும் வைக்கிறது. எனவே தினமும் இரண்டு வாழைப் பழங்கள் காலையில் சாப்பிடவும்.


நீரிழிவு நோய் காரணமாக வாழைப்பழத்தைத் தவிர்ப்பவர்கள் பார்லி தண்ணீர், கம்பு, கேழ்வரகு போன்றவற்றுள் ஒன்றைக் காலை உணவுடன் சேர்க்கவும். மதிய உணவில் பாசிப் பருப்பு கூட்டு அல்லது காராமணி கண்டல் ஒரு கிண்ணம் என்று சேர்த்துக்கொள்ளவும். இதன் மூலம் நீரிழிவு நோயாளிகளும் கவலையை மறந்து ஒவ்வொரு நாளும் உற்சாகமாக வாழலாம். மேற்கண்ட ஐந்து உணவுகளும் செரோட்டனினையும் சுரக்க வைத்து இரத்தத்தில் பொட்டாசியம் உப்பும் குறையாமல் பார்த்துக்கொள்கின்றன.

அடுத்து ராகிக்கூழ், ராகிரொட்டி என்று சாப்பிடலாம். கேழ் வரகில் உள்ள கல்சியம் மனதில் ஏற்படும் எரிச்சலைக் கட்டுப்படுத்துகிறது. பெண்களுக்கு மாதவிலக்கு நிற்கும் காலத்தின் போது ஏற்படும் எரிச்சலைக் கட்டுப்படுத்துகின்றது. 40 வயதிற்கு மேல் உள்ள ஆண்கள வள் வள் என்று எரிந்து விழுவதையும் கேழ்வரகு தடுக்கிறது.

தினமும் சப்பாத்தி சாப்பிடுகிறவர்கள் இரண்டு தேக்கரண்டி கேழ்வரகு மாவையும் சேர்த்துச் சப்பாத்தி தயாரிக்கவும். மேலும் கொழுப்பு நீக்கப்பட்ட தயிர் ஒரு கிண்ணம். பெரிய வெங்காயம் ஒன்று என மதிய உணவில் சேர்த்துக் கொள்ளவும். இதனால் மதியம் இரண்டு மணி முதல் இரவு 10 மணி வரை மனம் அமைதியாயிருக்கும். கவலைகளோ, பிற மனிதர்களோ நம்மை எரிச்சல்படுத்த முடியாது.



மூன்றாவதாக தினமும் ஓர் அப்பிள் சாப்பிடுங்கள். கவலையினாலும் ப்ரீராடிக்கல் என்னும் திரவம் அதிகம் சுரந்து திசுக்களைப் பாதித்து மன இறுக்கத்தை ஏற்படுத்துகிறது. அப்பிளில் தாராளமாக உள்ள இரும்புச்சத்தும் பொஸ்பரஸ் சத்தும் இந்தத்திரவம் அதிகம் சுரக்காமல் கட்டுப்படுத்துகிறது. மேலும் தோலும் முடிவளரும் திசுக்களும் ஆரோக்கியமாகத் தொடர் அப்பிள் நன்கு உதவு கிறது.




நான்காவதாக ப்ரீராடிக்கல் அதிகம் சுரந்தால் திசுக்கள் சீரழிந்து நோய்களும் தோன்றுகிறது. இதைத்தடுக்க ஒரு தேக்கரண்டி நெல்லிக்காய்த் தூளைச் சாப்பிட்டு வந்தால்போதும். நோய்களை எதிர்க்கும் விற்றமின் சி தாராளமாக உள்ள பழம் நெல்லிக்காய். நெல்லிக்காய் லேகியமும் நல்லது. சீசனின்போது இரண்டு நெல்லிக்காய்வீதம் தினசரி சாப்பிட வேண்டும்.

ஐந்தாவதாக தினமும் ஒரு டம்ளர் ஓட்ஸ் கஞ்சி அருந்தவும். கொலஸ்ட்ரோல் அதிகம் இருந்தாலும் கவலை அதிகரிக்கும். கொலஸ்ட்ரோலை உடனுக்குடன் கரைக்கும் சக்தி வாய்ந்த நார்ச்சத்து ஓட்ஸில் அதிகம். இதனால் கவலையினால் இதயம் பாதிக்கப்படுவதும் தடுக்கப்படுகிறது. தயிர், சாலட், கோதுமை உப்புமா போன்றவற்றில் மூன்று தேக்கரண்டி வீதம் ஓட்ஸைத் தூவியும் சாப்பிடலாம்.

மேற்கண்ட ஐந்து வழிமுறைகளும் எப்போதும் நம்மை உற்சாகமாக வாழவைக்கும். உடல் நலத்தையும் வாழ்நாளையும் நீடிக்கும் அதிசய உணவு மருந்துகளும்கூட.

# உங்களது குழந்தைகளை பொத்திப் பொத்தி வளர்க்கிறீர்களா?



நகர்ப்புறங்களில் உள்ள அபார்ட்மென்ட்களில் வசிக்கும் குழந்தைகளுக்குதான் அதிக அளவில் நிமோனியா வருவதாக ஆய்வு ஒன்றில் தெரிய வந்துள்ளது.

சீனாவின் நான்ஜிங்கில் உள்ளது ஸ்கூல் ஆப் எனர்ஜி என்று என்விரான்மென்ட். அதைச் சேர்ந்த பேராசிரியர் ஹூவா கியான் மற்றும் அவரது குழுவனர் நகரங்களில் உள்ள பெரிய பெரிய அபார்ட்மென்ட்களில் வாழும் குழந்தைகளுக்கு நிமோனியா ஏற்படுவது குறித்து ஒரு ஆய்வு நடத்தினர்.

இந்த ஆய்வு 2010ஆம் ஆணடு டிசெம்பர் மாதம் முதல் 2011ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை நான்ஜிங்கில் உள்ள 11 மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டது. மாடர்ன் அபார்ட்மென்ட்களில் வீட்டுக்குள்ளேயே வளரும் குழந்தைகளுக்கு நிமோனியா தாக்கும் வாய்ப்பு அதிகம் என்பது தெரிய வந்துள்ளது.

### வீட்டுக்குள்ளேயே இருப்பது

நகரத்தில் உள்ள அபார்ட்மென்ட்டில் வசிக்கும் குழந்தைகளை பெற்றோர் வெளியே சென்று விளையாட விடுவதில்லை. எப்பொழுதும் வீட்டுக்குள்ளேயே இருக்கிறார்கள். போதிய காற்று இல்லாமை, புதிய தளபாடங்கள், சுவரில் தொங்கவிடப்படும் அலங்காரப் பொருட்கள் உள்ளிட்ட வைக்கும், குழந்தைகளுக்கு நிமோனியா ஏற்படுவதற்கும் தொடர்புள்ளது.

### அலர்ஜி

குடும்ப அலர்ஜி, குழந்தைகளை பெற்றோர் பிறரின் பராமரிப்பில் விடுவது, சுவாச கோளாறுகளாலும் நிமோனியா வருகிறதாம்.

### பொத்தி பொத்தி வைப்பது

கிராமத்து குழந்தைகள் தெருவில் மண்ணில் விளையாடியும், புரண்டு எழுந்தும் ஒன்றும ஆவதில்லை. ஆனால் சுத்தமான அபார்ட்மென்ட்களில் வாழும் குழந்தைகளுக்கு கிராமத்து குழந்தைகள் போன்று நோய் எதிர்ப்பு சக்தி இருப்பதில்லை என்று கூறப்படுகிறது.

# அழகை அதிகரிக்க நினைக்கும் ஆண்களுக்கு மட்டும்

இன்றைய தலைமுறை ஆண்கள் பெண்களுக்கு இணையாக தங்களை அழகாக வைத்துக் கொள்ள நினைக்கிறார்கள். அதற்காக ஜிம் சென்று தங்களது உடலை ஃபிட்டாக வைத்துக். கொள்வதோடு, சரும அழகை அதிகரிக்கவும் பல வழிகளை முயற்சித்து வருகின்றனர்.

குறிப்பாக பெண்களைப்போல் ஆண்களும் முகத்திற்கு க்ரீம் களைப் பூசுவது, ஃபேஸ் பேக் போடுவது என்றெல்லாம் மற்றவர்களுக்கு தெரியாமல் பின்பற்றி வருகின்றனர். ஆனால் தங்களது அழகை மேம்படுத்த ஒருசில எளிய செயல்களைப் பின்பற்றினாலே போதும்.

இங்கு ஒவ்வொரு ஆணும் தங்கள் அழகை அதிகரித்து வெளிக்காட்ட சில டிப்ஸ் கொடுக்கப்பட்டுள்ளன. அதைப் படித்து பின்பற்றி அழகாக திகழுங்கள்.

டிப்ஸ் 1: ஆண்கள் தங்கள் மூக்கில் வளரும் முடியை ட்ரிம் செய்யாமல் வெளியே தெரியும்படி வைத்திருப்பார்கள். முதலில் அப்பழக்கத்தை மாற்ற வேண்டும். மூக்கில் வளரும் முடியை அவ்வப்போது ட்ரிம் செய்ய வேண்டும்.


டிபஸ் 2: பொதுவாக ஆண்கள தங்களது கை மற்றும் கால்களில் வளரும் நகங்களை மாதத்திற்கு ஒருமுறை, அதுவும் நேரம் இருந்தால் வெட்டுவார்கள். ஆனால் அப்படி இருந்தால், அது பெண்களுக்கு உங்கள் மீது ஒரு கெட்ட அபிப்பிராயத்தை உருவாக்கி விடும். எனவே வளர்ந்து அசிங்கமாக இருக்கும் நகங்களை வாரத்திற்கு ஒருமுறைவெட்டிவிட வேண்டும்

டிப்ஸ் 3: அதிகமாக வியர்க்கும ஆண்கள் தங்களது அக்குளில் உள்ள முடியை ட்ரிம் செய்ய வேண்டும். இதனால் அக்குளில் வியர்வை அதிகம் வெளிவருவது மற்றும் அழுக்குகள் சேர்வது குறையும். இதன் காரணமாக உடல் துர்நாற்றத்தைத் தடுக்கலாம்.

டிப்ஸ் 4: ஆண்கள் ட்ரெண்டி ஹேர் ஸ்டைல் என்று பொருத்தமில்லாத ஹேர் ஸ்டைலைப் பின்பற்றுவதைத் தவிர்த்து, தங்களுக்கு பொருத்தமான ஹேர்ஸ்டைலைப் பின்பற்றினாலே, அழகாக காட்சியளிப்பார்கள்.

டிப்ஸ 5: நல்ல வாசனைமிக்க டியோடரண்ட்டுகளைப் பயன்படுத்த வேண்டும். பெண்களை விட ஆண்களுக்கு அதிகமாக வியர்வை வெளிவரும். டியோடரண்ட்டுகளைத் தவிர்த்தால், அதனால் உடல் துர்நாற்றம் வீச ஆரம்பிக்கும். எனவே நாள் முழுவதும் நீடித்திருக்கும் டியோடரண்ட்டுகளைப் பயன்படுத்த வேண்டும்.

டிப்ஸ் 6: தேவதாஸ் போன்று நீளமாக தாடியை வைத்துக் கொள்ளாமல், அழகாக ட்ரிம் செய்யுங்கள்.



ஏனெனில் பெண்களுக்கு அளவாக தாடி வைத்திருக்கும் ஆண்களைத் தான் பிடிக்கும். எனவே அதனைப் பின்பற்றுங்கள்.

டிப்ஸ் 7: உதடுகளை வறட்சியு டன் வைத்துக் கொள்ளாமல், அழகாக வெளிக்காட்டும் வகையில் ஈரப்பசையுடன் வைத்துக் கொள்ளுங்கள். ஒருவேளை உங்களுக்கு உதடு அதிகம் வறட்சியடைந்தால், லிப் பாம் பயன்படுத்துங்கள். இதனால் எந்த தவறும் இல்லை. பெண்கள் மட்டும் தான் லிப் பாம் பயன்படுத்த வேணடும்என்றகட்டாயம்இல்லை. பிரச்சினையை சந்தித்தால் ஆண்களும் இதனைப் பயன்படுத்தலாம்.

இப்படி உங்களை நீங்கள் கவனித்தால் பிறருக்கு உங்களில் ஈர்ப்பு வரும். பிறகென்ன நீங்களும் சொக்லேட் போய் தானே.

# பாரியின் வாரிசு

சிறுகதை

அந்தச் சின்னஞ்சிறிய வீட்டின் அமைதி குலைந்திருந்தது. ஏழு வருடங்களாக வாடகை செலுத்தாமல் அந்த வீட்டில் நிம்மதியாகக் குடியிருந்த மதியழகன் குடும்பத்தினர் இன்று நிர்க்கதியான நிலையில்...

மதியழகனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

ஒருகணம் தனது வாழ்க்கையின் அவல நிலையை எண்ணிப் பார்த்தான். பெரியவர் உயிரோடு இருக்குமட்டும் தானும் தனது குடும்பமும் எந்தவிதக் குறையுமில்லாது தங்களது சொந்த வீடாகவே கருதி வாழ்ந்து வந்திருக்கிறார்கள்.

திடீரென ஒருநாள் பெரியவர் கையினால் நெஞ்சைப் பொத்திப் பிடித்துக்கொண்டு "நெஞ்சு வலிக்கிறது" என்று சொன்னார். அவரை வைத்தியசாலைக்கு கொண்டு போகவென மதியழகன் ஆட்டோ பிடிக்க ஓடினான். அவனது மனைவியான மல்லிகா தைலம் தேய்த்து நெஞ்சைத் தடவி விட்டாள். பெரியவரோ...திக்கித் திணறியவாறு சொன்னார்.

"பிள்ளை...! அலுமாரிக்குள்ள காசு கிடக்குது. எடுத்து...."

அவரது தலை சரிந்தது. பெரியவர் அவர்களுக்கு உறவுமல்ல, முன்பின் தெரிந்தவரும் அல்ல. அவர்கள் செட்டிகுளம் தடுப்பு முகாமிலிருந்து வந்தபோது பெரியமனத்துடன் தங்களது வீட்டில் தங்க இடம் கொடுத்தவர். இரண்டே அறைகளைக் கொண்ட சிறிய வீடுதான் அவருடையது. அவரும் அவரது மனைவியுமாக இருவரும் ஒரு அறையில் தங்கிக்கொண்டு மற்றைய அறையை மதியழகனது குடும்பத்தினருக்கு உபயோகிக்கக் கொடுத்திருந்தார்.

அவருக்கு குழந்தை குட்டி கிடையாது.மதியழகனின் குழந்தைகளைத் தன் சொந்தப் பேரப்பிள்ளைகளாகவே கருதிச் சீராட்டினார். பிள்ளைகளும் அவர்களைத் தாத்தா, அம்மம்மா என வாஞ்சையுடன் அழைத்தனர். இரு குடும்பத்தவரும் ஒருவருக்கொருவர் புரிந்துணர்வுடன் உதவியாக வாழ்ந்து வந்தனர்.

திடீரென ஒருநாள் பெரியவரின் மனைவி பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டு படுக்கையிலிருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. அந்தச் சமயத்தில் மதியழகனின் மனைவி முழுப் பொறுப்பையும் ஏற்று அவளைத் தன் சொந்தத் தாயாகவே கருதி படுக்கையில் வைத்துப் பராமரித்து வந்தாள். அவளது குழந்தைகளும் அவளுக்கு உறுதுணையாயிருந்தனர்.

ஒரு நோயாளியை படுக்கையில் வைத்துப் பராமரிப்பது என்பது என்ன சுலபமான விடயமா? மல்லிகாவும் பிள்ளைகளும் சிரமப்படுவதைக் கண்டு மனம் வெதும்பினார் பெரியவர். மதியழகன் கூலி வேலைகளுக்குத்தான் போய் வந்தான். அவரும் பார்த்துப் பார்க்காமல் வீட்டுச் செலவுகளைக் கவனித்துக் கொண்டார். அவருக்கும் வருமானம் என்று எதுவுமில்லை. வளவிலுள்ள பிரயோசனங்களும் முதியவர்களுக்கு கொடுக்கும் உபகாரச் சம்பளமும் மட்டும்தான்.

மனைவியின் உடல்நிலை மோசமாகி ஒருநாள் அவள் இவ்வுலக வாழ்க்கையைத் துறந்து கண்களை மூடிக் கொண்டாள். இவ்வுலக வாழ்வில் இல்லறம் என்னும் இனிய பந்தத்தில் தன்னுடன் இணைந்து இற்றைவரை கூடிப் பயணித்தவளின் இழப்பு அவரை உலுக்கியபோது ஒரு மகனாக நின்று மதியழகன் கைகொடுத்தான். மனைவியின பிரிவுக்குப்பின் அவர் சோர்ந்து போனார்.

மரணச்சடங்கிற்கு அயலவர்கள் நிறையப்பேர் வந்திருந்தார்கள்.உறவினர் என்று சிலரே வந்திருந்தார்கள். என்னதான் இருந்தாலும் பிள்ளைகள் என்று இருந்திருந்தால் மருமக்கள் அவர்களது குடும்பத்தவர், பேரப்பிள்ளைகள் என்று வம்சமே விரிவடைந்திருக்கும். அதற்குச் சந்தர்ப்பமில்லாமல் போய்விட்டது. மனைவிக்கு அவரே தன் கையால் தீமூட்டினார்.

காலம் தன் கடமையைச் செவ்வனே செய்து கொண்டிருந்தது.

பெரியவரும் ஒருநாள் போய்ச் சேர்ந்து விட்டார்.

மதியழகன் செய்வதறியாது திணறிப் போனான். ஏதோ பெரியவர் சேர்த்து வைத்திருந்த பணத்தில் மரணச்சடங்கிற்கு ஆயத்தங்கள் செய்தான். மல்லிகா சொன்னான்.

"ஐயா உங்களை மகனாகத்தான் நினைச்சு நடந்தவர். அவருக்கு நீங்களே கொள்ளியை வைச்சு விடுங்கோ. அவரை அநாதையாய் ஆக்கி விடக் கூடாது"

மதியழகனும் தானே கொள்ளி வைப்பதென முடிவெடுத்தான். அங்கு வந்து கூடியிருந்த அயலவர்களும் உறவினர்களும் கூட அதை ஆமோதித்தனர். ஈமக்கிரியைகளுக்கு ஆயத்தம் நடந்து கொண்டிருந்தது. மதியழகன் ஆசாரசீலனாக வந்து அமரப் போகும் நேரத்தில் ஒரு குரல் கேட்டது.

"சித்தப்பாவுக்கு கொள்ளி வைக்க நானிருக்கிறேன். வேற ஒருத்தரையும் வைக்க நான் விடமாட்டான்"

செய்தியறிந்து வவுனியாவிலிருந்து பெரியவரின் அண்ணனது மகனான சிவநாதன் வந்திருந்தான். மதியழகன் ஒதுங்கிக் கொண்டான்.எப்படியும் ஐயாவுக்கு உருத்துக்காரனது கையால் கொள்ளி



கிடைப்பது அவர் செய்த பேறு என அவன் கருதினான். சிவநாதனே கொள்ளி வைத்தான். அந்நியேட்டி கிரியைகளையும் அவனே வந்து செய்தான்.

செலவுகள் எதிலும் பங்கு கொள்ளவில்லை. அந்தியேட்டிக்கு வந்துவிட்டுப் போகும்போது ஒரு வார்த்தை சொல்லி விட்டுப் போனான்.

"சித்தப்பாவின்ரை வீடுவளவு இனி எனக்குத் தான் சொந்தம். நீங்கள் ஒரு மாதத்துக்குள்ள வேற வீடு பார்த்துப் போயிடங்கோ. அதுதான் உங்களுக்கும் நல்லது. எனக்கும் நல்லது"

இதுநாள் வரை சொந்த வீடாகவே நினைத்து வாழ்த்துவிட்ட மதியழகனுக்கும் மல்லிகாவுக்கும் இப்போது தான் உறைத்தது. "என்ன செய்வது.

இத்தனை காலமும் பெரியவர் எங்களை இருக்கவிட்டார். அதுக்குப் பிரதி உபகாரமாக நாங்களும் அவரையும் அம்மாவையும் வடிவாய்ப் பாத்து விட்டோம். இனியும் நாங்கள் இந்த வீட்டில இருக்க எங்களுக்கு என்ன அருகதை இருக்கிறது?" மதியழகன் ஆற்றாமையுடன் சொன்னான். சொன்னதுடன் நிற்காமல் வாடகைக்கு வீடு பார்க்கத் தொடங்கியும் விட்டான்.

அவனுடைய வருமானத் திற்கேற்றாற்போல் வாடகை வீடு தேடுவதென்பது இந்நாளில் முடிகிற காரியமா?என்ன...மாத வாடகை ஏழாயிரம், ஐயாயிரம் என்பதுடன் முற்பணமாக இலட்சம் கேட்கிறார்களே!என் செய்வான் அவன். அவ்வளவு பணத்திற்கு எங்கே போவது? மூளையைப்போட்டுக் குடைந்தும் எதுவித பரிகாரமும் கிடைக்கவில்லை.

மனைவி மல்லிகா வேறு அவனைச் சீண்டினாள்.

"அந்தாள் தந்த ஒரு மாத காலக்கெடுவும் முடியப் போகுது. நீங்கள் என்னடா எண்டால் ஒரு வீடும் பாக்காமல் பேசாமல் இருக்கிறியள்"

மனைவியின் பேச்சு மதியழகனுக்கு ஆத்திரத்தைக் கிளறிவிட்டது.

"இதென்ன உன்னுடைய கதை. வீட்டுக்கு வாடகை ஐயாயிரத்துக்குக் குறைய ஒரு இடமும் கிடையாது. அதோட... முற்பணமாய் ஒரு இலட்சம் கேட்கினம். குடுக்க உன்னட்டைக் கிடக்குதோ...."

வாயடைத்துப் போனாள் மல்லிகா. "அவ்வளவு பெரிய தொகைக்கு நாங்கள் எங்கை போறது. ஏதும் கொட்டில் வீடாய் இருந்தாலும் பறவாயில்லை.எங்களுக்கு வாடகை குடுக்க கட்டுப்படியாக வேணுமே"

"நீ நினைக்கிற மாதிரி இங்கே கொட்டில் வீடுகள் கிடையாது. நானே என்ன செய்யிறதெண்டு தெரியாமல் முழுசிக் கொண்டிருக்கிறன்"

கணவனின் நிலையைப் பார்த்து பரிதாபம் ஏற்பட்டது. எங்கேயாவது ஒரு அறை எண்டாலும் பாருங்கோ.

நாங்கள் அதிலை இருந்து கொண்டு புறம்பாய் ஒரு கொட்டில் போட்டுச் சமைப்பம்.

"வளவுக்கை கொட்டில் போட ஆரும் விடுவினமே?" என்ன விசர்க்கதை கதைக்கிறாய். சீறி விழந்தான் மதியழகன்.

அப்ப...என்னதான் செய்யப்போறியள்? என்னட்டைக் கிடக்கிறது காதில கிடக்கிற இந்தத்தோடுதான்.

இதை வித்தெண்டாலும் ஏதும் செய்வமப்பா. எக்கணம் அந்த மனுசன் வந்து எங்களைப் பிடிச்சு வெளியில விடப்போகுது.

ஆற்றாமை அவளை அப்படிப் பேச வைத்தது

டிங்!டிங்!டிங்!!!

தபாற்காரனின் சைக்கிள் மணியோசை அவர்களது கவனத்தை திருப்பியது. மதியழகன் ஓடோடிப் போய் கடிதத்தை வாங்கி வந்தான்.

"கே.தம்பையா பிரசித்த நொத்தாரிஸ் என்று அனுப்புபவரின் முகவரி தெளிவாக முத்திரையிடப் பட்டிருந்தது.

"எக்கணம் அந்தாள்தான் வளவால எழும்பச் சொல்லி நோட்டீஸ் விட்டிருக்கோ" மல்லிகா மனதுக்குள் நினைத்துக் கொண்டாள். நெஞ்சு திக் திக் என அடித்துக் கொண்டது.

மதியழகனுக்கு பெயரை பார்த்ததுமே ஞாபகம் ஒன்று தோன்றியது.

சில மாதங்களின் முன் ஐயாவை ஆட்டோவில் கூட்டிக்கொண்டு போன பிரக்கிராசியாரின்ரை பெயர்தான் அது.

எதுக்கும் கவரை உடைத்துப் பார்ப்போம் என விழைந்தான்.

"உங்களுடைய பெயரில் எழுதப்பட்ட உறுதி பதிவாகி வந்திருக்கிறது. நேரில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

கடிதத்தை வாசித்த இருவரது கண்களும் மகிழ்ச்சிப் பிரவாகத்துடன் ஆச்சரியத்தால் விரிந்தன.

மலரன்னை





இன்று நாடு அறிய, கண்டம் அறிய ரூபாய், யூரோ, யென், தினார் என பல நாணயங்கள் புழக்கத்தில் உள்ளன. இவை தவிர அமெரிக்க டொலர் மற்றும் பல நாடுகளில் டொலர்கள், பிரிட்டனில் பவுண்ட், இணையத்தில் பிட்காயின் எனவும் உண்டு. இன்று ஒரு நாட்டு நாணயத்தை, மற்றொரு நாட்டில் உள்ள நடைமுறை நாணய செலாவணிக்கு ஏற்ப மாற்றிப் பெற முடியும்.

இன்றைய வளர்ச்சி நிலை அன்று கிடையாது. ஒவ்வொரு மாகாணமும், மாநிலமும், நாடும் தனித்தனி பொருளை நாணயமாக கொண்டிருந்தன. இந்த வகையில் உலகின் அந்தக் கால '10' நாணயங்களை தற்போது பார்ப்போம்! இவற்றில் சில இன்னமும் புழக்கத்தில் உள்ளன என்பது உங்களுக்கு ஆச்சரியத்தைத் தரலாம்.

**1. ராய் கற்கள்**



படத்திலுள்ள கல்தான் இது! மைக்ரோனேசியாவில் யாப் என்று ஒரு தீவு உள்ளது. இங்கு கி.பி. 500 ஆம் ஆண்டு முதல் இப்போது வரை இதுதான் செலாவணி நாணயமாக இருந்து வருகிறது. மற்ற நாணயங்கள் போல அளவை வைத்தோ, அதில் இருக்கும் எண்ணை வைத்தோ மதிப்பு இல்லை. மாறாக இந்தக் கல் எவ்வளவு பழைமையான வரலாறு கொண்டதோ, அதற்கு ஏற்ப மதிப்பு அதிகம்.



**2.கனடியன் டயர் நாணயம**

1958ஆம் ஆண்டு கனடியன் டயர் என்பவர் உருவாக்கிய 5, 10, 25, 50 சென்ட், ஒரு டொலர், 2 டொலர் பண நோட்டுக்கள்தான் இவை. கனடாவில் நுகர்வோருக்குத் தரும் ஒரு பரிசு போல இதை உருவாக்கினர். ஆனால் இது கரன்சி போலவே மதிப்பு கொண்டதாக இப்போதுவரை இருக்கிறது. இதை பணம் போல் கொடுத்து தேவைப்படும் பொருட்களை வாங்கிக் கொள்ளலாம்.

**3. போத்தல் மூடி**

கேமரூன் நாட்டில் உள்ள ஒரு மது நிறுவனம், 2005ஆம் ஆண்டு தன்னுடைய மது போத்



தல் மூடிகளின் உட்பக்கம் சில வற்றில் பணமதிப்பை அச்சடித்து, அதனைக் கொண்டு வந்து கொடுத்து பணம் பெறலாம் என அறிவித்தது. வெற்றி பெற்றவர்கள் மூடியைக் கொடுத்து, பணமாக திரும்பப் பெற்றனர். உடனே இதனை பல நிறுவனங்கள் பின்பற்றத் தொடங்கி விட்டன.

**4. ஷையர் சில்வர் பணம்**

அமெரிக்காவின் நியூ ஹாம்ப்ஷயர் மாகாணத்தில் ஒரு நிறுவனம், ஷையர் சில்வர் கார்டு என்ற ஒன்றை 2007ஆம் ஆண்டு அறிமுகம் செய்தது. நாம் தற்போது பயன்படுத்தும் கிரெடிட் கார்டு போன்றது இது. இந்த ஷையர் கார்டு தங்கம் மற்றும் வெள்ளி கலந்து தயாரானது. இவற்றின் கலப்புக்கு ஏற்ப மதிப்பும் கூடும். இன்றுவரை இது கரன்சியாக புழக்கத்தில் உள்ளது.





**5. நாட்ஜெல்ட்**

ஜேர்மன் மொழியில் Notgeld என்றால் அவசரகால பணம் என்று அர்த்தம். 1914-1923ஆம் ஆண்டுகளிடையே ஜேர்மனி, அயர்லாந்து,சுவீடன், பெல்ஜியம் மற்றும் பிரான்ஸ் போன்ற நாடுகளில் இந்த கார்டு எமர்ஜென்சி பணமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஏன்? முதல் உலகப் போரின்போது, காசு செய்யப் பயன்படும் உலோகங்களுக்கு கடும் பற்றாக்குறை ஏற்பட்டது. அதனால் அப்போது இந்த நாட்ஜெல்ட் கார்டுகள் அவசர கால பணமாக ஏற்கப்பட்டது.




**6. டீ கற்கள்**


பிளாக் டீ,கிரீன் டீ பதப்படுத்தப்பட்ட தேயிலை நன்கு அழுத்தப்பட்டு கற்களின் வடிவில் இருக்கும். சீனா, மங்கோலியா, திபெத் மற்றும் கிழக்கு ஆசிய நாடுகளில் 19ஆம் நூற்றாண்டில் 1935ஆம் ஆண்டு வரை இவை பணமாக ஏற்றுக்கொள்ளப்பட்டன.

**7.பார்மிஜியானோ-ரெகியானோ**

பாலாடைக் கட்டிக்கும் மதிப்புண்டு. ஆமாம் குறிப்பிட்ட அளவு கொண்ட பாலாடைக் கட்டிகள் 300 யூரோ அல்லது 341 டொலர் மதிப்பு கொண்டவையாக கருதப்படுகின்றன. நம் ஊரில் தங்கத்தை ஈடு




வைப்பது போல, கடனுக்கு ஈடாக பாலாடைக் கட்டிகளை இத்தாலிய வங்கி கிரெடியோ எமிலியோனோ 1953ஆம் ஆண்டு முதல் இன்று வரை ஏற்கிறது.




**8. சிப்பிகள்**

சாலமன் தீவுகளில் 'லங்கா லங்கா' என உப்பு நீர் ஏரிப் பிரதேசம் ஒன்று உள்ளது. இவை கடலிலிருந்து மணல் திட்டுகளால் பிரக்கப்பட்டு உருவானவை. இங்கு கிறிஸ்து பிறப்பதற்கு 1200 ஆண்டுகள் முன்பிருந்தே, சிப்பிகள் பணமாக பயன்படுத்தப்பட்டு வந்தன என தொல்பொருள் ஆய்வில் தெரிய வந்துள்ளது. ஒரு சிப்பியின் மதிப்பு, சாலமன் தீவில், புழக்கத்தில் இருக்கும் 100 டொலருக்கு சமம் என கணக்கில் கொள்ள



ப்படுகிறதாம்.

9. மொபைல் போனில் பேசும் நிமிடங்கள் உலகின் பல நாடுகளில் 2011ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை பல மால்களில், கடைகளில் வாங்கிக் குவிக்கும் பொருட்களுக்கு ஏற்ப, மொபைல் போனில் பேசும் நிமிடங்கள், கூடுதலாக ஏற்பாடு செய்து தருவது தொடரு கிறது. இங்கு மொபைல் நேரம்ஹறபடேபணமாகசெயலாற்றுகிறது.



**10.100க்வின்டில்லியன் பெங்கோ**

ஹங்கேரி நாட்டில், இரண்டாம் உலகப்போருக்குப் பின் 1946 ஆம் ஆண்டு நாட்டில் பயன்படுத்தும் பொருட்களின் விலை 15 மணி நேரங்களுக்கு ஒரு முறை இரண்டு மடங்காக உயர ஆரம்பித்து, நாட்டின்மிகப்பெரிய பணவீக்கத்துக்கு வழி வகுகக 0.2 டொலர் மதிப்பு கொண்ட பணநோட்டை அந்த நாடு அப்போதைக்கு கூடுதலாக வெளியிட்டு சமாளிக்க வேண்டியதாயிற்று•





சார், லோன் கேட்குறீங்களே,
எங்க எக்கவுண்ட் வச்சுருக்கீங்க?
டுவிட்டர்,பேஸ்புக்,வெட்டிக்கடை,
மலிகைக்கடை, எல்லாத்திலேயும்!!!




பிச்சை எடுக்கிறது மகா
கேவலம்ப்பா! நான் உங்கள
பிச்சை எடுக்க சொல்லலியே...
போடத் தானே சொல்றேன்



பட்டப்பகல்லே லைட்டைப்
போட்டுக்கிட்டு ஏன் பாட்டுப்
பாடிக்கிட்டு இருக்கே?
இதுதான் லைட் மியூஸிக்...



எங்கப்பா என்கிட்டே எது
சொன்னாலும் ஒழுங்கு
மரியாதையோட தான் சொல்வாரு
என்ன சொல்றே நீ எப்பவும் என்கிட்டே
டேய்...நான் சொல்றதை ஒழுங்கு
மரியாதையா கேளுன்னு சொல்வாரு



வேலைக்கு தினமும் அரை மணி,
முக்கால் மணி லேட்டாகவே
வர்றீங்களே...ஏன்?
நீங்கதானே வேலைன்னு
வந்துட்டா டைம் பார்க்கக் கூடாது
என்று சொன்னீங்க




அவர் திடீர் பணக்காரனா ஆன
பிறகு கூட ஆள் மாறலைங்க...
பரவாயில்லையே...!நிஜமாகவா...?
ஆமாம்! அவர் எனக்குத் தர
வேண்டிய நூறு ரூபாய்
கடனை இன்னும் தரலை!



மனைவி:-ஏங்க எனக்கு ஒரு கனவு
வந்துச்சுங்க. அதுல நீங்க எனக்கு
ஒரு வைர மோதிரம் வாங்கிற
மாதிரி இருந்துச்சுங்க...
கணவன்:-ஆனா அதுக்கு
உங்கப்பா பில் கட்ற மாதிரி
எனக்கு கனவுல வந்துச்சு...



வகுப்பு அறையில் மாணவிகள்
கடைசி பெஞ்சில் வாக்குவாதம்
செய்து கொண்டு இருந்தார்கள்.
மாணவி1:-நீ ஒரு லூசுடி
மாணவி2:- நீ தாண்டி லூசு
டீச்சர்:-அங்க என்னாங்கடி சத்தம்...
இங்க நான் ஒருத்தி இருக்கிறது
உங்க கண்ணுக்கு தெரியலையா...



ஞாபக மறதியால தப்பு
செய்துட்டேன் டாக்டர்.
அப்படி என்ன தப்பு செய்தீங்க.
ராத்திரியெல்லாம் ஒரு நல்ல
டாக்டர் கிட்ட போகனும்னு
நினைச்சேன். இப்ப மறந்துட்டு
உங்ககிட்ட வந்துட்டேன் டாக்டர்.



உங்களுக்கு ஊசி போட!
ஸ்பெஷலா... சாதாவா?
இரண்டுக்கும் என்ன வித்தியாசம்?
டாக்டர்:-ஸ்பெஷல்னா ஊசி போட்ட
இடத்துல நர்ஸ் தேய்ச்சுவிடுவாங்க!
சாதான்னா கம்பவுண்டர்
தேய்ச்சு விடுவாரு!



# கோர்ட்டில் வாதாடும் எந்திரன்!

"அப்ஜெக்ஷன யுவர் ஆனர்" சொல்லி பிணைக்கு மல்லுக்கட்டும் வண்டு முருகன் போன்ற சூறாவளி சட்டத்தரணிகளைப் பார்த்திருப்போம். ஆனால் இனி அது எந்திரன்களின் குரலாகவும் கூட இருக்கலாம். நீதிமன்ற சூழலுக்கு இது நிச்சயம் புதுசுதான். உலகளவிலான சட்ட சேவைகளை வழங்கும் நிறுவனமான பேக்கர் அண்ட் ஹோஸ்டெட்லர் அண்மையில் ரோபோ சட்டத்தரணியை பணியில் அமர்த்துவதாக அறிவிப்பொன்றை வெளியிட்டது.

ரோஸ் எனும் பெயருடைய இந்த எந்திரன், வங்கியின் திவால் சட்டம் தொடர்பான வழக்குகளை கையாளப்போகிறது. இந்த சட்ட மையத்தில் பயிற்சி சட்டத்தரணிகளாக 50 பேர் பணியாற்றி வருகின்றனர். ஐ.பி.எம்மின் வாட்சன் எனும் கணனிதான் ரோஸ் எந்திரனின் அடிப்படை. ஒருவர் கேட்கும் கேள்விகளுக்கு ஆதாரம், சான்றுகள், கருதுகோள்கள் உள்ளிட்டவற்றை ஆராய்ந்து பதில் கூறுகிறது. சட்டம் தொடர்பான ஆராய்ச்சியினையும் இதன் மூலம் செய்து சரியான விடையைப் பெற முடியும்.

"வழக்கின் தற்போதைய போக்குகளையும் அறிந்து, அது எப்படி வழக்கினை மாற்றும் என்பதையும் கணித்து, தொடர்ந்து தனது அனுபவத்திலிருந்தும், மற்றவர்களிடம் உரையாடுவதிலிருந்தும் ஒவ்வொன்றையும் வேகமாக கற்றுக்கொள்கிறது" என ரோஸ் குறித்த இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது.

"புதிய தொழில்நுட்பமான இந்த ரோபோவைப் பயன்படுத்தி எங்களது வாடிக்கையாளர்களுக்கு சிறப்பான சேவையை வழங்க முடியும் என் நம்புகிறோம். இத்துறையில் தலைவர் ஆகும் வல்லமை பெற்ற இந்த ரோபோவுடன் பணிசெய்வது எங்களுக்கு பெரும் மகிழ்ச்சி. நாங்கள் இதுபோல செயற்கை அறிவு கொண்ட ரோபோக்களை சட்டத்துறை உதவியாளர்களாக மேம்படுத்த இருக்கிறோம்" என்கிறார் பேக்கர் அண்ட் ஹோஸ்டெட்லர் நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் பாப் கிரெய்க்.


"இந்த நிறுவனம் எங்களுடைய ரோஸ் எந்திரனை முதன்முதலில் பயன்படுத்துவதாகக் கூறியுள்ளது. மேலும் பல்வேறு நிறுவனங்கள் ரோஸ் எந்திரனை பயன்படுத்துவதற்கான ஒப்பந்தத்தை எங்களுக்கு அளிப்பார்கள் என்று நம்புகிறோம்" என உற்சாகமாகப் பேசுகிறார், இந்த ரோபோவைத் தயாரித்த ரோஸ் இன்டெலிஜென்ட்ஸ் நிறுவனத்தின் துணை நிறுவனரான ஆண்ட்ரூ அருடா.

மனிதர்களின் பொய் சாட்சிக்கு முன் ரோஸ் எப்படி தாக்குப் பிடித்து டி.ஆர் போல வசனம் பேசி தன் தரப்பை நிரூபிக்குமோ தெரியவில்லை! ஆனால், நீதிமன்றில் இந்த எந்திரன் சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்து வாதாடுவதை கற்பனை செய்து பாருங்கள் செமையா இருக்கும்!

# நம்பினால் நம்புங்கள்



- பூனைகளால் இசையை ரசிக்க முடியும். பூனை வகைகள் தகவல் பரிமாற்றம் செய்யும் அலை வரிசையிலேயே இசை அமைந்திருப்பதே இதற்குக் காரணம்.
- பற் சிகிச்சை அளிக்கும் வைத்தியசாலைகளில் நோயாளிகள் பார்க்கும் வகையில் 'டாம் அண்ட் ஜெர்ரி' கார்ட்டூன் படங்கள் ஒளிபரப்பப்படுகின்றன.
- நடுத்தர அளவிலான உடற்பயிற்சிகளால் மனச்சோர்வை குணப்படுத்த முடியும். பிற்காலத்தில் மனச்சோர்வு ஏற்படாமல் தடுக்கவும் முடியும்.
- மூளையில் காயம் ஏற்பட்டவர்களின் நினைவாற்றலை திரும்பப் பெற இசை உதவுகிறது.
- ஐரோப்பிய யூனியனில் 2011 இல் மட்டுமே 1.15 கோடி விலங்குகள் ஆய்வகப் பரிசோதனைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.
- உலகில் 120 கோடி மக்கள் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். அதில் 70 கோடி பேர் ஆடுவது ஒன்லைனில்!
- மழைக்கு பயப்படும் மனநிலைக்குப் பெயர் Ombrophobia. இப்பிரச்சினை தீவிரமான மனக்கலக்கத்தை உண்டாக்கும்.
- காலில் பலகை கட்டிக்கொண்டு ஆடும் ஹோவர் போர்டு விளையாட்டு, நியூயோர்க் நகரத்தில் கடந்த ஆண்டு வரை தடை செய்யப்பட்டிருந்தது ●



# போட்டோ கிராபராக இருங்கள்!

உலகை உருவாக்கிய இறைவன் மனிதர்களுக்கு தண்ணீர், காற்று, வெப்பம், காய், பழம் என அனைத்து வசதிகளையும் உருவாக்கிக் கொடுத்தான். இவர்கள் இதற்கெல்லாம் சிரமப்படாமல் உற்சாகமாய் வாழ்ந்து புதியனவற்றை உருவாக்க வேண்டும் என அவன் கனவு கண்டான்.


தன்னுடைய கனவு நிறைவேறியிருக்கிறதா? என்பதைக் காண ஐம்பது ஆண்டுகள் கழித்து பூமியைப் பார்வையிட வந்தான். மக்கள் எல்லோரும் மிகுந்த சோம்பேறிகளாய் இருப்பதை கண்டு வருத்தமுற்றான். இதற்கான காரணத்தைக் கண்டறிய அங்கே இருப் பவர்களிடம் பேசத் தொட ங்கினான்.

முதலாமவனைச் சந்தித்த போது எனக்கு வயதாகிவிட்டது. இனி நான் உழைத்து என்ன ஆகப் போகிறது என்றான்.

இரண்டாமவனோ இயற்கை வளங்கள் இருக்கின்றன. சாப்பாட்டுக்குப் பஞ்சமில்லை. பிறகு ஏன் உழைக்க வேண்டும் என்றான்.

எல்லோரும் உழைக்கவில்லை. அதனால் நானும் உழைக்கப் போவதில்லை என்றான் மூன்றாமவன்.

வெறுத்துப்போன இறைவன், மிகுந்த யோசனைக்குப் பிறகு மனிதர்களிடம் இருந்த 'முடியாது', 'இயலாது', 'செய்யமாட்டேன்', 'யோசிக்கமாட்டேன்', 'போதிய வயதில்லை' என்பன போன்ற எதிர்மறைச் சொற்களையெல்லாம் நீக்கிவிட்டான். இதனால் மனிதர்கள் பொசிட்டிவாக சிந்திக்கத் தொடங்கினர். பூமியும் வளம் பெற்றது.





ஆம்! நம்மிடமும் நிறைய திறமைகள் இருந்தும் வாய்ப்புகள் இருந்தும், 'இயலாது', 'முடியாது' என்று நம்மை நாமே இயங்கவிடாமல் செய்து கொண்டிருக்கிறோம். இந்த எதிர்மறைச் சொற்களை நம்மிடமிருந்து நீக்கிவிட்டால் நம்மாலும் ஜெயிக்க முடியும்.

இன்று ஒருநாள் மட்டுமாவது நீங்கள் உங்களுக்குள்ளும் பிறரோடும் பேசுகிற பேச்சினை கூர்ந்து கவனியுங்கள். அதில் குறைந்தபட்சம் நாளொன்றுக்கு பத்து முறையாவது எதிர்மறைச் சொற்களைப் பயன்படுத்துவதை நீங்கள் உணர லாம். இவைதான் உங்களை வெற்றி பெறாமல் தடுக்கச் செய்கிற தடைக்கற்கள் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

டிஜிற்றல் கமரா கண்டு பிடிப்பதற்கு முன்புவரை போட்டோகிராபர்கள் என்ன செய்வார்கள் தெரியுமா? தாம் போட்டோ எடுத்த பிறகு நெகட்டிவை கழுவி பொசிட்டிவாக்குவார்கள். நெகட்டிவையெல்லாம் பொசிட்டிவாக்குகிற இந்த சிந்தனையை நாம் அவர்களிடமிருந்தும் கற்றுக்கொண்டால் போதும்.


பொதுவாக எதிர்மறைச் சிந்தனைகள் நம்மை வேகமாக ஈர்க்கக்கூடியவை. நம்மை வேலை பார்க்க விடாமல் சோம்பேறியாக மாற்றக் கூடியவை. எனவே இவை வெற்றிக்கு உதவாதவை.

நேர்மறைச் சிந்தனை என்கிற போது அதில் முக்கியமான ஒரு அங்கம் பிறரைப் பாராட்டுவது ஆகும். பிறரைப் பாராட்டுவதால் நாம் தாழ்ந்து விடுவதாக அர்த்தமில்லை. இதன் மூலம் அவரது திறமையை அங்கீகரிக்கிறோம். அவ்வளவுதான்.

நீங்கள் ஒரு நல்ல தலைவனாக இருக்க வேண்டுமானால் உங்களைச் சுற்றியுள்ளோரின் திறமைகளை இனம்கண்டு அவர்களைப் பாராட்ட வேண்டும். மனிதர்கள் பணத்தைவிட பாராட்டுக்குத்தான் அதிகம் ஏங்குவதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. உங்களை இதற்கு முன் யாராவது பாராட்டிய போது உங்கள் மனநிலை எப்படி இருந்தது என்பதை யோசித்துப் பார்த்தாலே இந்த உண்மை புரியும்.

எம்மிடம் பொதுவாக பாராட்டுகிற குணம் குறைவு. பாராட்டுவது என்றாலே அது ஜால்ரா போதுவது என்று எண்ணத் தொடங்கி விடுகிறோம். எதையும் எதிர்பார்த்து பாராட்டுவதற்குத் தான் ஜால்ரா போடுவது என்று பெயர். எதையும் எதிர்பார்க்காமல் பாராட்டுவதை உங்கள் இயல்பாக்கிக் கொண்டால் போதும்.

நாள்தோறும் குறைந்தபட்சம் ஒருவரையாவது பாராட்டிப் பழகுங்கள். பாராட்டுப் பெறுவோர் உங்களுக்குமிக வேண்டப்பட்டவர்களாக மாறும் மெஜிக்கை நீங்கள் காண முடியும் ●



# அரநாயக்கவை அழித்த அடைமழை ; மண்சரிவு



இலங்கையை உலுக்கிய இயற்கைப் பேரிடரில் சிக்கிப் பலியானவர்களின் எண்ணிக்கை 104 ஆக உயர்ந்துள்ளது.

இவ்வளவு உயிரிழப்பு குறுகிய காலப்பகுதியில் இடம்பெற்றுள்ளமை மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இன்னும் இயற்கையின் சீற்றம் ஓயாது தொடர்வதால் தாழ்நிலப் பிரதேச மக்கள் வெளியேற்றப்பட்டு வருகின்றனர். அதேவேளை மண்சரிவு அபாயங்கள் ஏற்படக்கூடும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ள பகுதிகளிலிருந்தும் மக்கள் வெளியேற்றப்பட்டுக் கொண்டுள்ளனர்.

அண்மையில் ஏற்பட்ட கனமழை, வெள்ளம், மண்சரிவு என்று நீண்ட இயற்கை அனர்த்தப் பாதிப்பிலிருந்து மக்கள் இன்னும் மீளவில்லை. மக்களின் இயல்பு வாழ்க்கையை மீட்டுக்கொடுக்கும் முயற்சியில் அரசாங்கம் தீவிரம் காட்டி வருவதாகக் கூறப்பட்டாலும் மக்களின் மனோநிலை வேறுவிதமாகவேயுள்ளது.

மக்களின் வாழ்க்கையைச் சீரழித்த இயற்கையின் சீற்றம் கொடுத்த வேதனைகளிலிருந்து அவர்கள் மீள பல ஆண்டுகள் இன்னும் எடுக்கும் என்பதை யாரும் மறுக்க முடியாது. அதேவேளை இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்டவர்கள் மனநிலை பாதிக்கப்பட்டவர்களாக மாறக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதை வைத்தியர்கள் எச்சரிக்கையுடன் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அடைமழை வெள்ளத்தில் அள்ளுண்டு போனவர்களும் மண்சரிவுக்குள் சிக்குண்டவர்களும் உயிரைக் காக்க அவலக்குரல் எழுப்பியதை கேட்டவர்களின் மனம் படும் பாட்டை யார் அறிவார்கள்.

மக்களின் துன்பத்தைக் கண்டு உதவ வந்தவர்களின் நிவாணப்பொருட்கள் நாளாந்தம் பெருகிக் கொண்டிருக்கின்றன. அமெரிக்கா, இந்தியா.சீனா.ஜப்பான், பங்களாதேஷ் போன்ற நாடுகள் பெருமளவு நிவாரணப் பொருட்களை அனுப்பி வைத்துள்ளன.

அதுமட்டுமின்றி ஐரோப்பிய ஒன்றியம், யுனிசெப் போன்ற சர்வதேச அமைப்புக்களும் உதவிகளை வழங்கியுள்ளன.

மருந்துப் பொருட்கள், மருத்துவ நிலையங்களுக்கான உதவிகள், குடிநீர் வசதிகள், நலன்புரி நிலையங்களை அமைப்பதற்கான வசதிகள் என்பன உள்ளடங்குகின்றன.

## வடக்குக்கும் வருமா நிவாரணப் பொருட்கள்?

அடைமழை காரணமாக ஏற்பட்ட பாதிப்புக்கள் வடக்கு மாகாணத்தையும் விட்டு வைக்கவில்லை.

உயிர்ச்சேதம் அதிகளவில் இடம்பெறவில்லை என்றபோதும் சொத்தழிவுகள், பயிர் அழிவுகள் அதிகளவில் இடம் பெற்றுள்ளன.

மக்கள் தமது வாழ்விடங்களை விட்டு வெளியேறி நலன்புரி முகாம்கள், பாடசாலைகளில் தங்கியிருந்தனர்.

மக்களின் அவல நிலையைக் கண்ட நல்லுள்ளங்கள் ஓடிச்சென்று உதவிகள் புரிந்தன. ஆனால் வடக்கு மாகாணத்தில் இயற்கை அனர்ந்தங்களால் பாதிக்



கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணப் பொருட்கள் போதுமானதாக இல்லை.

அரசால் ஏனைய பகுதிகளுக்கு வழங்கப்படும் நிவாரணப் பொருட்கள் வடக்கிற்கு வழங்கப்படவில்லை.

வடக்கு மாகாணத்தில் கிளிநொச்சி மாவட்டம் மழை வெள்ளத்தால் அதிகளவில் பாதிக்கப்பட்ட போதும் நிவாரணப் பொருட்களை வழங்குமாறு இங்குள்ள அரசியல் தலைவர்கள் அழுத்தம் பிரயோகிக்கத் தவறிவிட்டனர்.

மக்கள் பிரதிநிதிகளின் காத்திரமான அழுத்தங்கள் இல்லாத காரணத்தால் வடக்கு நோக்கி அரசின் நிவாரணப் பொருட்கள் வருமா? இல்லையா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

பெருந்தொகையான நிவாரணப் பொருட்கள் இலங்கையை வந்தடைந்துள்ளன. அவற்றை களஞ்சியப்படுத்த முடியாமல் அரசு அல்லாடுகிறது என்று அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க கூறியுள்ளார்.

ஆனால், வடக்கு மாகாண மக்களுக்கோ அரசால் நிவாரணப் பொருட்கள் பகிர்ந்தளிக்கப்படும் எந்தவித முன்னேற்பாடுகளும் செய்யப்படவில்லை. மத்திய அரசு தான் அவ்வாறு ஓரவஞ்சகத்துடன் செயற்படுகிறது என்றால் மாகாண அரசும் நிவாரணப் பொருட்களை வழங்க எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை.

## அரநாயக்கவில் ஏற்பட்ட அழிவு

அரநாயக்கவில் கடந்த 17.05.2016 அன்று இரவு திடீரென ஏற்பட்ட மண்சரிவு மூன்று கிராமங்களை பாதிப்புக்குள்ளாக்கியது. மக்கள் அதிகளவில் பலியானது இங்கே ஏற்பட்ட மண்சரிவால்தான். இன்றுடன் இங்கு மீட்புப் பணிகளை இடைநிறுத்தவுள்ளதாக இராணுவம் அறிவித்துள்ளது. இருப்பினும் மண்சரிவிற்குள் எத்தனை பேர் சிக்கினர், எத்தனை பேர் காணாமற் போயுள்ளனர்? என்ற உறுதிப்பாடான தகவல்கள் வெளியிடப்படவில்லை. இதனால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என்ற அச்ச நிலை நீடிக்கிறது.



மக்களின் அச்சநிலையை மேலும் அதிகரிக்கும் வகையில் இயற்கையின் சீற்றம் இன்னும் நீடிப்பதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தகவல் வெளியிட்டுள்ளது.

## வெள்ளக்காடான தலைநகரம்

மழை வெள்ளத்தால்கொழும்பே அதிகளவில் பாதிப்புக்களை எதிர்கொண்டது. கொழும்பிலும் கொழும்பு புறநகர்ப்பகுதிகளிலும் 12 அடிக்கு மேல் வெள்ளம் ஏற்பட்டதாகவும் கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்னரே இவ்வாறான வெள்ள அழிவை கொழும்பு வாழ் மக்கள் எதிர்கொண்டனர் என்றும் புள்ளிவிபரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

களனி கங்கையின் நீர் மட்டம் உயர்வடைந்ததால் இந்த வெள்ள அனர்த்தத்திற்கு கொழும்பு மாநகரம் உட்பட்டது. மக்கள் பெரும் துன்பத்தை அனுபவித்து தமது இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப முற்பட்ட நிலையில் மீண்டும் கனமழை பெய்ய ஆரம்பித்துள்ளது.

இதனால் மக்கள் செய்வதறியாது திகைப்புடன் நாளாந்தம் தமது வாழ்க்கையைக் கழித்து வருகின்றனர். மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு அச்சுறுத்தல் விடும் இயற்கை , உயிரிழப்புக்களையும் ஏற்படுத்தி நீங்காத சோகத்தை ஏற்படுத்துகிறது.

## மாணவர்கள் 29 பேர் பலி!

இலங்கையில் ஏற்பட்ட அசாதாரண காலநிலையால் ஏற்பட்ட பாதிப்புக்களில் சிக்கி இதுவரை 29 மாணவர்கள் பலியாகியுள்ளனர் என்ற அதிர்ச்சித் தகவலை கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் கூறியுள்ளார்.

29 மாணவர்களின் உயிரைக்குடித்த இயற்கைப் பேரிடர் பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் கல்வி நடவடிக்கையையும் பாதித்துள்ளது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். மாணவர்களின் கல்வி நட



வடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ள அதேவேளை பலர் அநாதைகளாகவும் அங்கவீனர்களாகவும் மாற்றப்பட்டுள்ளனர். இத்தகைய கொடுமையை அந்த மாணவர்கள் எதிர்பார்த்திருக்க வாய்ப்பில்லை.

## பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாத்தல் வேண்டும்

அனர்த்தப் பாதிப்பிலிருந்து மீண்டு வருவதற்கு முன் மீண்டும் பாதிப்புக்குள்ளாகும்துர்ப்பாக்கிய நிலையை அடைந்துள்ள மக்களைப் பாதுகாக்க வேண்டிய பாரிய பொறுப்பு அரசைச் சார்ந்துள்ளது. அதேவேளை தொண்டு நிறுவனங்களும் முன்வந்து மக்களைப் பாதுகாத்தல் வேண்டும்.

மக்களின் எதிர்கால வாழ்க்கையை நம்பிக்கைக்குரியதாக மாற்ற எல்லோரும் இணைந்து பாடுபட வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு பகிர்ந்தளிக்கவென பிற நாடுகள் வழங்கிய நிவாரணப் பொருட்களை உரிய முறையில் பகிர்ந்தளிக்க வேண்டும்.

அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கையளிக்கவென வழங்கப்பட்ட நிவாரணப் பொருட்களை கையாடல் செய்ய அனுமதிப்பது பெரும் பாவச்செயலாகும் அதற்கான சூழ்நிலையை இல்லாமல் செய்ய வேண்டும்.

பிரதேசவாதம், மொழி, இன.மத பேதமின்றி பாதிக்கப்பட்ட சகல மக்களுக்கும் நிவாரணப் பொருட்களை பகிர்ந்தளிக்க அரசு உரிய பொறிமுறையை அமைப்பது இன்றியமையாததொன்று.

காண்டீபன்

# காலத்தால் அழியாத கானங்கள் ...

படம் : பராசக்தி
இசை : சுதர்சனம்
பாடல் : அனல்தங்கே
பாடியவர் : M .S இராஜேஸ்வரி



ஓ.....ரசிக்கும் சீமானே வா
ஜொலிக்கும் உடையணிந்து
களிக்கும் நடனம் புரியோம்

அதை நினைக்கும் பொழுது மனம்
இனிக்கும் விதத்தில் சுகம்
அளிக்கும் கலைகள் அறிவோம்

கற்சிலையின் சித்திரம் கண்டு
அதன் கட்டழகிலே மயக்கம் கொண்டு
கற்சிலையின் கட்டழகிலே மயக்கம் கொண்டு

வீண் கற்பனையெல்லாம் மனதில் அற்புதமே என்று
மகிழ்ந்து விற்பனை செய்யாதே மதியே

தினம் நினைக்கும் பொழுது மனம் இனிக்கும் விதத்தில் சுகம்
அளிக்கும் கலைகள் அறிவோம் (ஓ.....ரசிக்கும் சீமானே வா)

வானுலகம் போற்றுவதை நாடி
இன்ப வாழ்க்கையை இழந்தவர்கள் கோடி
பெண்கள் இன்ப வாழ்க்கையை இழந்தவர்கள் கோடி
வெறும் ஆணவத்தினாலே
பெரும் ஞானியைப் போலே நினைத்து
வீணிலே அலைய வேண்டாம்!!!

தினம் நினைக்கும் பொழுது மனம் இனிக்கும் விதத்தில் சுகம்
அளிக்கும் கலைகள் அறிவோம் (ஓ.....ரசிக்கும் சீமானே வா)

**இப்பாடலை SMS மூலம் விரும்பிக் கேட்பவர்கள் கனகமணி, ரட்ணம் குடும்பம்- உரும்பிராய், சிவலோகினி- நல்லூர், தேவானந்- கல்வியங்காடு, தேவகி, கலைமகள், விஜிதா**

*அன்பு வாசகர்களே!*
காலத்தால் அழியாத கானம் பகுதிக்கு நீங்கள் ளும் பாடல்களை விரும்பிக் கேட்கலாம். உங்கள் பெயர், முகவரியுடன் விரும்பிக் கேட்பவர்கள் பெயர், முகவரியையும்
**021 567 1543**
எனும் இலக்கத்திற்கு **SMS** செய்யுங்கள்.

## இலக்கிய நயம்

### இலக்கியம் என்றால் என்ன?

இலக்கியம் என்ப தென்ன இலங்கிடும் உள்ள உணர்வு
இலக்கியம் இன்ப ஊற்று இயற்கையிற் காணும் அழகு
இலக்கியம் தூய தெளிவு ஈர்த்துளம் ஆளு மாற்றல்
இலக்கியம் மனித வாழ்க்கை
இவையெல்லாம் பேசும் எழுத்து! வேறு
கற்றுப் படிப்படி யாகவே-பொறி
முற்றிப் பழுத்துயர் வாகையில்
பற்றிப் படரும் நினைவுகள்- நிறை
வுற்றுப் பிறக்க முனைகையில்

வண்டு மலரைக் குடைதல்போல்-வரக்
கண்ட பொருளைக் கடைந்தபின்
உண்டு சுவைக்கும் முறையிலே-திறம்
கொண்டு கொழித்துப் பெறுவதை-

கற்றிட இன்பங் கொடுப்பதாய்-உளம்
பற்றி இழுத்துப் பிடிப்பதாய்
அற்ற உயிரும் முகிழ்வதாய்-கண்
பெற்றுக் குருடர் மகிழ்வ தாய்-

என்றும் அழகு சுரப்பதாய்-நிலை
வென்று குறிகள் விரிப்பதாய்
நின்று பயன்கள் விளைவதாய்-ஒளி
குன்றிலிருந்து பொழிவதாய்-

சிந்தை விரிவு புதியதாய்-வளச்
சொந்த இயல்பு பதிவதாய்
முந்தி மொழிந்த தொழிந்ததாய்-கொண்ட
அந்தப் பொருளை அளந்தாய்-

ஒட்டி உணர்ந்து குறியுடன்-கலை
மட்டி வடியும் முறையிலே
இட்டுத் தெரிந்த எழித்திலே-பொருள்
கட்டி வடித்தல் இலக்கியம்

### இலக்கியம் யாராற் பிறக்கின்றது?

உற்றமுறை கொண்டுணர்ந்து
உள்ளபல ஏடுகளைக்
கற்றவர்கள் எப்பொழுதும்
கற்றுக்கொண்டே இருப்பவர்கள்
பற்றிவரும் உண்மைகளைப்
பண்புடனே ஆய்பவர்கள்
பெற்றெடுப்பார் அறிவொழுகும்
பீடுடைய இலக்கியங்கள்.

எப்படித்தான் நூல்களையார் எத்தனைநாட் கற்றிடினும்
துப்புடனே நுண்பொருள்கள் துலங்கிடுமா? வாழ்க்கையிலே
இப்படியும் அப்படியும் இடறிவிழுந் தெழுந்தவர்கள்
செப்பமுடன் இலக்கியங்கள் தெளிவுடனே ஆக்கிடுவார்.

ஊறிவரும் உந்துணர்வு உருவெடுக்கும் உள்வலிமை
ஆறிவிருந் தியற்கையிலே ஆள்பவர்கள் இன்பவெறி
கூறிவரப் பெற்றவர்கள்
குதித்தெழுந்தே இலக்கியமாம்
மீறிவரும் கலையழகு
விளங்குமுயிர் விருந்தளிப்பார்.

பருந்தெனவே பறந்துநின்று
பார்த்ததெல்லாம் கறந்துநன்கு
தெரிந்தவர்கள் உண்மைகளிற்
திளைத்துவந்த அனுபவத்தை
அருந்திடநாம் ஆர்வமுடன்
அழகுடனே கட்டுதற்குப்
பொருந்துதிறன் பூண்டவர்கள்
போற்றுமிலக் கியம்பொழிவார்.

பொறிகளைநல் வழிகளிலே
பூட்டுபவர் சான்றெனவே
நெறியுடையோர் அன்படக்கம்
நேர்மையுடன் கருணையுளார்
குறியுடையோர் அமைதியெனும்
கோபுரத்திற் குடியிருப்போர்
முறையுடனே இலக்கியங்கள்
முத்துமுத்தாய்ப் பெற்றெடுப்பார்.

கற்பனையில் வல்லவர்கள்
கண்டபொருள் மிக்கமிக்க
அற்பமன்ற போதுமதற்
காற்றலினால் ஆளவல்ல
பொற்புகளைப் பூண்டுபுவி
போற்றுமெழில் பூர்க்கவைப்பார்
முற்படரும் இலக்கியங்கள்
முதற்பெரியோ னாய்ப்படைப்பார்.

விட்டவர்கள் கட்சிகளை
விரிந்தமனப் பான்மையுடன்
தொட்டபொருள் அத்தனையும்
துங்கமுடன் ஆய்ந்தவையிற்
பட்டபொருள் துணிவுடனும்
பண்புடனும் எடுத்துரைப்பார்
கட்டுவரிவ் வுலகினுக்குக்
கருத்துநிறை இலக்கியங்கள்.

**வி.கந்தவனம்**

## எல்லாம் அவன் செயல்

பிறந்த அருமைப் பிள்ளையென் றாலும்
பெரும்படி நற்பலன் பார்த்து
அறிந்து கொள்வதற் காசைப்படுவர்
அதிசயப் படுவதற் கில்லை!

பிறக்கும் பொழுது கிரக நிலைகள்
பிழையாய் இருந்தன வென்றும்
பிறந்த திகதியும் பெயரின் இலக்கமும்
பேதமாய் இருக்கிறதென்றும்

கல்வியிற் கவினார் முன்னேற் றத்தினைக்
காண்பது கஷ்டமே யென்றும்
கமத் தொழில் கைத்தொழில் கலைத் தொழில் எதிலும்
கனம் பெற முடியா தென்றும்

நல்விவா கத்தையும் செவ்வாய்க் குற்றம்
நாட விடாதென நவின்றும்
அல்லலைக் கொடுக்கும் அவகாலத்தையும்
அளந்தறி வித்தது ஆய்வு.

பெற்றோர் தமக்குப் பெருத்த கவலையைப்
பின்னின சாத்திர பீடம்
சற்றே னுந்தளர் வில்லா யானும்
தலைவன் தாளினைப் பணிந்தேன்

எல்லா மவன் செய லென்றே நினைந்து
எக்கரு மத்திலு மிணைந்தேன்
நல்லோர் மதிக்க நயம்பல பெற்றே
நடக்கின் றேனெனை நம்பி

### புலமை பூத்து வாழுவோம்

செம்மை யாண்டு கொள்ள வேண்டிச்
சிறுவ ராண்டை வைத்தனர்
சிறுவர் நாங்கள் திறமை பூண்டு
சிறப்பி னோடு வாழுவோம்

நம்மைத் தாண்டி நன்மை வேண்டி
நல்வி ழாக்கள் வைத்தனர்
நாளைத் தாண்டி நாம் வளர்ந்து
நாட்டைக் காத்துக் கொள்ளுவோம்

தம்மைக் காட்டி நம்மைக் குட்டித்
தத்து வங்கள் சாற்றினர்
தந்தை தாயைக் குருவை தமது
சக்தியென்றே போற்றுவோம்

பொம்மை வேண்டித் தந்து காலப்
புதுமை தன்னைக் காட்டினர்
பொருளைத் தீண்டிப் புத்தி கூட்டிப்
புலமை பூத்து வாழுவோம்

கொஞ்சும் குழந்தைப் பிள்ளைப் பருவம்
கூடிக் கோலச் சிறுவர் நாம்
கூர்மை நேர்மை வாய்மை கூடிக்
குற்ற மின்றி வாழுவோம்.

விஞ்சும் இளமை முதுமை மேவி
விளங்கப் போகும் பிரசையாம்
வித்தை கற்று சித்தி பெற்று
மேன்மை யுற்றே வாழுவோம்!

### மதங்களை திரையாய் மாற்றாதே

மதுவெறி மாறும் சிறு பொழுதில்
மதவெறி மாறா தொருகணமும்
இதமறி யாதார் இனவெறியும்
இடருள தாகும் இப் புவியில்

மதவெறி இனவெறி மயக்கங்கள்
மருவிய தாலே சில மக்கள்
மதநெறி வரம்பை மீறிநின்றே
மன்பதைக் கின்னல் விளைக்கின்றார்.
மனிதரின் வாழ்க்கை மலர்வதற்கு
மதங்களும் உயர்நிலைப் படியாகும்
புனித மெய் பூக்கும் மதங்களினைப்
புகுத்திடப் பொறுமையைப் பொற்பாய்க் கொள்

மதங்களை மனிதர் ஆக்குகிறார்
மதங்களும் மனிதரை ஆக்குகிறது
இதங்களை இனிதுறப் பேணாமல்
இடர்தனை விலைக்கு வாங்காதே

மதங்களில் மலரும்மணிமொழிகள்
மனித மகான்களின் வாக்காகும்
மதங்களைப் பேதப்படுத்துவது
மகான்களை மதியாத் தன்மையதே

மதங்களைத் திரையாய் மாற்றாதே
மறைந்திருப் பதற்காய்ப் போற்றாதே
இதங்களைத் தருமுயர் சுரபியென
இடையறா நினைத்து ஏத்துதியே

உண்மையை தெய்வமெனப் பேணு
உயிர்களை உயர்வென தினங் காணல்
தண்மையும் வண்மையும் முண்மையுமாய்
சர்வமதத்தையும் தலை கொள்ளு.

2001 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வெளிவந்த கவிஞர் ஐயாத்துரை கவிதை நூலிலிருந்து...

# இது நம்ம ஆளு

## திரை விமர்சனம்



கன்னித்தீவு கதை போல் ஒரு முடிவில்லாமல் நீண்ட வருடங்களாக சென்றது இது நம்ம ஆளு படப்பிடிப்பு. ஆனால், ஒரு வழியாக எல்லோரின் உழைப்பிற்கும் பலனாக உலகம் முழுவதும் இப்படம் வெளிவந்துள்ளது.

தொடர் வெற்றிப்படங்களை கொடுக்கும் பாண்டிராஜ் இயக்கத்தில் சிம்புநடிக்கும் படம் என்பதை விட, பிரிந்த காதலர்கள் படத்தில் இணைந்தார்கள் என்று சிம்பு- நயன்தாரா இப்படத்தில் நடிப்பதே பலரின் எதிர்ப்பார்ப்பிற்கு காரணம், இந்த எதிர்பார்ப்பை இது நம்ம ஆளு பூர்த்தி செய்ததா? பார்க்கலாம்.

**கதைக்களம்**

ஐடி பாய் சிவாவாக சிம்பு, அவருடைய சகோ சூரி ஆடம்பர வாழ்க்கையுடன் சந்தோஷமாக அரட்டை, கலாட்டா என செல்ல, சிம்புவிற்கு நயன்தாராவுடன் நிச்சயதார்த்தம் நடக்கின்றது.

நயன்தாரா சிம்புடனான முதல் மீட்டிங்கிலேயே ஆண்ட்ரியா காதல் பற்றி கேட்கிறார், சிம்புவும் அதிர்ச்சியுடன் இந்த இடம் செட் ஆகாது என்று கிளம்ப, நயன்தாரா திருமணத்திற்கு ஓகே சொல்கிறார். அதன் பின் மெல்ல ஆண்ட்ரியா பற்றி கேட்கிறார்.

சிம்புவும் ப்ளாஷ்பேகை ஓபன் செய்ய, ஆண்ட்ரியாவுடன் ஒரு அழகிய காதல், எப்போதும் போல் ஆரம்பத்தில் சந்தோஷமாக செல்ல பின் ஒரு சண்டையில் பிரேக் அப், என்று ப்ளாஷ்பேக்கை முடிக்கின்றார். சிம்புவிற்கே தெரியாமல் சூரி நயன்தாராவை நோட்டமிட, அவருக்கு ஒரு காதலர் இருப்பதாக தெரிய வருகிறது.

இதைத் தொடர்ந்து இருவருக்கும் ஒரு கட்டத்தில் சண்டைவர, பிறகு அம்மு, செல்லம், சாரி என மீண்டும் இணைகிறார்கள், இவர்கள் இணைந்த நேரத்தில் சிம்பு-நயன்தாரா குடும்பத்தினருக்கிடையே சண்டைவர இந்த திருமணம்நிற்கும்நிலைமை வருகிறது. பிறகு எப்படி இவர்கள் இணைந்தார்கள் என்பதை 2.15 மணி நேரம் கலகலப்பாக கூறியிருக்கிறார் பாண்டிராஜ்.

**படத்தை பற்றிய அலசல்**

சிம்பு இஸ் பேக் என்று தான் சொல்ல வேண்டும், அப்பாடா ஒரு வழியா விட்ட இடத்தை பிடித்துவிட்டார், தனக்கே உரிய துறுதுறு நடிப்பால் எல்லோருக்கும் பிடித்தது போல் கலக்கியுள்ளார்.

நயன்தாராவை காதலிக்கும் இடத்தில் ஓ இப்படி தான் சிம்பு லவ் பண்ணாரா என்று நமக்கே எண்ண தோன்றுகின்றது.

அதிலும் எத்தனை பெரிய ஹீரோ செம்ம பல்ப் வாங்குகிறார் சூரியிடம் பல இடங்களில். மேலும் அவரே அவரை எனக்கு நடிக்க தெரியாதுங்க என்று சொல்லி கலாய்ப்பது எல்லாம் சுப்பர் சார்.



அனைத்திற்கு மேல் விண்ணைத் தாண்டி வருவாயா படத்திற்கு பிறகு சிம்புவிற்கு பெண் ரசிகைகள் இதில் அதிகமாவார்கள்.

நயன்தாரா எப்படி இவ்வளவு அழகாக இருக்கிறார் என்று தெரியவில்லை. முதலில் இப்படி ஒரு கதாபாத்திரத்தில் தைரியமாக இவர் நடிக்க சம்மதித்ததற்கே ஹேட்ஸ் ஆப். ஏனெனில் பல காட்சிகள் ரியல் லைப் சம்மந்தப்பட்டவை.

நயன்தாரா நடிக்க கூட வேண்டாம், வந்தாலே போதும் என்ற மனநிலையில் இதில் செம்ம ட்ரீட் கொடுத்துள்ளார் ரசிகர்களுக்கு.

சூரி எப்படிங்க ஐடி பாய், போங்க காமெடி பண்ணாதீங்கள் என்று கூறியவர்கள் வாய் அடைத்துவிட்டனர். சிம்புவை பல இடங்களில் கவுண்டர் கொடுக் கும் கதாபாத்திரம், அவர் பேசும் போன் டாக்கிற்கு இவர் கொடுக்கும் கவுண்டர் வசனங்களுக்கு தியேட்டரில் விசில் சத்தம் பறக் கின்றது.

சந்தானம் கெஸ்ட் ரோல் தான் என்றாலும் கலக்கிவிடுகிறார். தனக்கான கதாபாத்திரத்தை சிறப்பாக செய்துள்ளார். ஆண்ட்ரியா முதன் முறையா நல்ல நடிச்சுருக்காங்க... Note This Point நடிச்சுருக்காங்க.

பாலசுப்ரமணியனின் ஒளிப்பதிவு கண்களுக்கு செம்ம விருந்து. இதைவிட சிம்பு, நயன்தாராவையும் இத்தனை அழகாக வேறு யாராலும் காட்ட முடியாது.

குரளரசன் தமிழ் சினிமாவிற்கு நல்ல வரவேற்பு, பாடல்கள் ஏற்கனவே ஹிட் அடிக்க, பின்னணி இசையிலும் கலக்கியுள்ளார். அதிலும் காதல் காட்சிகளுக்கு கொஞ்சம் மெனக்கெடுத்துள்ளார், பின்ன சிம்பு தம்பியாச்சே.

**க்ளாப்ஸ்**

சிம்பு-நயன்தாரா கெமிஸ்ட்ரி, பலரையும் பொறாமை பட வைக்கும். படம் முழுவதும் காதல் நிரம்பி வழிகிறது.

சூரி படம் முழுவதும் தன் ஒன் லைன் காமெடியில் அதகளம் செய்துள்ளார். சிம்புவை கலாய்க்கும் இடத்திலும் சரி, நயன்தாராவிடம் மாட்டிகிட்டு முழிக்கும் இடத்திலும் சரி செம்ம அப்லாஸ் அள்ளுகிறார்.

பாலசுப்ரமணியனின் கலர்புல் ஒளிப்பளிவு, இதையெல்லாம் விட வசனம்.

பாண்டிராஜ் இதில் PHD முடித்திருப்பார் போல, வசனம் என்ற ஏரியாவில் இவரை அடித்துக் கொள்ள ஆளே இல்லை. மேலும் இத்தனை வருடம் கழித்து வந்தாலும் படம் ப்ரஸ்ஸாகவே உள்ளது.

பிறகு அவ்வப்போது படத்தில் வரும் சர்ப்ரைஸ் காட்சிகள்.

**பல்ப்ஸ்**

படத்தில் கதை இல்லை என்று பாண்டிராஜ் முன்பே சொன்னாலும், கொஞ்சம் கதை என்று இருந்திருக்கலாம்.

ஒரு சில கதாபாத்திரங்களை நம்பியே கதை நகருவது. படத்தின் இரண்டாம் பாதி கொஞ்சம் டல் அடிக்கின்றது.

மொத்தத்தில் இது நம்ம ஆளு ஒரே வரியில் சொல்ல வேண்டுமென்றால் சிம்பு இஸ் பேக், காதலர்களுக்கு ரசிகர்களுக்கும் இது நம்ம படம்.






# 2016 ஐ.பி.எல்.கிண்ணம் யாருக்கு?

## பெங்களூர்–ஹைதராபாத் இன்று பலப்பரீட்சை




ஜபிஎல் கிரிக்கெட் போட்டியின் 2ஆவது தகுதிச்சுற்றில் சன்ரைஸர்ஸ் ஹைதராபாத் அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் குஜராத் லயன்ஸ தோற்கடித்து இறுதிச்சுற்றுக்கு முன்னேறியது. பெங்களூரில் இன்று இரவு ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் இறுதி ஆட்டத்தில் பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணியுடன் மோதுகிறது ஹைதராபாத் டேவிட் வார்னர் 58 பந்துகளில் 3 சிக்ஸர், 11 பவுண்டரிகளுடன் ஆட்டமிழக்காமல் 93 ரன்கள் குவித்து ஹைதராபாத்துக்கு வெற்றி தேடித்தந்தார்.

டில்லியில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஹைதராபாத் அணியில் முஸ்தாபிஜுர் ரஹ்மான் காயம் காரணமாக இடம்பெறவில்லை. அவருக்குப் பதிலாக டிரென்ட் போல்ட் சேர்க்கப் பட்டார்.



நாணயச் சுழற்சியில் வென்ற ஹைதராபாத் கப்டன் வார்னர் முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார். இதையடுத்து பட் செய்த குஜராத் அணியில் மக்கல்லத்துடன் புதிய தொடக்க வீரராக ஏகலைவ துவிவேதி களமிறங்கினார்.

துவிவேதி 5 ரன்கள் மட்டுமே எடுத்த நிலையில், புவனேஸ்வர் குமார் வீசிய முதல் ஓவரிலேயே ஆட்டமிழந்தார். பின்னர் வந்த கப்டன் ரெய்னா ஒரு ரன் எடுத்த நிலையில் போல்ட் பந்துவீச்சில் வீழ்ந்தார்.

இதையடுத்து மக்கல்லத்துடன் இணைந்தார் தினேஷ் கார்த்திக். இந்த ஜோடி 44 ரன்கள் சேர்த்தது. ஒரு புறம் மக்கல்லம் தடுமாற, மறுமுனையில் வேகமாக ரன் சேர்த்த கார்த்திக், போல்ட்டின் துல்லியமான "த்ரோ"வில் ரன் அவுட்டானார். அவர் 19 பந்துகளில் 1 சிக்ஸர், 4 பவுண்டரிகளுடன் 26 ரன்கள் எடுத்தார்.

இதையடுத்து ஆரோன் ஃபிஞ்ச் களமிறங்க, மக்கல்லம் 29 பந்துகளில் 32 ரன்கள் சேர்த்து ஆட்டமிழந்தார். பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட டுவைன் ஸ்மித் ஒரு ரன்னில் நடையைக் கட்ட, ஜடேஜா களம்புகுந்தார்.

ஒருபுறம் விக்கெட் சரிந்தாலும், மறுமுனையில் அசத்தலாக ஆடிய பிஞ்ச், ஹென்ரிக்ஸ் வீசிய 14 ஆவது ஓவரில் ஒரு சிக்ஸர், இரு பவுண்டரிகளை விரட்டினார். தொடர்ந்து வேகம் காட்டிய அவர், பென் கட்டிங் ஓவரில் பவுண்டரியை விளாசி 31 பந்துகளில் அரை சதம் கண்டார். எனினும் அடுத்த பந்திலேயே அவர் போல்டானார். அவர் 32 பந்துகளில் 2 சிக்ஸர், 7 பவுண்டரிகளுடன் 50 ரன்கள் எடுத்தார். கடைசிக் கட்டத்தில் பிராவோ 10 பந்துகளில் 20 ரன்கள் சேர்த்து ஆட்டமிழக்க, 20 ஓவர்களில் 7 விக்கெட்




இழப்புக்கு 162 ரன்கள் குவித்தது குஜராத். ஜடேஜா 15 பந்துகளில் 19, தவல் குல்கர்னி 3 ரன்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.ஹைதராபாத் தரப்பில் புவனேஸ்வர் குமார் 4 ஓவர்களில் 27 ரன்களைக் கொடுத்து 2 விக்கெட்டுகளையும், பென் கட்டிங் 3 ஓவர்களில் 20 ரன்களைக் கொடுத்து 2 விக்கெட்டுகளையும் சாய்த்தனர்.

வார்னர் 93*: பின்னர் ஆடிய ஹைதராபாத் அணியில் ஷிகர் தவன் 0, மோசஸ் ஹென்ரிக்ஸ் 11, யுவராஜ் சிங் 8, தீபக் ஹூடா 4, பென் கட்டிங் 8 ரன்களில் ஆட்டமிழந்தனர். ஆனால் மறுமுனையில் தனிநபராக வெளுத்து வாங்கிய கப்டன் டேவிட் வோர்னர் 35 பந்துகளில் அரை சதம் கண்டார்.

இதன்பிறகு நமன் ஓஜா 10 ரன்களில் நடையைக் கட்ட, பிபுல் சர்மா களம்புகுந்தார். அவர் வந்த வேகத்தில் 3 சிக்ஸர் களை விளாசினார். மறுமு னையில் அசத்தலாக ஆடிய வோர்னர், பிரவீண் குமார் வீசிய கடைசி ஓவரின் முதல் பந்தில் பவுண்டரியும், அடுத்த பந்தில் ஒரு ரன்னும் எடுக்க, 19.2 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 163 ரன்கள் குவித்து வெற்றி கண்டது ஹைதராபாத். டேவிட் வார்னர் 58 பந்துகளில் 93, பிபுல் சர்மா 11 பந்துக ளில் 3 சிக்ஸர்களுடன் 27 ரன்கள் குவித்து ஆட்டமிழக் காமல் இருந்தனர். குஜராத் தரப்பில் டுவைன் பிராவோ, கௌஷிக் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர். டேவிட் வோர்னர் ஆட்டநாயகனாக தேர்வு செய்யப்பட்டார்.

### டேவிட் வார்னர்-779

இந்த சீசனில் இதுவரை 16 ஆட்டங்களில் விளையாடியுள்ள டேவிட் வோர்னர் 8 அரை சதங்களுடன் 779 ரன்கள் குவித்துள்ளார்.



இதன்மூலம் இந்த சீசனில் அதிக ரன் குவித்தவ ர்கள் வரிசையில் 2ஆவது இடத்தைப் பிடித்துள்ள வோர்னர். ஐபிஎல் வரலாற்றில் ஒரு சீசனில் 700 அல்லது அதற்கு மேற்பட்ட ரன்களைக் குவித்த 4 ஆவது வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். கோலி, கெயில், மைக் ஹசி ஆகியோர் மற்ற மூவர். இதில் கெயில் இரு முறை 700 ரன்களுக்கு மேல் குவித்துள்ளார்.

இதுதவிர ஐபிஎல் வரலாற்றில் இலக்கை துரத்துகிறபோது (ஒரு தொடரில்) அதிக ரன் குவித்தவர்கள் வரிசையிலும் முதலிடத்தைப் பிடித்துள்ளார் வோர்னர். இந்த சீசனில் இலக்கை துரத்தியபோது அவர் 468 ரன்கள் குவித்துள்ளார். முன்னதாக 2014 சீசனில் ராபின் உத்தப்பா 457 ரன்கள் குவித்ததே சாதனையாக இருந்தது.

### முதன் முறை

தகுதிச் சுற்று 2 இல் குஜராத் அணியை வீழ்த்திய ஐதராபாத் அணி ஐ.பி.எல். தொடரில் முதன்முறையாக இறுதிப்போட்டிக்கு முன்னேறி யது. இதற்கு முன் 2013 இல் எலிமினேட்டர் போட்டிக்கு தகுதி பெற்றது. துடுப்பாட்டத்தில் சொத ப்பிய ஐதராபாத் அணியின் ஷிகர் தவான் ருவன்ரி-20 அரங்கில் 61 போட்டிகளுக்கு பின் டக்-அவுட் ஆனார். கடைசியாக இவர் 2014 இல் வெஸ்ட் இண்டீஸ் எதிரான போட்டியில் ஒரு ஓட்டங்கள் கூட எடுக்காமல் அவுட்டானார். (கு)





# facebook



## காதல் தோல்வி

திருமண அழைப்பிதழை மேசையில் வைத்துவிட்டு, போயிட்டு வாறேன்டி சிவா காத்திருப்பான் என்று சொல்லிவிட்டு பறப்பாய் பறந்தாள் சித்திரா. அவளை வழி அனுப்ப ஒரு வார்த்தை கூட பேசாது மெளனமாய் இருந்தேன்.

இரண்டு மாதமாய் என்னோடு இந்த மெளனம், இப்படியே ஒரு வித தனிமை குடிகொண்டது காரணம் எனக்கு மட்டும் தெரிந்த உண்மை. என்னோடு, என்மனதோடு காதலனாய், காவலனாய் வாழ்ந்த சிவா சித்திராவை காதலிக்கிறான் என்ற செய்தி எனக்குள் இருந்த துடிப்பு, சுறுசுறுப்பு எல்லாத்தையும் பறிச்சுக்கொண்டு போன மாதிரி ஒரு உணர்வு. அவன் எனக்கு என்று எண்ணிய நான் ஏனோ அவனுக்கு நான் தானா என்று பார்க்க மறந்துவிட்டேன்.

என்ர ஒரே ஒரு சிநேகிதி சித்திரா. அவளிற்கு கூட தெரியாமல் எல்லோ அவன் எனக்குள் வாழ்ந்தவன். இரண்டு மாசத்திற்கு முதல் அவன் சித்திராவிற்கு தன் காதலைத்தெரிவிக்கும் படி என்னிடமே வந்து தூது சொன்னான் என்ர உயிரை யாரோ பறிச்ச மாதிரி தெரிஞ்சுது. சிரித்து சிரித்து கலா கலா என்று பேசுவானே. நீ வா போ என்று என்னோடு தடையின்றி பேசுவான், இந்த உரிமையை நான் யாருக்கும் இதுவரை கொடுத்ததில்லையே. சித்திராவைவிட என்னோடு தான் அவன் அதிகம் பேசுவான்.

சித்திராவை கூட வாங்கோ, போங்கோ என்று அந்நியமாய் கூப்பிடுவானே. என்னோடு தான் அத்தனை நெருக்கம். அதனால் தான் அவன் எனக்குள் வந்தான். ஆனால் சித்திராவிற்காய் தான் அவன் என்னோடு நெருக்கமானான் என்பதை, அவன் காதலிற்கு தூது செல்லச்சொன்ன போது தான் நான் தெரிந்து கொண்டேன். சித்திரா கூட அவன்ர காதலை மறுக்கவில்லை. அவன் சொன்னவுடன் எதிர்பார்த்திருந்தவள் போல சம்மதம் சொல்லிவிட்டாள்.

ஒரு வேளை இது தான் உண்மைக்காதலா தெரியவில்லை. சிவாவின் உணர்வு சித்திராவிற்கு இருந்தது. ஏன் என்ர உணர்வு சிவாவிற்கு வரவில்லை காரணம் தெரியவில்லை, அதற்காய் அவன் உணராததால் என் காதல் பொய்யென்று எப்படிச்சொல்ல முடியும். கொப்பி கொப்பியாய் 2 வருசம் அவனுக்காய் கவிதை என்ற பெயரில நான் எழுதியவற்றையும், அவன்ர பெயரையும் தேடித்தேடி அழிச்சனே என்ர மனம் அப்ப என்னை அறியாமல் அழுதிச்சே இதெல்லாம் பொய்யா?


என் நண்பிக்காய் இவற்றை அழிக்க தான் என்னால் முடிந்தது. மனசில எப்பவும் அவன் இருப்பான் என்று தான் நினைக்கிறன். ஒரு வேளை இதை யாருக்கும் முதலில சொல்லியிருந்தால் சிவாவை நான் இழந்திருக்க மாட்டேனோ என்று நினைக்கிறன். அவன் என்னை காதலிக்காட்டால் என்ன நான் காதலிச்சது அவனை. அந்த நிம்மதி போதும் எனக்கு.

ஆனால் அவனும் சுயநலக்காரனா இதுவரை எப்படிப்பழகினவன். இப்ப நலம் கூட விசாரிக்க சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. சந்தர்ப்பம் கிடைக்கவில்லையா இல்லை அவன் தவிர்க்கிறானா தெரியவில்லை. இப்ப கூட சித்திராவின் கல்யாணத்திற்குரிய வேலைகளை செய்யத்தான் சித்திரா வீட்டை வந்தன். ஆனா ஆனா இது சிவாவின் கல்யாணமும் கூட. அவர்கள் காதல் வென்றிச்சா? என் காதல் தோத்ததா? காதலின் வெற்றி என்றால் என்ன கல்யாணத்தில் முடிவதா? அப்படி என்றால் நான் தோத்தவள் தானே? தோற்றது என் நண்பியிடம் என்ற நினைவில் அவனது திருமண வேலையில் இறங்குகிறேன்.


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 734

Search for people, places and things Nagendram Home

### மதுசன்





### கஜலக்சி




### சர்மிளா



### விதுசன்




### கஜலக்சன்



### ராகுலன் பாலா



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 35

## உள ஆரோக்கியம் நோக்கிய சிறுகதை குட்டான் என்ற குருத்து

நேரம் இரவு எட்டுமணியை நெருங்கிக்கொண்டிருந்தது. தெரு சந்தடி குறைந்து அமைதியாக இருந்து கொண்டிருந்தது. அந்த மங்கிய ஒளியிலே அங்கங்கே மறைந்தும் மறையாமலும் மனித உருவங்கள் நடமாடுவது தெரிந்தது. அவசரம் அவசரமாக நடந்து கொண்டிருக்கின்றேன். ஏன் இத்தனை அவசரம்? எனக்கே காரணம் புரியவில்லை.

அந்த அமைதியை குலைத்துக் கொண்டு திடீரென்று "வசந்த்' என்று என்னை அழைக்கும் குரல் கேட்டது. திரும்பிப்பார்த்தேன். யாரும் இல்லை. மீண்டும் நடக்க முற்பட்டேன். திரும்பவும் அதே அழைப்புக் குரல். சுற்றும் முற்றும் பார்த்தேன் யாருமே இல்லை.

எனக்கு ஆச்சரியமாகவும் இருக்கவில்லை. அந்தக் குரலுக்குரியவனை எனக்கு நன்கு தெரியும். சற்று ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தால் அவனது முழுமையான முகத்தைக் கூட என் மனக் கண்முன்னே கொண்டு வர முடியும்.

இத்தனை வருடங்கள் கடந்தும் என்றும் மார்க்கண்டேயன் போல அவனது முகம் இளமையாக, சாந்தமாக ஆனால் ஆழமான பார்வையுடன் என்றும் தென்படும். தலைக்கு எண்ணெய்வைத்து பக்கமாக சீவி இருப்பான். அவன் இப்பொழுது இந்த நேரத்தில் என்னை அழைக்கக் காரணம் என்ன? எங்கிருந்து அழைக்கிறான்.

அவனை எனக்கு பல வருடங்களாக தெரியும். எட்டாம் ஆண்டுவரை என்னுடன் ஒரே வகுப்பிலே ஒன்றாகவே இருந்து படித்து வந்தான். அவனது உண்மையான பெயர் குருகுலன். இந்தப் பெயர் பலருக்குத் தெரியாது. அவனை பொதுவாக "குட்டான்" என்று பட்டப்பெயர் சொல்லித் தான் அழைப்பார்கள். அதனையும் அவன் தனது பெயராக ஏற்றிருந்ததாலோ என்னவோ அவ்வாறு பட்டப்பெயர் சொல்லும் பொழுது அவன் கவலைப்பட்டதாகவோ கோபப்பட்டதாகவோ காட்டிக் கொள்வதில்லை.

யாருடனும் அவன் அதிகம் பழகுவதில்லை என்பதிலும் பார்க்க அவனுடன் யாரும் அதிகம் பழகுவதில்லை. என்பதே கூடப் பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன். இதற்கு காரணம் என்ன? சிலர் அவன் ஒரு மாதிரி"என்று கூடச் சொல்வார்கள். தவறாது பாடசாலைக்கு வருவான் . அவனிடம் கேட்கப்படும் கேள்விகளுக்கெல்லாம் விரிவான பதில் சொல்ல முற்படுவான். அதனை முற்றாகக் கேட்கும் பொறுமை பலருக்கு இருப்பதில்லை. பரீட்சைகளில் அதிக புள்ளிகள் அவனுக்கு கிடைப்பதில்லை. அவனிடம் திறமை இல்லை என்று சொல்லி விட முடியாது.

வாழ்க்கையில் அடிபட்ட உலக அனுபவமும் தன்னம்பிக்கையும் வித்தியாசமான சிந்தனா சக்தியும் அவனுக்கு நிறையவே இருந்தன. யுத்தத்தினால் அவன் தனது தந்தையை இழந்திருந்தாலும் தாயின் அரவணைப்பும் வழிகாட்டலும் அவனுக்கு நம்பிக்கையை கொடுத்துக் கொண்டிருந்தன.

அவனது சிந்தனைகள் உண்மையிலே வித்தியாசமானவை. வாடும் புற்களுக்காகக் கூட வேதனைப்படுவான். தென்னங்கன்றுகளின் கருக்களை இளநீர் என்று பெயர் வைத்து அதனை அறுத்துக்குடித்து விட்டு நாம் நட்டு நீருற்றி வளர்த்த தென்னை இளநீரைத் தந்து தமக்கு நன்றிக்கடன் செலுத்துகிறது என்று வியாக்கியானம் சொல்லும் மனிதர்களை நினைத்து கவலைப்படுவான். அவனுடன் பேசிக் கொண்டிருந்தால் எனக்கு நேரம் போவதே தெரிவதில்லை. இவனை மற்றைய மாணவர்கள் ஒதுக்கிவைத்து கேலி செய்ய காரணம் என்ன?

அவனது ஏழ்மையான தோற்றமா? வித்தியாசமான சிந்தனை ஓட்டமும் பேச்சுமா? அல்லது அவனை கேலி செய்வது மற்றவர்களுக்கு ஒரு பொழுது போக்காக இருந்ததா? அல்லது ஏனையோர் அவனை தம்மிலும் குறைவானவன் என்று எண்ணிக் கொண்டார்களா? என்பது போன்ற கேள்விகளுக்கு இன்றுவரை எனக்கு விடை தெரியாது.

சில சமயம் அவன் தனிமையிலிருந்து எதையாவது சிந்தித்துத் கொண்டிருப்பான். "டேய் அங்கை பாரெடா குட்டான் தவம் செய்கிறான்" என்று பலரும் பேசிக் கொள்வார்கள். ஆனால் அது அவனின் சிந்தனை ஓட்டத்தை குழப்புவதில்லை.

எனக்கு கவலையான வேதனையான நிலைமைகள் தோன்றும் போதெல்லாம் அவனிடம் பேசுவேன். சின்னச் சின்ன வார்த்தைகளினால் என்னென்னவோ எல்லாம் சொல்லுவான். கேட்பான். அவை ஒன்றும் இப்பொழுது எனக்கு ஞாபகம் இல்லை.

ஆனால் அவனது வார்த்தைகள் மனதுக்கு ஆறுதலைக் கொடுக்கும். இருந்தபொழுதும் அவனுடன் நெருங்கிப் பழகும் பொழுது என் அடிமனதிலே இனம் புரியாத ஒரு பயம் இருந்து கொண்டிருந்தது. சக மாணவர்கள் என்னையும் அவனது பட்டியலில் சேர்த்து எனக்கும் ஒரு பட்டம் சூட்டி விடுவார்களோ என்ற மனப்பயம் அடிக்கடி என் மனதிலே எழும்.

அன்றொருநாள் நான் பயந்தது நடந்து விட்டது. எனக்கு "குட்டானின் பிரதம சிஷ்யன்" என்ற பட்டம் வழங்கப்பட்டு அந்தப் பட்டம் மாணவர்கள் பலரினதும் வரவேற்பையும் பெற்றது. இது எனது மனதிலே பாதிப்பை ஏற்படுத்தியது. எப்படியாவது அவனிடம் பழகுவதை குறைத்துக் கொள்ள வேண்டும் என்று தீர்மானித்தேன். குட்டானைப் போல எனக்கு என் புதிய பட்டத்தை ஏற்றுக் கொள்ளும் அல்லது அக்கறைப்படாது இருக்கும் மனப்பக்குவம் இருக்கவில்லை. மனதளவில் நான் அவனளவு பலமானவனும் இல்லை.

குட்டானை புறக்கணிப்பதும் எனக்கு பெரும் மனப் போராட்டமாக இருந்தது. அடிக்கடி "வசந்த் "வசந்த்" என்று என்னிடம் வரும் அவனை எப்படி புறக்கணிப்பது? அவனுக்கு வேறு நண்பர்கள் யாருமே இல்லை. எனக்கு கஷ்டம் வரும்போதெல்லாம் எனது வலது கரமாக இருந்து என்னை தூக்கி நிறுத்தியவன்.

இறந்து போன தனது தந்தையின் விருப்பத்திற்கமைய வாழ்வில் உயர வேண்டும் என்று உண்மையாக போராடிக் கொண்டிருக்கும் ஒரு போராளி. வாழ்விலே பல கஷ்டங்களை அனுபவித்து மனம் புண்பட்டு அதனூடே தலைநிமிர முயலும் ஒரு பண்பட்ட மென்மையான குண இயல்புகள் கொண்டவன். இவனை நான் புறக்கணிப்பது நியாயமாகுமா?

அந்த நேரத்திலே எனக்கு தெரியாது அடுத்த நாள் அவன் இறந்துவிடுவானென்று. மறுநாள் அவன் உண்மையிலேயே இறந்து போனான். அன்று ஒரு புதன்கிழமை. வழமை போல பாடசாலைக்கு வந்திருந்தான். அன்று அவனின் முகத்திலே உற்சாகம் தெரியவில்லை. ஏன் அப்படி இருக்கிறான் என்று கேட்க நினைத்தேன். ஆனால் கேட்கவில்லை. மீண்டும் அவனைப் பார்த்த பொழுது மேசையில் கை வைத்து குப்புறப்படுத்திருந்தான். இடைவேளைக்கும் எழுந்து வரவில்லை. நானும் அவனுடன் பேசவில்லை. மனம் ஏனோ பாரமாக இருந்தது. அவனது அருகில் சென்று தொட்டுப் பார்த்தேன். உடல் அனலாக கொதித்துக் கொண்டிருந்தது. எழுந்து என் முகத்தை பார்த்தான்.

அந்த பார்வையின் அர்த்தம் எனக்கு புரியவில்லை . குடிப்பதற்கு தண்ணீர் கேட்டான். வழக்கமாக என்னிடம் தண்ணீர் கேட்டு வாங்கி குடிப்பது அவனது பழக்கம். ஆனால் அன்று அவன் தண்ணீர் கேட்ட விதம் வித்தியாசமாக இருந்தது. அன்று தான் அவனுக்கு கடைசித் தடவையாக நான் தண்ணீர் கொடுக்கிறேன் என்று தெரியாமலே கொடுத்தேன் குடித்தான்.

காய்ச்சல் காரணமாக அன்று முழுவதும் சோர்வுடனேயே காணப்பட்டான். பாடசாலை முடிந்ததும் அவன் நடந்து வீடு செல்வது வழக்கம். அந்த அனல் பறக்கும் வெயிலினூடே அவனால் நடந்து வீடு செல்ல முடியாதென்பது என் இதயத்திற்கு புரிந்திருந்தது.

அப்பா என்னை சைக்கிளில் அழைத்துச் செல்வதற்காக வந்திருந்தார். குட்டானையும் கொண்டு போய் வீட்டிலே இறக்கி விடும் படி அப்பாவிடம் கேட்டிருந்தால் அவர் கட்டாயம் அதைச் செய்திருப்பார். ஆனால் நான் கேட்கவில்லை ஏன்? அவனிடமிருந்து விலகி இருக்க நான் நினைத்தது தான் இதற்கு காரணமாயிருக்குமோ? நான் அப்பாவின் சைக்கிளில் ஏறிச் செல்லுமுன் மீண்டும் ஒருமுறை குட்டானைப் பார்த்தேன்.

அவன் சோர்வுடன் என்னையே பார்த்துக் கொண்டிருந்தான். அந்தப் பார்வையால் அவன் என்னை ஏதோ கேட்பது போன்றிருந்தது. ஆனால் நான் எதுவும் பேசாமல் அப்பாவுடன் சென்று விட்டேன்." இயலாமல் இருக்கிறது என்னைக் கூட்டிக்கொண்டு போய் வீட்டில் விட்டு விடுவாயா? என்று கேட்டிருப்பானோ?

அதன் பின்னர் அவன் தனியே கடும் வெயிலினூடே வீடு நோக்கி நடந்து செல்ல முற்பட்டதும் இடைநடுவில் மயக்கமுற்று விழுந்ததும் வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டதும் மரணமானதும் பிறர் கூறித்தான் அறிந்து கொண்டேன்..ந்த மரணத்திற்கு காரணம் யார்?குட்டான் என்ற இந்த குருத்து கருகிப்போனது ஏன்?

அப்பாவையும் அழைத்துக் கொண்டு அவனுக்கு இறுதி மரியாதை செய்ய சென்றிருந்தேன். அவனின் அம்மா கதறி அழும் காட்சி என்மனதை உலுக்கியது. சக மாணவர்களும் அங்கே நின்று கொண்டிருந்தார்கள். அவர்களும் உண்மையிலேயே அழுதார்கள். ஆனால் ஏனோ எனக்கு அழுகையே வரவில்லை. அன்று யாரும் அவனை குட்டான் என்று சொல்லவில்லை. கண்ணீர் அஞ்சலிகளில் கூட "குருகுலன்" என்ற அவனது உண்மையான பெயரே எழுதப்பட்டிருந் தது. அன்று தான் அவனது பெயர் பலருக்கு தெரியவந்தது. ஒவ்வொரு உயிரின் முடிவிலும் இத்தனை சோகங்கள் இருக்கும் என்று அன்று தான் எனக்கு முதன் முதலில் தெரியவந்தது.

நான் குற்றவாளியா என்று என் மனம் என்னை மீண்டும் மீண்டும் கேட்டுக் கொள்ளும். "வசந்த்" என்று குட்டான் அழைக்கும் குரல் அடிக்கடி எனக்கு கேட்டுக் கொள்ளும். அமைதியாக ஒரு இடத்தில் இருந்து சிந்திப்பதற்கு மனம் விருப்பப்படும். குட்டானைப் போன்று புதிய சிந்தனைகள் தோன்றும். என்னை "ஒரு மாதிரி" என்று பலரும் பேசிக் கொள்கிறார்கள். ஆனால் நானும் குட்டானைப் போல் அது பற்றி இப்பொழுது அதிகம் அக்கறைப்பட்டுக் கொள்வதில்லை.

பிறரை கேலி செய்து மகிழும் கலாசாரத்திலிருந்து என்று மீட்சி பெறுவோம்.

ஒருவனை துயரப்படுத்தி அந்த சலசலப்பை பொழுது போக்காகவும் மற்றவர்கள் மகிழ்ச்சி அடையும் களமாகவும் பாவிப்பது மனிதத்துவம் ஆகாது.

இந்த சிறுகதை மன ஆரோக்கியத்திலும் ஒருவனின் சிந்தனையோட்டத்திலும் ஒரு பயனுடைய மாற்றத்தை ஏற்படுத்தும் என்று நீங்கள் கருதினால் **A** என்றும் பயனுடைய மாற்றத்தை ஏற்படுத்தாது என்று கருதினால் **B** என்றும் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும் என்று கருதினால் **C** என்றும் **Type** செய்து

**076 836 3858**

என்ற தொலைபேசி இலக்கத்திற்கு SMS செய்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**Dr.சி.சிவன்சுதன்**
**பொது வைத்திய நிபுணர்**

மருத்துவம், ஆரோக்கியம், சுற்றாடல், பாதுகாப்பு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் இந்த வைத்தியச்சுடர் சம்பந்தமானஉங்கள் அபிப்பிராயங்களையும் **076 836 3858** என்ற இலக்கத்திற்கு **SMS** செய்துவிடுங்கள்.